
வெள்ளிக்கிழமைகளில் உங்கள் கரங்களில்... வார இதழாக மக்கள் கருத்துக்களுடன்!

Registered as a Newspaper in Srilanka

# முஸ்லிம் குரல்

Muslim Kural صوت المسلم මුස්ලිම් කුරල

28, நவம்பர் 2003 வெள்ளிக்கிழமை | 03 ஷவ்வால், 1424 | சுவடு- 25



# பொதுத் தேர்தல்: யார் வெற்றி பெறுவர்?

சந்திரிகா - ரணில் அதிகார யுத்தம் அரசியல் அரங்கில் ஏலவே வெடித்தெழும்பி விட்டது. தொடரும் அதிகாரச் சண்டையில் இரு தரப்புமே ஆட்டம் கண்டு வருகிறது. பாராளுமன்ற உறுப்பினர்களில் கணிசமானோர் இச்சண்டையினால் முழிபிதுங்கி நிற்கின்றனர். அடுத்த தேர்தலில் தாங்கள் அதிகாரத்திற்கு வரமுடியுமா என்ற அச்சம் அவர்களைப் பிடித்து ஆட்டத் தொடங்கி விட்டது.

சுதந்திரத்திற்கு பின்னான இலங்கையின் அரசியலில் ஐக்கிய தேசியக் கட்சியும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியும் இணக்கப் பாட்டிற்கு வந்து சமரசம் செய்து கொண்ட வரலாறே இல்லை. ஆகவே இன்றுள்ள நிலையில் இரு தரப்பும் தேசிய அரசு என்ற சமரச உடன்பாட்டிற்கு வருவர் என எதிர்பார்ப்பது வெறும் கனவேயாகும்.

கடந்த மூன்று வாரங்களாக கொழும்பு அரசியல் நிலைமையை மதிப்பிடும்போது திடீர் பொதுத் தேர்தலுக்கான வாய்ப்பே அதிகமுள்ளது. பாராளுமன்றத்தில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு பெரும்பான்மை இருப்பினும் அப்பலம் சந்திரிகாவின் நிறைவேற்று அதிகாரத்தின் முன் செல்லாக்காசாகி விட்டது.

ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்திலுள்ள பாராளுமன்ற உறுப்பினர்களை வளைத்துப் போடும் சந்திரிக்காவின் வியூகம் தோல்வியடையும் அடுத்த கணமே, சந்திரிகா பாராளுமன்றத்தைக் கலைத்து தேர்தலுக்கு சென்றேயாகவேண்டும். இதனைத் தவிர சந்திரிகாவுக்கு எந்த மாற்று வழியும் இப்போதைக்கு இல்லை.

இந்நிலையில் ரணில் தேர்தலை எதிர்கொள்வதற்கு தயாராகி விட்டார். ஐக்கிய தேசியக் கட்சியின் தென்னிலங்கை வாக்குப்பலம் சிதறாது என்ற திடமான நம்பிக்கை ரணில் விக்கிரமசிங்கவுக்கு உண்டு. அத்துடன் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர் தேர்தலுக்கு முன்பே மிகத்தெளிவாக தங்களது ஆதரவை ரணிலுக்கு தெரிவித்து நிற்கின்றனர். சந்திரிகா ஜேவிபியுடன் கூட்டமைப்புக்கான ஏற்பாடுகளில் தொடர்ந்தும் ஈடுபட்டு வருகின்றார். ஏனைய சிறுபான்மை கட்சிகள் தங்களது நிலைப்பாட்டை இன்னமும் உறுதியாக வெளிப்படுத்தவில்லை. பாராளுமன்ற கலைப்பின் பின்னேதான் அக்கட்சிகளின் இறுதியான நிலைப்பாடு தெரியவரும் போலுள்ளது.

ஆகவே அடுத்த பொதுத்தேர்தல் என்பது மிக முக்கியத்துவமிக்க தேர்தலாக நடைபெற உள்ளது. இதன் பெறுபேறுகள் நாட்டினுடைய தலைவிதியை மட்டுமல்ல, வடக்கு கிழக்கு முஸ்லிம்களின் தலைவிதியையும் தீர்மானிக்கும் வல்லமை உள்ளது என்பதை முஸ்லிம்களாகிய நாம் தெரிந்தும் புரிந்தும் கொள்ளல் வேண்டும்!

## நோர்வே சமாதானப் பேச்சிலிருந்து தந்திரமாகவே வெளியேறியுள்ளது!

பேச்சுவார்த்தை அரங்கிலிருந்து நோர்வே வெளியேறியவுடன் அதனை மிகப் பெரிய விடயமாகக் காட்ட பல்வேறு முயற்சிகள் எடுக்கப்பட்டன. சமாதானச் சூழல் தொடர்பான உத்தரவாதம் நோர்வேயின் வெளியேற்றத்தால் சிதைக்கப்படுமென பரவலாகப் பிரச்சாரப்படுத்தப்பட்டு வந்தது.

ஆனால் நோர்வேயின் வெளியேற்றம் மிகத் தந்திரமாகவே நடாத்தப்பட்டுள்ளது.

சர்வதேசத்தின் ஆதரவை குவிப்பதையும் இலங்கையின் இறைமை மீது தனது ஆதிபத்தியத்தை அழுத்தமாக எதிர்காலத்தில் நிலை நிறுத்துவதுமே சமாதான முயற்சிகளிலிருந்து தந்திரமாக நோர்வே வெளியேறியதன் உள்ளார்ந்த அர்த்தமாகும்.

ஐக்கிய தேசிய முன்னணி அரசை மீளவும் அதிகாரத்திற்கு கொண்டு வந்தவுடன், நோர்வே தனது பாத்திரத்தை முன்பிருந்ததை விட அதிகமாக ஆற்றும் என்பதில் யாருக்கும் சந்தேகம் தேவையில்லை.

# அமெரிக்க அடிவருடிகளுக்கு துருக்கியில் தகுந்த பதிலடி!

அமெரிக்காவின் தீராத ஆக்கிரமிப்புப் பசிக்கு தீனிபோடும் நாடுகளுக்கு தகுந்த பதிலடி கொடுக்கப்போவதாக எச்சரிக்கை வெளிவந்த கடந்த மூன்று வாரங்களுக்குள் துருக்கியில் மட்டும் நான்கு தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இறுதியாக நடைபெற்ற இரு பாரிய தாக்குதல்களும் ஜோர்ஜ் புஷ் பிரித்தானியாவில் அமெரிக்க ஆக்கிரமிப்புக்கு ஆதரவு தேடிச் சென்ற வேளையில் நடைபெற்றுள்ளது. தாக்கப்பட்ட இரு இலக்கும் பிரிட்டிஸ் அரசாங்கத்தின் நிறுவனங்களாகும்.

இத்தாக்குதல்களின் பின் பிரித்தானியாவில் நடைபெற்ற கூட்டுச் செய்தியாளர் மாகாநாட்டில் தோன்றிய இரு நாட்டுத் தலைவர்களும் ஒரே குரலில் 'பயங்கரவாதத்திற்கு எதிரான யுத்தத்தில் அதிக மூச்சுடன் குதிக்கப் போவதாக சூளுரைத்துள்ளனர். அப்படியானால் ஆப்கானிஸ்தானில், ஈராக்கில் இவர்கள் மேற்கொண்டுவரும் அதிகார ஆக்கிரமிப்புக்கு பெயர்தான் என்ன?


பயங்கரவாதம் எது என இனம் காண்பதில் அமெரிக்காவுக்கும், பிரித்தானியாவுக்கும் மூளைக்கோளாறு ஏற்பட்டு வெகுநாட்களாகிறது. ஆப்கானிஸ்தானிலும், ஈராக்கிலும் உலகெங்கும் சுதந்திரத்திற்கு போராடும் மக்கள் இவ் ஏகாதிபத்தியவாதிகளின் பார்வையில் பயங்கரவாதிகள் என்றால், ஆப்கானிஸ்தானிலும், ஈராக்கிலும் மிக மோசமாக கொல்லப்பட்ட, கொல்லப்பட்டுக்கொண்டிருக்கும் ஆயிரக்கணக்கான மக்களின் மரணத்திற்கு என்ன பெயர்.?

மிக இலகுவாக இஸ்லாமிய உலகை அடிபணிய வைத்துவிடலாம் எனத் தப்புக் கணக்குப் பண்ணிய புஷ் - பிளேயர் கூட்டை தொடரும் தாக்குதல்கள் மிக மோசமாக பாதித்து வருகின்றன - இஸ்லாமிய நாடுகளில் தனது ஆக்கிரமிப்புப் படையை நிலைநிறுத்த ஆதரவு கோரிவரும் இவ் ஏகாதிபத்தியங்களுக்கு எதிராக தொடர்ந்து நடைபெற்று வரும் அதிர்ச்சித் தாக்குதல்கள் மோசமான பின்னடைவை ஏற்படுத்தி வருகின்றன.

அமெரிக்காவுடன் கூடிக் குலாவி வரும் துருக்கிய அரசாங்கத்திற்கு விடுக்கப்பட்டு வந்த எச்சரிக்கைகளை ஏகாதிபத்திய சார்பு துருக்கிய அரசாங்கம் உதாசீனப்படுத்தியதன் விளைவே - துருக்கியில் பொதுமக்கள் பலியாவதற்கு காரணமாகி வருகிறது. இம் மரணங்களுக்கான பொறுப்பை துருக்கிய அரசாங்கமே எற்க வேண்டியுமுள்ளது.

ஆக்கிரமிக்கப்பட்ட அரபு மண்ணிலிருந்து அந்நிய நாட்டுப் படைகள் விலகாதவரை அமெரிக்க ஆக்கிரமிப்புக்குச் சார்பாக செயற்படும் நாடுகள் தாக்குதல்களை எதிர்கொள்வதை தவிர்க்க முடியாததாகும். பிற நாடுகளில் மக்களை கொன்று கொண்டு தனது மக்களை பாதுகாக்க வேண்டுமென இரட்டை வேசம் போடும் நாடுகளில் ஒன்று அடுத்த இலக்காக இருக்கலாம்.





இலங்கை முஸ்லிம்களின் சொந்தக்குரல்! சுதந்திரக்குரல்!! ஆதரவு தாருங்கள் வாங்கிப் படியுங்கள், எழுதுங்கள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மக்களிடமிருந்து



## மனுக்கள்

# முல்லை மாவட்ட முஸ்லிம் மக்களின் அவலநிலை!

முல்லைமாவட்ட முஸ்லிம்கள் 1990ஆம் ஆண்டு விடுதலைப்புலிகளின் திணிப்பின் பேரில் வெளியேற்றப்பட்டுள்ளனர். இம்மக்கள் நாலா திசைக்கும் சென்று ஆங்காங்கே இலங்கையில் பரவலாக வாழ்ந்து வருகின்றனர். இதில் புத்தளம், ஆலங்குடா எனும் இடத்தில் கூடுதலாக அதாவது 100க்கு 60 விகிதம் வாழ்கின்றனர். மிகுதி புத்தளம், முந்தல் பகுதியில் 100க்கு 20 விகிதமும், 100க்கு 10 விகிதம் அநுராதபுரம், கொழும்பு போன்ற இடங்களிலும் தமது வாழ்க்கைக்கு ஏற்றவாறு வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். இந்நிலைக்கு முன்னர் தமது சொந்த இடத்தில் வாழும்போது இவர்கள் 100க்கு 50 விகிதம் விவசாயத்திலும், 100க்கு 40 விகிதம் கடல் தொழிலிலும் 100க்கு 10 விகிதம் அரச, வியாபார தொழிலிலும் ஈடுபட்டு வாழ்ந்து வந்தவர்கள்.

இன்று இம்மாவட்டமக்கள் ஆங்காங்கே கொட்டில்களை அமைத்து முகாம்களில் கஷ்டத்தின் மத்தியில் வாழ்கின்றனர். சென்ற பொ.ஜ.முன்னணி அரசால் இவர்களுக்கு உலக உணவுத்திட்டத்தின் கீழ் குடும்ப அங்கத்தவர்களுக்கு ஏற்றமாதிரி நிவாரண பொருட்கள் வழங்கப்பட்டன. இப்பொருட்கள் ஒரு குடும்பத்திற்கு 20 நாட்களுக்கு போதுமாக இருந்தது. மிகுதி 10 நாட்களும் மிகவும் வறிய நிலையில் கூலி வேலை செய்வதன் மூலமாகவும் சமாளித்து வந்தனர். ஐக்கிய தேசிய முன்னணி அரசு வந்ததும் இம்மக்களுக்கு வழங்கப்படும் நிவாரணப் பொருட்கள் மட்டுப்படுத்தப்பட்டு ஐந்து பேர் கொண்ட குடும்பத்திற்கு ஒருமாதம் ஒன்றிற்கு 1260 ரூபா பெறுமதியான பொருட்கள் மட்டுமே வழங்கப்படுகின்றன. இந் நிவாரணப் பொருட்கள் 10 பேர் கொண்ட குடும்பமாக இருந்தால் 5 நாட்களுக்கு மட்டும்தான் போதும். மிகுதி 25 நாட்கள் அவர்கள் வேறு வழியில் தான் ஜீவிக்கவேண்டும். இப்பொருட்களும் மூன்றுமாதத்திற்கு ஒருமுறைதான் வழங்கப்படுகின்றது. இவை பற்றி பாராளுமன்ற உறுப்பினர்களிடம் கேட்டால் அவர்கள் தரும் பதில் உங்களுக்கு பொருட்கள் வழங்க அனுமதி கொடுத்தாகிவிட்டது என்ற பதிலே. ப.நோ.கூ. சங்கத்தில் கேட்டால் தங்களுக்கு பொருட்கள் வழங்க அனுமதி கிடைக்க வில்லை என்ற பதில். இப்பிழை யார்மீது? நிவாரணத்திற்கு பொறுப்பாக உள்ள அதிகாரிமீதா? அல்லது ப.நோ.கூ.சங்க அதிகாரி மீதா?

இவை இப்படி இருக்க முல்லை மாவட்ட முஸ்லிம்கள் எதிர்கொள்ளும் இன்னல்களை எடுத்துரைப்பதற்கான ஒரு பொறுப்பதிகாரி கிடையாது. மறுபுறம் படித்துவிட்டு அரச வேலை கிடைக்காதோ என ஏங்கித்திரியும் இளைஞர்கள். இவர்களின் நிலை பற்றி எமது பாராளுமன்ற இரு உறுப்பினர்களிடம் கேட்டால் தட்டிக்கழிப்பு. முல்லைத்தீவு மாவட்ட முஸ்லிம்கள் முழுக்க 99 வீதம் முஸ்லிம் காங்கிரசுக்காக வாக்களித்தவர்கள். இவ்விரு பாராளுமன்ற உறுப்பினர் களும் முல்லைத்தீவு மக்களின் வாக்கு இல்லாமல் கடைசிவரைக்கும் பாராளுமன்ற உறுப்பினராக வந்திருக்க முடியாது. என்பதை இவ்விரு பாராளுமன்ற உறுப்பினர்களும் கண்டிப்பாக சிந்திக்க வேண்டும். இதுவே அவர்கள் முல்லைத்தீவு மக்களுக்கு செய்யும் பெரிய கைங்கரியம். தொடர்ந்தும் முல்லை முஸ்லிம்களை புறக்கணிக்காமல் முல்லை மக்களையும் அரவணைத்து அவர்களின் உரிமைகளை பெற்றுக் கொடுக்க ஆவன செய்ய வேண்டுமென வேண்டுகின்றேன்.

- முல்லைமகன்

# பெருகி வரும் காணி விற்பனை

## குறைப்பதற்கான வழி என்ன?

அண்மைக் காலமாக காங்கேயனோடை எல்லைக் கிராமங்களில் வசிக்கும் முஸ்லிம் மக்கள் தமது வீடுகள், வெற்றுக் காணிகள் என்பவற்றை பிறருக்கு விற்பனை செய்வது அதிகரித்து வருகின்றது.

அண்மையில் ஐந்து வெற்றுக்காணிகளும், மூன்று வீட்டுக்காணிகளும் விற்பனை செய்யப்பட்டுள்ளது. இதனை பள்ளிவாயல் நிர்வாகத்தார்கள் தடுத்து நிறுத்துவதாகக் கூறினாலும் இதை முற்று முழுதாக நிறுத்த முடியவில்லை. தனது சுய இலாபத்திற்கு விற்று விட்டு, வேறு இடங்களில் வசதியாக வீடு கட்டி வாழ்கின்றார்கள்.

இந் நிலையில் முஸ்லிம் கிராமங்கள் அழிக்கப்படும் சந்தர்ப்பம் உண்டு. இதை தடுத்து நிறுத்த சம்பந்தப்பட்டவர்கள் கூடிய கவனம் எடுப்பார்களா?

சே. முபாயிதீன்
காங்கேயனோடை -13.

# பொத்துவில் பாணமை வீதி திருத்தப்படல் வேண்டும்

பொத்துவிலில் இருந்து பாணமை வரை உள்ள ஒரே வீதியானது பல வருடங்களாக முறைப்படி செப்பனிடப்படாமல் உள்ளது. தற்போது இவ்வீதியில் பல இடங்களில் கற்கள், சிதறி உள்ளதால், இவ்வீதி குழிகளும் கற்குவியல்களுமாய் காட்சியளிக்கிறது. அதே வேளை இவ்வீதி ஒழுங்கையொன்றைப் போல் குறுகிப் போயுள்ளது.

தற்போதைய சமாதான சூழலில் உள்ளூர், வெளியூர் மக்கள் சுற்றுலாவில் இப்பிரதேசத்தை சுற்றிப்பார்க்க வருகின்றனர். இவ்வீதியில் ஏற்பட்டுள்ள சிதைவுகள் காரணமாக வாகன சாரதிகளும், பிரயாணிகளும் மிகவும் சிரமத்திற்குள்ளாகி வருகின்றனர். ஆகவே, வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் இது விடயத்தில் அவசரமாக தங்கள் கவனத்தை செலுத்தி இவ்வீதியினை சீரமைத்துத் தருமாறு பொத்துவில் வாசிகள் கேட்டுக் கொள்கின்றனர்.

ஏ.ஏ.பைசல், பொத்துவில்

# அக்கரைப்பற்று மைதானத்தின் அவல நிலை!



அக்கரைப்பற்று நகரில் நீண்டகாலமாக பிரபலமான விளையாட்டுத் தளமாகத் திகழ்ந்த எழுவட்டுவான் விளையாட்டு மைதானத்தை இன்று மக்கள் இழந்து நிற்கின்றனர். ஆதார வைத்தியசாலைக்கும் பிரதேச சபைக்கும் எழுவட்டுவான் மைதானம் பங்குபோடப்பட்டு விட்டது. புதிதாக அமைக்கப்படுவதாகச் சொல்லப்பட்ட மைதானம், குப்பைகள் கொட்டும் திடலாகவும், மழைகாலங்களில் நீர்தேங்கி நிற்கும் குளமாகவுமே காட்சியளிக்கின்றது. இதனால் இப்பகுதிவாசிகள் பெரும் சுகாதாரச் சீர்கேடுகளை எதிர்நோக்குகின்றனர்.

எழுவட்டுவான் மைதானத்தில் கட்டுமான வேலைகள் அரைகுறையில் நிறுத்தப்பட்ட பாத்திருப்பு மண்டபம் மற்றும் காரியாலயம் என்பன மட்டுமே அமைக்கப்பட்டுள்ளன. விளையாடுவதற்கு உதவுவதாகக் காணப்படும் இவ்விடமா எழுவட்டுவான் மைதானத்திற்கான மாற்று மைதானம்?

நிப்றாஸ், அக்கரைப்பற்று

# பாதைகள் செப்பனிடப்படுமா?

காத்தநகரின் பிரதான வீதிகளான கடற்கரை, மத்திய, அரபிக்கலாசாலை, பொதுச்சந்தை, ஜாமியுழ் ழாபிரீன், மெத்தப்பள்ளி, கபுரடி, சாவியா போன்றவற்றில் மக்கள் பிரயாணம் செய்வதற்கும், வாகனப்போக்குவரத்திற்கும் இடைஞ்சல் தரும்வகையில் குழிகளும் நீர்நிரம்பலும் காணப்படுகின்றது. இவற்றினை உரிய அதிகாரிகள் கவனத்தில் எடுத்து, பாதைகளை செப்பனிடுவதற்கான முயற்சிகளை மேற்கொள்ளுமாறு வேண்டிக் கொள்கின்றேன்.

எம்.ஜே. ஷாஜித் ஹுசைன், காத்தான்குடி -03.

# நேர்மையான சமுதாய உருவாக்கத்திற்கு உதவுகிறது!

பல்லாயிரம் வாசகர்களின் கண்களையும், கருத்துக்களையும் கவர்ந்த முஸ்லிம் குரலே!! உண்மையை எடுத்துரைத்து நேர்மையான சமுதாயத்தை உருவாக்குவதில் பல்லாண்டு காலம் வாழ எனது இதய பூர்வமான வாழ்த்துக்கள். உண்மையை உரைக்கும் முஸ்லிம் குரலே நீ என்றும் வாழ்க.

எம்.ஐ.எம். நக்கீப், கல்லலை.

# வாசித்து வாழுவோம்; யோசித்தால் மீளுவோம்....

இன்று காசிப்பூ மலர்ந்துள்ள மனிதர்களிடம் வாசிப்பு வளரவில்லை. உண்டோம்! உறங்கினோம் தொல்லைகள் போக்க தொழில்பல செய்தோம் என்ற சமூக சிந்தையற்ற சுயநலப்போக்கிலேதான் முஸ்லிம் சமூகம் முன்னேறிக் கிடக்கின்றது. என்று எம்மவர்களிடம் சுயநலப்போக்கு சுடுபட்டிறக்கின்றதோ அன்றுதான் எமக்கு சுயம் கிடைக்கும்.! சுபீட்சமாய் வாழ்வும் சுடர்விட்டு பிரகாசிக்கும். இன்று எம் சமூக சிப்பிக்குள் முஸ்லிம் குரல் எனும் முத்து முளைத்துள்ளது. அதை பேணிக்காப்பது எம் அனைவரினதும் தார்மீகக் கடமையாகும். எமக்கென்றொரு குரல் இருந்தால்தான் நாம் விடுதலைப்பாதையில் வீறுநடைபோட முடியும்.



வாக்குகளை வாங்குவதற்காக வாய்ச்சவாடல்களை விட்டு, வாய்ப்பூச்சுக்களையே பூசி வாக்களித்த மக்களை வாய்பார்த்து நிற்க வைத்து, தத்தமது சாக்குகளை நிரப்பிக் கொண்டு, சத்தியசீலர்களாக, சரித்திர புருஷர்களாக தம்மைக் காட்டிக் கொண்டு, மக்கள் பணத்தில் மாளிகைகள் கட்டி, சமூகத்தை மறந்து சல்லாபத்தில் திளைக்கும் போலி அரசியல்வாதிகளின் போக்கிரித்தனங்களை கேலி செய்தும் துப்பாக்கி இருப்பதனால் துஷ்டவழி சென்றின்று தப்பாட்டமாடுகின்றவர்களின் அடாவடித்தனங்களை அச்சம் கொள்ளாமல் அம்பலப்படுத்தியும் எங்கள் குரலாக எத்திக்கும் ஒலிக்கின்ற முஸ்லிம் குரலின் தேவை இன்று படித்தவர்க்கத்தினரிடம் மட்டுமன்று பாமரர்களினாலும் கூட உணரப்பட்டு பட்டி தொட்டியெங்கும் பரவலாக பேசப்பட்டு வருகின்றது.

எங்கள் குரலாக எவரெவர் குரல்கள் ஒலிக்கின்றது என நம்பிக் கொண்டிருந்தோமோ அவர்கள் எம்மை நட்டாற்றில் விட்டவர்களாய், அதிகார வர்க்கத்தின் ஆப்புக்குள் அகப்பட்டு அவர்கள் சொல்லுபவைகளுக்கெல்லாம் தோப்புக்கரணம் போட்டவண்ணமுள்ளனர். இவர்களை நாம் இனியும் தொடர்ந்தால் எங்கள் இருப்பினிலே ஏக்கங்களோடுதான் இருக்க வேண்டி வரும்.

எனவே நாமொருமித்தவர்களாய் துப்புக்கெட்ட பத்திரிகைகளை தூக்கி வீசி விட்டு, தூய வழியிலே தூர நோக்காய் சிந்திக்கும் முஸ்லிம் குரலுக்கு முட்டுக்கட்டையாயிராமல் முட்டுக் கொடுப்போம்.

முஸ்லிம் குரல் இன்றுபோலென்றும் அதிகார வர்க்கத்திற்கும், அசிங்கங்களுக்கும் ஆலாபனை செய்யாத ஆளுமைமிக்க பத்திரிகையாக மிளிர எம் உளங்கனிந்த வாழ்த்துக்களையும் உரமிடுவோம்.

எமது வாசிப்பும், நேசிப்பும் அரவணைப்பும் அதிகமாவதன் மூலம் ஏகோபித்த முஸ்லிம் சமூகத்தின் குரலாக முஸ்லிம் குரல் ஒலிக்க முடியும். எனவே, சகோதர சகோதரிகளே! சம்பாதிக்கும் பணத்தில் சரிசமம் இல்லாவிடினும் இருக்கின்ற பணத்தில் இருபது ரூபாவையாவது எம் சமூக விடியலுக்காய் செலவு செய்து, வாரத்தில் ஒரு தடவையாவது வாசித்து வருவோம், யோசித்தால் மீளுவோம்...

கவிஞர் அஸ்மின் உதுமாலெவ்வை
மத்திய வீதி, பொத்துவில் - 07

# நீண்ட நாள் நிலைக்க இறைவன் துணை நிற்கட்டும்!

வாரம் தோறும் முஸ்லிம் குரல் பத்திரிகையைப் படித்து வருகிறேன். சுவையான அம்சங்களை உள்ளடக்கி வரும் அத்தனை ஆக்கங்களையும் தரும் உங்களை எப்படிப் பாராட்டுவதென்றே தெரியவில்லை.

அறியாதிருந்த பல விடயங்களையும் அறியத்தருகின்றீர்கள். மேலும் முஸ்லிம்களின் வாழ்க்கை முறையைத் தெளிவாக்கித் தருகின்றீர்கள். அவ்வாறே கிடைத்தற்கரிய பிற மொழி ஆக்கங்களையும் தமிழில் மொழி மாற்றித் தருகின்றீர்கள். அவை தமிழ் மொழியறிவு மட்டுமுடையோர்களுக்கு, மிகவும் பயனுள்ளதாயிருக்கின்றன. மேலும் நாட்டு நடப்புக்களை உடன் சரி, பிழை பிரித்துக்காட்டி மக்களுக்குத் தெளிவாக்கின்றீர்கள். மேலும் விஞ்ஞான உண்மைகளை அள்ளித் தருகின்றீர்கள். ஆகவே முஸ்லிம் குரல் பத்திரிகையின் சிறப்புக்கள் வார்த்தையில் அடங்காதவை. தொடர்ந்தும் இவ்வாறான சிறந்த ஆக்கங்களுடன் மக்கள் மத்தியில் முஸ்லிம் குரல் ஓங்கி ஒலிக்க இறைவனை இறைஞ்சுகின்றேன்.

A.R. சம்றா ஹிங்குலோயா, மாவனல்லை.

**ஒருவர் ஒரு கருத்தை சொல்லிவிட்டார் என்பதற்காக உங்கள் கருத்தை நீங்கள் சொல்லாமல் இருக்கலாமா?**

நாம் எழுதுவதற்கும், நமது மக்களுக்குள் கருத்துக்களை பரிமாறிக் கொள்வதற்கும் விவாதங்களைத் தொடங்கவும், தொடரவும் தயாராகவுள்ளோம்! உங்கள் கருத்துக்களை சுருக்கமாக எமக்கு எழுதி அனுப்புங்கள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# தென்னிலங்கை நெருக்கடியை முஸ்லிம் அரசியல் தலைமைகள் எந்த விதத்தில் பார்க்கிறது?

பைஸர் அஹமட்

தென்னிலங்கையில் தோன்றியுள்ள அரசியல் நெருக்கடிக்கும் வடக்கு கிழக்கு முஸ்லிம்களின் அரசியலுக்கு மிடையே எந்தவிதத் தொடர்பும் இல்லையா என்கிற கேள்வியை நாம் எழுப்ப வேண்டியவர்களாக உள்ளோம்! ஏனெனில் நமது அரசியல் தலைமைகள் இந்த நெருக்கடி நிலையில் நடந்து கொள்ளும் நிலையைப் பார்த்தால் இக்கேள்வி எழுப்பப்படுவது தவிர்க்க முடியாததாகும் என்பதை நீங்களும் புரிந்திருப்பீர்கள்!


அரசு - புலிகளுக்கு இடையில் நடைபெற்று வந்த அரசியல் பேச்சுவார்த்தையிலும் அதனூடான இடைக்கால சபை விவகாரத்திலும் நமது மக்களின் பாதுகாப்பு. இருப்பு. அரசியல் தீர்விற்கான எந்த விதமான முக்கியத்துவமும் வழங்கப்படாததனால் - நமது மக்கள் மிக மோசமான நெருக்கடியை எதிர் கொண்டு வந்தனர். இந்த ஆபத்து மிக்க சூழலில் இருந்து அரசியல் ரீதியாக நமது மக்களை நமது அரசியல் வாதிகளால் மீட்க முடியாது என்ற உண்மை உறுதி செய்யப்பட்டன.

நமது மக்களோ சொல்லமுடியாத அச்சத்துடன் திகைத்து நின்ற போதுதான் சந்திரிகா அம்மையாரின் அதிரடி அரசியல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இதனூடாக புலிகளுக்கும் அரசுக்குமிடையிலான பேச்சுவார்த் தையும். இடைக்கால சபை விவகாரமும் பின்னுக்குத் தள்ளப்பட்டு. சந்திரிகா. ரணிலுக்குமிடையிலான முரண்பா டுகளும் பேச்சுவார்த்தைகளும் முன்னுக்கு வந்தன.

கொழும்பு அரசியல் நெருக்கடி தான் என இதனை முஸ்லிம்கள் பார்க்கவே முடியாது! ஏனெனில் சந்திரிகாவின் இந்த அரசியல் முடிவானது முஸ்லிம்களை ஆசுவாசப்படுத்தி. எதிர்காலத்தில் செயற்படுவதற்கான திட்ட மிடலுக்கான அவகாசத்தை வழங்கி உள்ளது. மீண்டுமொரு பொதுத் தேர்தல் நடைபெற்று ஆட்சி அதிகாரத்திற்கு வரும் இரு தரப்புகளில் ஒன்று விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபடுவதும். தமிழ்மக்களுக்கான நியாயமான அரசியல் தீர்வின் இணக்கப்பாட்டிற்கு வருவதும் தவிர்க்க முடியாததாகும்.

இது யதார்த்தமும்கூட. ஆனால் கடந்த காலத்தில் நடைபெற்ற அரசியல் பேச்சு வார்த்தையானது முற்றுமுழுதாக முஸ்லிம்களை ஓரம்கட்டி புறக்கணித்து நடாத்தப்பட்டது. இந்த வகையான பேச்சுவார்த்தைகளில் முஸ்லிம்களுக்கு நியாயமான தீர்வு வழங்கப்படுமென எதிர்பார்க்க முடியாததாக இருந்தது. (இதற்கு பல்வேறு ஆணித்தரமான உதாரணங்கள் உண்டு) ஆகவே அடுத்த பேச்சுவார்த்தை அரங்கிற்கு இடைப்பட்ட காலத்தில் முஸ்லிம்கள் தங்களை தயார்படுத்துவதற்கான அரசியல் வேலைத்திட்டங்களை செய்ய வேண்டியுள்ளது. வடக்கு கிழக்கு இடைக்கால சபை தொடர்பான புலிகளின் வரைபு வெளியிடப்பட்டதும் முஸ்லிம் காங்கிரசும் இருமாத அவகாசத்தைக் கோரியது யாவரும் அறிந்ததே.

மிகவும் பின்தங்கிய நிலையி லிருந்த முஸ்லிம்களின் பேச்சு வார்த்தைக்கான இடத்தை முன்னுக்குத் தள்ளி (சமத்துவத்தரப்பு) உரிய தீர்வுத் திட்டத்துடன் உறுதியான அரசியல் நிலைப் பாட்டுடன் முஸ்லிம் தேசம் முன்னகர சந்திரிகாவின் அரசியல் செயற்பாடு நமக்கு வழியமைத்துள்ளது. அத்துடன் முஸ்லிம்களை ஓரம் கட்டி பேச்சு வார்த்தை அரங்கை தொடர்ந்த ரணில் விக்ரம சிங்கவின் அரசாங்கத்திற்கு முஸ்லிம்களின் அரசியல் பலத்தை நாட வேண்டிய தேவையும் ஏற்பட்டுள்ளது.



மிகவும் புத்திசாலித்தனமான அரசியல் தலைமைகளாக நமது முஸ்லிம் அரசியல் தலைமைகள் இருக்குமானால், நமது மக்கள் பலத்தினால் பெற்ற வாக்குப்பலத்தை வைத்துக் கொண்டே நிலைமைகளைக் கையாளலாம்! ஆனால் அப்படியொன்றும் நடப்பதாகத் தெரியவில்லை. மாறாக மீளவும் அனைவரும் (நுஆ தவிர) ரணில் விக்ரமசிங்கவின் காலடியே சரணம் என மண்டியிட்டுக் கிடக்கின்றனர். (ஒரு சிலர் சந்திரி காவுடன் ரகசியமாக பேசியுமுள்ளனர்) இவர்களுக்கு வெளிப்படையாக சந்திரிகாவின் முடிவினை ஆதரிப்பது முடியாத ஒன்றாகியே உள்ளது.

முஸ்லிம்களுக்காக இவர்கள் போராடுவது உண்மையென்றால், சந்திரிகாவின் முடிவினால் முஸ்லிம்கள் தற்காலிகமாகவேனும் பாதுகாக்கப் படுகின்றார்கள் என்றால் சந்திரிகாவை ஆதரித்து இருக்க வேண்டும். அல்லது ரணிலுடன் முஸ்லிம்களின் அடிப்படை அரசியல் நிலைப்பாடுகளை முன்வைத்து கறாராக பேசி இருக்க வேண்டும். ஆனால் இரண்டுமே நடைபெறவில்லை. எந்த முன் நிபந்தனையும் இல்லாமல் மு.கா வின் அனைத்துப் பிரிவினரும் ரணில் விக்ரமசிங்கவின் அரசாங்கத்தை ஆதரிப்பதாக பாராளுமன்ற சபாநாயகருக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணத்தில் கையெழுத்து வைத்துள்ளனர். எங்களைப் பொறுத்தவரை இக் கேடுகெட்ட காரியத்தை இவர்கள் செய்தபோது இனியும் நமது மக்களின் அரசியல் உரிமைக்காக இந்த அரசியல்வாதிகள் போராடுவார்கள். குரல் கொடுப்பார்கள் என்பதை நம்பவே முடியாதுள்ளது.

தமிழ்த்தேசிய கூட்டமைப்பு ஆதரித்து நிற்கும் (தமிழர்களின் விட்டுக் கொடாத நலன்களை உறுதிப்படுத்துவதற்கு) ரணில்விக்கிரம சிங்கவின் அரசாங்கத்தை எப்படி இவர்களால் (முஸ்லிம் காங்கிரஸ் - முஸ்லிம்களின் உரிமைகளை விட்டுக்கொடுப்பதற்கு) ஆதரித்து நிற்க முடியும்? அப்படியானால் இன்றைய கொழும்பு அரசியல் நெருக்கடிக்கும் வடக்கு கிழக்கு முஸ்லிம்களின் இருப்பு. பாதுகாப்புக்கும் எவ்விதமான தொடர்பும் இல்லையா?

## உங்கள் பார்வைக்கு...



### எம்.பிமாரின் விலை!

• இன்று எம்பிமாரின் விலை என்ன தெரியுமா? பல கோடி ரூபாய்க்கு சந்தை நிலவரம் உள்ளதாம். இருந்த கட்சியில் தொடர்ந்து இருப்பதற்கும் ஒரு ரேட் உண்டாம்! பலர் பேரம் பேசிவைத்துள்ளனராம். பணத்துடன், முழுமந்திரி, அரைமந்திரியும் கேட்டவர்கள் உள்ளார்களாம். இரண்டு தரப்பும் கேட்டதெல்லாம் தரலாம் என வாக்குறுதி வழங்கி உள்ளதாம். எம்.பி. மாரின் காட்டில் மழை -நமது ஊரில் பெரு வெள்ளம்!

### தேர்தல் டிக்கட்!

• தேர்தல் ஒன்று நடைபெற்றால் திகாமடுல்ல, வன்னி மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் மூன்று பேருக்கு முஸ்லிம் காங்கிரஸில் டிக்கற் கிடைக்காது என்ற கதை பரவலாக இவர்களின் ஊர்களில் அடிபடத்தொடங்கியுள்ளதாம். இவர்களுக்கு மாற்றாக புதியவர்கள் தயார்படுத்தப்பட்டு வருவதாகவும் கேள்வி!

### சொன்னேன் கேட்டாயா?

• தேசிய அரசாங்கம் அமைப்பதற்கான யோசனையை தெரிவித்தார் என்பதற்காக சந்திரிகாவால் குற்றம் சாட்டப்பட்டவர் பௌஸி, இன்று அம்மையார் தேசிய அரசாங்கம் அமைப்பது பற்றி கதைக்கத் தொடங்கியவுடன் சேட்கொலரை தூக்கி - அம்மையாருக்கு சரியாக அடிகொடுக்க இதுதான் சந்தர்ப்பம் என்கிறாராம் பௌஸி எம்.பி. தனக்கு நெருங்கியவர்களிடம்.........

### எய்தவனிருக்க அம்பை நோவானேன்?

• உங்கள் பக்கம் பலர் வருவர் மேடம். உடன் நடவடிக்கை எடுங்கள் என அழுத்தம் கொடுத்த மங்களமானவருக்கு சந்திரிகா பலர் மத்தியில் வைத்து மோசமாக திட்டத் தொடங்கி விட்டாராம். அம்மையாரின் முகத்தில் முழிப்பதே ஆபத்தாகிவிட்டதாம் மங்களமானவருக்கு. வாக்குறுதி தந்த பல முஸ்லிம் எம்பிகள் ஏமாற்றிப் போட்டானுகள் என முஸ்லிம்களை ஒரு பாட்டியில் வைத்து திட்டித் தீர்த்தாராம் மங்களமானவர்! பாவம் இதற்கும் முஸ்லிம்களுக்காக ஏச்சு?

**வாசகர் கவனத்திற்கு**

முஸ்லிம் குரலின் 1-24 இதழ்கள் (பைண்டிங் தொகுப்பு) தேவைப்படுவோர், ரூபா. 400/-க்கான காசுக்கட்டளை/ காசோலை அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்.

**முஸ்லிம் குரலில் விளம்பரம் செய்து நமது பத்திரிகை வளர்ச்சிக்கு உதவுங்கள்**

தொடர்புக்கு
விளம்பர முகாமையாளர்
முஸ்லிம் குரல்
181/1 Maligakanda Road
(White Park)
Colombo 10 .
Phone : 0114 734507 Fax: 0114 734508

## பாரமொரு உரைகல்

- மருதூர் மெய்யொளி -

# ஈகைச் சிந்தனையை விதைக்கும் ஈதுல் பித்ர்

ஷவ்வால் திங்களின் முதற் பிறை தோற்றம் வானில் உதயமாவதுடன் 'ஈதுல் பித்ர்" தினம் ஆரம்பமாகின்றது. இந்த நன் நாளை இறையோன் பெரியோன் எனும் பறைசாற்றும் தக்பீர் மொழிந்து வாஞ்சையோடு வரவேற்றுக் கொள்கின்றோம்.

பெருநாள் என்பது பொதுவாக மகிழ்ச்சிக்குரிய நாள் என்பதாகவே கொள்ளப்படுகின்றது. அந்த மகிழ்ச்சியும், இன்பமும் தன்னோடு மட்டும் மட்டுப்பட்டு விடுவதை இஸ்லாம் விரும்பவில்லை.

இருப்போர், இல்லாதவர் என்ற பாகுபாடின்றி எல்லோர் இல்லங்களும் மகிழ்வில் தழைத்தோங்க வேண்டும், இன்பத்தில் பங்கு கொண்டு, உவகையில் கலந்தும், இணைந்தும் இருப்பதை உறுதி செய்வதையுமே இஸ்லாம் விரும்புகின்றது. நான் எனும் அகந்தை அகற்றி, தன்னுடையது என்ற தன்னலப் போக்கினை நீக்கி, தனதுடமை எனும் பிடிமானத்தை விலத்தி, நாம், நமது, எனும் பரந்த மனோவியல்பை நமக்கு விதைப்பதில் இஸ்லாமிய பெருநாட்களின் அடிப்படைகள் பெரிதும் பங்காற்றுகின்றன.

இன்று நாம் எதிர் கொண்டிருக்கும் 'ஈதுல் பித்ர்" தினம் கூட தியாக வழிச் சிந்தனையின் பிறப்பான ஈகையை வலியுறுத்தும் ஒரு நாளாகவும், இத்தினத்தினை முந்திய மாதம் ரமழான் முழுவதும் நாம் பெற்றுக் கொண்ட, கற்றுக் கொண்ட, பேணிக் கொண்ட நற்பேறுகளை இரைமீட்டி, எதிர்வரும் நாட்களில் அதன் தூய வழியில் பயணிப்பதற்கு முதற்படியாகவும் இத்தினம் அமைகின்றது.

மனத்தூய்மை, உடல்தூய்மை, எண்ணத்தூய்மை என்று அகமும், புறமும் சுத்தமுடையதாக வைத்திருந்ததும், இறை நினைவோடு நீண்ட நேரங்களை இணைத்திருந்ததும், அடுத்தவர் பற்றிய கோள், புறம், பேசுவதிலிருந்து விலகி இருந்ததும், புலனடக்கம் பேணியிருந்ததும், இல்லாத அடுத்தவர்களுக்கும், உறவினர்களுக்கும் கொடுத்து உதவிக் கொண்டிருந்ததும் தொடரான ஒரு நடைமுறையாக பற்றுக் கொள்ளப்படல் வேண்டும். அதனை உரைத்துப்பார்க்கவும் இந்நாள் நமக்கு உதவுகின்றது.

பேராசை, மண்ணாசை, புலநுணர்வு போன்றவற்றில் மேற்கொள்ளப்பட்ட மன அடக்கங்களும், பாவங்களை சுட்டெரித்து சுதாகரித்துக் கொண்ட தூய்மை மனோ வலிமையும் உறுதியாக நிலைப்பேறாக படிந்து கொண்டதாக எதிர்கால நாட்களை கழிப்பதற்கும் எம்மைத் தயார்படுத்திக் கொள்வதற்குமான சிந்தனைகளையும் இன்றைய தினம் நமக்கு தருகின்றது.

ரமழான் மாதத்தில்தான் நமது வேதமான அல்குர்ஆன் இறங்கியது. இம்மாதம் குர்ஆனிய மாதம் என்றே சிறப்பிக்கப்படுகின்றது. அதனை முழுமையாக ஓதுவதிலும், அதன் கருத்துக்களில் எம்மை ஒன்றித்துக் கொள்வதிலும், அது கூறும் வழிமுறையினை முறையாக ஒழுகுவதிலும் காட்டிய ஆர்வத்தினை எதிர்வரும் நாட்களிலும் கடைப்பிடித்துக் கொள்ளும் பக்குவத்தை இன்றைய நாளில் எடைபோட்டுக் கொள்ளவும் துணையாகின்றது.

பசி, தாகம், விழிப்பு, பொறுமை போன்ற இயல்பின் மூலம் எவ்வாறான இறை நெருக்கத்தை ஏற்படுத்திக் கொள்ளலாம் என்பதை கடந்த ரமழான் மாதம் நன்கு புடம் போட்டுக் காட்டியது. அதில் நாம் எவ்வளவு பற்றுறிதியோடு பேணிக் கொள்பவர்களாக இருக்கின்றோம் என்பதனையும் இன்று நாம் உணர்ந்து கொள்ளும் நாளாகவும் ஈதுல் பித்ர் தினம் இருக்கின்றது.

இறை அருளையும், அவனது பாவமன்னிப்பையும், நரக விடுதலையையும் நமக்கு சன்மானமாகப் பெற்றுக் கொள்ள வாய்ப்பளித்த புனித ரமழானின் நிறைவு நாளாகவும், நமது மனதிற்கு உவகை தரும் உன்னதத் திருநாளாகவும் அமைந்த இன்றைய ஈதுல் பித்ர் தினத்தில் நமக்குரிய பித்ராவைத் தேடிச் சென்று கொடுத்து நாமும், அடுத்தவர்களும், இல்லாதவர்களும் இன்புற்று இத்தினத்தை கழிப்பது போன்று, எதிர்காலங்களிலும் இன்று போல் என்றும் வாழ்வோம்! ஈகைப் பண்பைப் பெருக்குவோம் இறைவிருப்பில் இணைந்திருப்போம்!

ஈத்முபாறக் ஈத்முபாறக் ஈத்முபாறக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*நாம் அனைவரும் அநியாயக்காரர்களின் ஊடகங்களின் கோரப்பிடியிலிருந்து விடுபடவேண்டும் என்ற ஆதங்கத்தின் முதற்கட்டமாக. சிறியதோர் முயற்சியாக. இச் சிறுகட்டுரையை தக்க ஆதாரங்களுடன் எழுதியுள்ளேன். இது போன்ற மேலும் பல விடயங்களை முன் வைப்பதற்கு உறுதி பூண்டுள்ளேன்.*

*எனவே. இக்கட்டுரையை உங்கள் முஸ்லிம் குரல் வார இதழில் தவறாது பிரசுரித்து ஊடகங்களின் பொய்முகங்களை வெளிக்கொணருமாறு பணிவாய் வேண்டுகிறேன்.*

*நன்றி.*

***ஜே. அப்துல் கலாம்**, பாலாவி.*

8-10-2003 அன்று "Eye" அலை வரிசையில் ஒளிபரப்பாகிய 'விடுமுறை விருந்து" என்ற நேரடி நிகழ்ச்சியில் உலக வலம் பகுதியில் விளக்கம் தந்த க. குணராசா என்பவர் ஆப்கானிஸ்தானின் தாலிபான் போராளிகளைப்பற்றி சில தவறான தகவல்களைத் தந்திருந்ததனால் இதனை எழுதுகின்றேன்.

தாலிபான்களின் ஆட்சிக்காலத்தில் பெண்கள் எவ்வாறு ஒடுக்கப்பட்டு அவர்களின் மனித உரிமைகள் மறுக்கப்பட்டனவோ அதே போன்ற நிலை, உருவெடுத்துவரும் தாலிபான்களின் தலையீட்டினால் மீண்டும் தோன்றி வருவதாகவும். அண்மையில் பெண்களுக்காக ஆரம்பிக்கப்பட்ட பாடசாலையொன்றும் தாலிபான்களினால் சேதமாக்கப்பட்டுள்ளதாகவும் கூறியிருந்தார்.

அமெரிக்க. சியோனிஸ ஆதிக்கத்தில் இன்று முற்று முழுதாக தங்கியிருக்கின்ற ஊடகத்துறையினரின் பக்கச்சார்பான செய்திகள்தான் இவை என்பதையும் எமது நாட்டின் ஊடகத்துறையினரும் இவ்வாறான பக்கச்சார்பான செய்தி நிறுவனங்களில்தான் முற்றுமுழுதாக தங்கியுள்ளர் என்பதையும் நீங்கள் நன்கு அறிந்திருப்பீர்கள். இவ்வாறான பக்கச்சார்புத் தன்மையை உலக வர்த்தக மையம் தாக்கப்பட்டபோது. CNN செய்தி ஸ்தாபனம் 10 வருடங்களுக்கு முன்னர் ஈராக் இஸ்ரவேலிற்கு ஏவுகணை ஏவிய போது பலஸ்தீன மக்கள் சிலர் கொண்டாடிய நிகழ்வை உலக வர்த்தக மையம் தாக்கப்பட்டபோது கொண்டாடினார்கள் என்று சித்தரித்துக்காட்டினார்கள் என்பதிலிருந்தே அறிந்து கொள்ளமுடியும். இதிலிருந்தே உலக வர்த்தக மையம் தாக்கப்பட்டது முஸ்லிம்களைப் பழிசுமத்துவதற்காக மேற்கொள்ளப்பட்ட ஒரு சதி நடவடிக்கை என்பதை அறிந்து கொள்ளலாம் (பாருங்கள் அ. மார்க்ஸ் எழுதிய ' அமெரிக்காவின் ஆப்கான் - வளைகுடாப் போர்கள்" என்ற நூலை).

அவர்களின் செய்தி ஸ்தாபனங்கள் எப்பொழுதுமே தமக்குச் சாதகமான செய்திகளையும் தம்முடன் முரண்படுகின்றவர்களுக்கு எதிரான செய்திகளையும். இஸ்லாத்தின் மூலம் மனித இனத்திற்கு. குறிப்பாக பெண்களுக்கு வழங்கப்பட்டுள்ள சுதந்திரத்தை வேறுவிதமாகத் திரிபுபடுத்தி இஸ்லாத்தைக் கொச்சைப்படுத்தும் விதமான செய்திகளையும் வெளியிடுவதில் பெயர்பெற்றவைகள்.

அந்நிறுவனங்கள் வெளியிடுகின்ற செய்திகளின்படி தமது உரிமையை வென்றெடுப்பதற்காகப் போராடுகின்ற போராளிகள் அனைவரும் பயங்கரவாதிகளாகவும். அடிப்படை வாதிகளாகவும் சித்தரிக்கப்படுவதையும். இவ்வாறான போராட்டத்திற்காகக் குரல் கொடுப்பவர்களையும். தங்களின் அடாவடித்தனங்களுக்கு ஒத்துப்போகாதவர்களையும். அடிபணியாதவர்களையும் பயங்கரவாதத்திற்கு அடிப்படைவாதத்திற்கு உதவி செய்யும். புகலிடம் அளிக்கும் நாடுகளாகவும் நிறுவனங்களாகவும் சித்தரித்துக் காட்டப்படுவதையும் அறியலாம்.

கொல்லப்பட்டமை மூடிமறைக்கப்பட்டு தாலிபான்களின் கெரில்லாத்தாக்குதல்களின் மூலம் தாலிபான்களுக்கு எற்பட்ட இழப்புக்கள் பல நூறுமடங்கு மிகைப்படுத்தப்பட்டு செய்திகளை வெளியிடுகின்றன இந்த செய்தி நிறுவனங்கள். எப்பொழுது ரஷ்யா ஆப்கானிஸ்தானைவிட்டு வாபஸ் பெற்றுச் சென்றனவோ அப்பொழுதுதான் உலக மக்கள் விளங்கிக் கொண்டார்கள் ரஷ்யா இராணுவம் 60,000 இற்கும் அதிகமான படைவீரர்களைப் பறிகொடுத்து விட்டுத்தோல்வியுடன்

நடந்து கொள் என்றெல்லாம் பல சட்டங்களை பெண்களைக் காக்கும் விஷயத்தில் இஸ்லாமிய சட்டக்கோவையும் இஸ்லாத்தை முற்று முழுதாகப் பின்பற்றும் தாலிபான்களின் சட்டக்கோவையும் கூறுகின்றன. இவற்றை யெல்லாம் பெண்களுக்குச் செய்யும் அநியாயம் என்று தூர நோக்கத்துடன் சிந்திக்கும் எந்த மனிதனும் கூறுவானா? தூய இஸ்லாத்தை மாசுபடுத்த நினைத்துக் கொண்டிருக்கும் மேலைத்தேய நாகரிகம்தான் இவ்வாறு கூறும். மேலைத்தேய ஊடகங்கள் மூடி மறைக்கும் ம்ற்றுமொரு விஷயம்தான்



பின்வாங்கிச்செல்லுகின்றார்கள் என்ற செய்தியே இதைவிடப் பன்மடங்கு இழப்புக்களை அமெரிக்கக் கூட்டுப் படையினர். சந்தித்து வருகின்றார்கள் என்ற செய்தி காலம் தாமதித்துத்தான் எம் காதுகளை எட்டும்.

இது இவ்வாறிருக்க ஆப்கானிஸ்த்தான் அரசினாலும். கூட்டுப் படையினாலும் தற்பொழுது அமுல்படுத்தப்படும் செயற்திட்டங்களை நீங்கள் அறிவீர்களா? இஸ்லாமியக் கலாசாரத்திற்கெதிராக நீலப்படம் அறிமுகம் செய்யப்படுகின்றது. மேற்கத்திய அரை ஆடைக் கலாசாரம் அறிமுகப்படுத்தப்படுகின்றது. பாடசாலைகளில் மேற்கத்திய கலாசாரங்கள் அறிமுகப்படுத்தப்படுகின்றன. மது. கொலை. கற்பழிப்பு. போதைப்பொருள் கடத்தல் தாரளமாக நடைபெறுகின்றது. இவ்வாறாக அடுக்கிக்கொண்டே செல்லலாம். நூற்றாண்டு காலமாக யாருடைய பாவனையும் இன்றி. கண்காணிப்பு இன்றி காணப்பட்ட சிலையின் சிறுபாகம் உடைக்கப்பட்டது சர்வதேசக் குற்றமென்றால் ஒரு சமூகத்தின் கலாசாரத்தை முற்றாக மாற்றியமைப்பதை என்ன வகையான குற்றம் என்பது? இதற்கெதிராக நடவடிக்கை எடுப்பது தவறா? தாலிபான் இயக்கத்தின் உருவாக்கப்பின்னணி எது தெரியுமா? வடக்குக் கூட்டணியினரின் ஆட்சிக்காலத்தில் பெண்கள் கற்பழிக்கப்பட்டனர். தன்னினச் சேர்க்கை தாராளமாக நடைபெற்றது. குடும்பங்கள் காரணங்களேதுமின்றி அநியாயமாகக் கொலை செய்யப்பட்டனர். வழிப்பறி. போதைப்பொருள் கடத்தல் தாராளமாக

சிலையுடைப்பு விஷயம். தலதா மாளிகை தகர்க்கப்பட்டபோதும். கம்போடியாவில் 3000 பௌத்த விகாரைகள் அமெரிக்காவால் குண்டுவீசி அழிக்கப்பட்டபோதும். பாபர் மசூதி வேரோடு பிடுங்கியெடுக்கப்பட்ட போதும். இலங்கையின் வடமாகாணத்தில் ஏராளமான மசூதிகள் தரைமட்டமாக்கப்பட்ட போதும். தஞ்சை முதல் காஞ்சி வரை பௌத்த சமணக்கோயில்களாக இருந்தவை இந்துக் கோவில்களாக மாற்றப்பட்டபோதும். எந்த சர்வதேச ஊடகமும் வாய் திறக்காமல் இருந்துவிட்டு தாலிபான்கள். நூற்றாண்டு காலமாக கைவிடப்பட்டிருந்த பாமியான் சிலையை உடைத்தபோது கிளர்ந்தெழுந்தமைதான் சிந்திக்கவைத்த விடயமாகும். ஆனால் உண்மைநிலை என்னவென்பது முற்றாக மறைக்கப்பட்டுவிட்டன. இந்த மேலைத்தேய ஊடகங்களால் தாலிபான் களுக்கு உதவி செய்வதன் மூலமாக தமது எண்ணெய்க்கொள்ளை விவகாரத்தை வெற்றிகரமாக பூர்த்திசெய்யமுடியும் என நினைத்த அமெரிக்காவின் நீண்ட காலக் கனவு தோல்வியடைந்ததனால்தான் ஆப்கானிஸ்த்தான் மீது கொடூர பொருளாதாரத் தண்டயை விதித்தது அமெரிக்கா. இந்த நிலையில் தாலிபான்களுக்கு இருந்த பிரச்சினை பௌத்த மதத்தை அழிப்பதா? வாழவிடுவதா? என்பதல்ல. மாறாக ஜீவமரண போராட்டம் நடத்திக்கொண்டிருக்கும் 15 இலட்சம் அகதிகளா? அமெரிக்கப் பொருளாதாரத் தடையால் அழிந்து கொண்டிருக்கும் இளஞ்சந்ததியினரா? அல்லது பாறையில் செதுக்கப்பட்டிருக்கும் சிலையா முக்கியமானது? என்பதுதான். ஆனால் அன்று 'யுனெஸ்கோ" மற்றும் 'ஸ்வீடன்" நாட்டைச் சேர்ந்த ஒரு நிறுவனம் ஆகியன ஆப்கானிஸ்த்தானிற்குச் சென்று பமியான் சிலையைப் பராமரிப்பதற்கு தம்மிடம் நிதிவசதி இருப்பதாகவும் அதற்கு அனுமதி தரும்படியும் தாலிபான் அரசிடம் வேண்டிக் கொண்டபோதுதான் பிரச்சினை கிளம்பியது. நமது நாட்டின் உடனடிப்பிரச்சினை இற்சிலைகளைப் பாதுகாப்பதல்ல. அமெரிக்காவின் கொடூர பொருளாதாரத் தடையால் வாடும் மக்களின் பட்டினியைப் போக்குவதுதான். எனவே. உங்களது பணத்தை அதற்காகச் செலவிடுங்கள் என தாலிபான் அதிகாரிகள் வேண்டியபோது அவர்கள் அதனை மறுத்துவிட்டனர். இவர்களுக்கு எமது பாலகர்களைவிட சிலைகள் பெரிதாகிவிட்டன. எனவே அத்தகைய சிலைகள் எமது நாட்டில் இருக்கத் தேவையில்லை எனக் கருதியே தாலிபான்கள் இவ்விதம் செய்யத் தீர்மானித்தனர். ஆனால் அரபு நாடுகளின் ஒன்றியத்திலிருந்தும். கட்டாரில் இருந்தும் இஸ்லாமிய அறிஞர்கள் வந்து பேசியதையடுத்து தாலிபான்கள்

⇨ 08

# ஆப்கானிஸ்த்தானில் தொடரும் ஊடகப் போர்...

அந்நிறுவனங்களுடைய பொய்முகங்களின்படி சதாம் ஹுஸைன் செத்துச்செத்துப் பிறக்கிறார். உஸாமா மீண்டும் மீண்டும் தனது எலும்புக்கூடுகளை எண்ணிக் கொண்டிருக்கிறார். ஆப்கானிஸ்தானிலும். ஈராக்கிலும் மாத்திரம்தான் மூளைக்கோளாறு காரணமாக விமானங்கள் விபத்திற்குள்ளாகின்றன. பயங்கர அழிவை ஏற்படுத்துகின்ற ஆயுதங்கள் சதாமிடம் இருந்தும்கூட ஆயுத பரிசோதகர்களைக் கண்டவுடனேயே ஆயுதங்களெல்லாம் கால்முளைத்து ஓடிவிடுகின்றன.

தாலிபான்களிடம் அமெரிக்கா கோரிய வேண்டுகோள்களுக்கு அவர்கள் இணங்காததன் காரணமாகவே ஆப்கானிஸ்த்தான் மீது பொருளாதாரத் தடை விதிக்கப்பட்டது என்பதையும். தாலிபான் அரசுக்கெதிராகப் பொய்ப்பிரசாரங்கள் முடுக்கிவிடப்பட்டது என்பதையும். ஆப்பானிஸ்தான்மீதான தாக்குதல் செப்டம்பர் 11 தாக்குதலுக்கு முன்னரே திட்டமிடப்பட்டது என்பதையும் இவ்வாறான ஆக்கிரமிப்பை ஆப்கானிஸ்தானில் மட்டுமல்லாமல் ஏனைய அரேபிய முஸ்லிம் நாடுகளிலும் மேற்கொள்வதற்கான நொண்டிக் காரணத்தைப் பெற்றுக்கொள்வதற்காகவே செப்டம்பர் 11 தாக்குதல் நடத்தப்பட்டது. என்பதையும் இன்று பல ஆய்வாளர்களும் அறிந்து வைத்துள்ள ஆதாரபூர்வமான விஷயங்களாக உள்ளன. அதேவேளை போர்க்களங்களில் உண்மைக்குப்புறம்பான செய்திகளை வெளியிடுவதிலும் இச்செய்தி நிறுவனங்கள் புகழ் பெற்றவை. அதற்கோர் எடுத்துக்காட்டிற்காக. கந்தகார் விமான நிலையத்தில் தாலிபான்கள் மேற்கொண்ட தாக்குதலில் 200 இற்கும் அதிகமான படைவீரர்கள் அமெரிக்கத்தரப்பில் கொல்லப்பட்ட ஆதார பூர்வமான செய்தியை மூடிமறைத்து 'தற்செயலாக நடந்த குண்டுவெடிப்பில் ஒரு சில அமெரிக்கப்படையினருக்குச் சிறு காயங்கள் ஏற்பட்டன" எனக்கூறி உண்மையான தகவலை மூடிமறைத்தது போன்ற சம்பவங்கள் பல இடம்பெற்றுள்ளன. இவ்வாறான பல தாக்குதல்களில் 800. 500. 200. 80,100 எனப் பெருந்தொகையான அமெரிக்கக் கூட்டுப்படையினர்

இருந்தன. இவ்வீனச்செயல்களைக் கண்டு கவலையடைந்து இதற்கெதிராகக் கிளர்ந்தெழுந்தவர்கள்தான் தாலிபான்கள். தாலிபான்களுக்கெதிராக உளவு பார்க்கச்சென்று கைது செய்யப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்டபின் இஸ்லாத்தையும் தழுவிக்கொண்ட ஒரு மேலைநாட்டுப்பெண்ணின் சுயசரிதை நூலிலிருந்து தாலிபான்களைப்பற்றி மேலும் பல திகைப்பூட்டும் தகவல்களைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

தாலிபான் பெண்களின் உரிமையை மறுக்கிறார்கள். பெண்களைக் கொடுமைப்படுத்துகிறார்கள். அடக்கு முறைகளைக் கையாள்கின்றார்கள் என்பதெல்லம் மேலைநாட்டு ஊடகங்களின் சோடிக்கப்பட்ட கதை என்பதை அம்மேலைநாட்டு பெண் உளவாளியிடமே கேட்டறிந்து கொள்ளலாம். மாறாக. முன்னைய ஆட்சிக்காலங்களில் ஆட்சியாளர்களால் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்த சட்டங்களுக்கிணங்கவும் இஸ்லாமிய சட்டங்களுக்கிணங்கவும் அங்கு வாழும் மக்களின் விருப்பப்படியும் அவர்களின் தொன்றுதொட்ட கலாசாரப்படியும்தான் தாலிபான்களின் சட்டக்கோவை அமைந்திருந்தது என்பதையும் பெண்களை மிகக்கீழ்த்தரமாக நடத்தும் துரோகிகளுக்குத்தான் அவர்களின் சட்டக்கோவை பாதகமானது என்பதையும் அறிந்து கொள்ளவேண்டும். பெண்களுக்கு கார் ஓட்டுவதற்கும். கலப்பின்றி தொழில் செய்வதற்கும். கலப்பின்றி படிப்பதற்கும் பூரண சுதந்திரம் தாலிபான்களினால் வழங்கப்பட்டிருந்தது என்பதையும். ஆப்கானிஸ்த்தானிலுள்ள வைத்தியர்களில் பெரும்பான்மையானவர்கள் பெண்களாகவே இருந்தார்கள் என்பதையும் இந்த மேற்கத்திய ஊடகங்கள் மூடி மறைக்கின்றன. தாடி வழிப்பதாக. பர்தா உடையை நீக்கிய வண்ணமாக தொலைக் காட்சியினூடாகக் காட்டப்பட்டதெல்லாம் ஒரு சில சுயநலவாதிகளின் முகங்கள்தான். தனது மானத்தைக் காத்து அந்நிய ஆண்களின் பார்வையில் இருந்து தன்னை விடுவித்து தனது கௌரவத்தைக் காக்க முனையும் பெண்களைப் பார்த்து எந்தவொரு முட்டாளும் கூறுவானா பெண்களின் மனித உரிமைகள் பறிக்கப்படுகின்றனவென்று? இதனால்தான் சீதனம் வாங்காதே. பெண்ணை அடிமையாகக் கருதாதே. பெண்மீது மென்மையாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நம்மை நாம் உணராவிட்டால், பெருநாள் கொண்டாடுவதில் அர்த்தமில்லை....!

**பு**னித நோன்புப்பெருநாள் மலர்ந்து விட்டது. இதற்கு முன்னைய வருடங்களிலும் இந்த நோன்பும் - ரமழான் இறுதியில் ஈத் பெருநாளும் வந்து போகத்தான் செய்தன. இருந்தும். எந்த வித சமுதா யப் பயனும் ஏற்பட் டதாகத் தெரியவில்லை. ஒன்றில் தட்டினால் சப்தம் வரவேண்டும். அப்படி சப்தம் எழாவிட்டால் தட்டியதில்தான் என்ன பிரயோசனம்?

இது போன்றுதான், உன்னத நோக்கங்களை உயிரோட்டமாகக் கொண்டுள்ள ரமழான் நோன்பை நோற்று வரும் முஸ்லிம் மாந்தரிடையே. சமுதாய ரீதியிலான மாற்றங்களோ - ஏற்றங்களோ எற்படவில்லை என்றால். நோன்பை ரமழான் முழுவதும் நோற்பதிலும். பெருநாளை கொண்டாடுவதிலும் அர்த்தமே இருக்கப்போவதில்லை.

வருடாந்தம் ரமழான் வருகிறது. ஏதோ முஸ்லிம்கள் நோன்பையும். நோற்கின்றனர். ரமழான் கடைசியில் பெருநாளையும் கொண்டாடி மகிழ்கின்றனர். அத்தோடு விஷயம் முடிந்தது. பழையபடி வாடிக்கையாக செய்து வந்த அனைத்து கருமங்களும் - காரியங்களும். மீண்டும் நடைபெறவே செய்கின்றன. நோன்பு ஏற்படுத்திய எந்த மாற்றமும் எவரிடத்திலும் இல்லவேயில்லை. சராசரி ஒரு முஸ்லிமின் நிலை இதுதான்....

அப்படியென்றால், நம் முஸ்லிம்கள் உண்மையான கடமை என்பதை உய்த்துணராமல், கடமை என இறைவன் விதித்தது எனப் புரியாமல், பொடும்போக்காக - ஒரு சம்பிரதாய சடங்காகத்தான் இதனை எண்ணுகிறார்களா? அப்படித்தான் பிற சமூகத்தவர்கள் முஸ்லிம்களைப் பற்றி எண்ணவும் - எடை போடவும் இடமாகும் என முல்லா சொன்னால். ஏற்றுக்கொள்வீர்களா?

இஸ்லாம் வெறும் சடங்குகளிலும் - சம்பிரதாயங்களிலும் நம்பிக்கை வைத்த ஒரு அறநெறியல்ல. மானுட நேயத்தை அடிநாதமாகக் கொ ண்டு. மனித சமுதாய மேம்பாட்டை இலக் காகக் கொண்டு. காலத்திற்கும் - இடத்திற்கும் பொரு ந்தி வரும் ஒரு வாழ்க்கைத் திட்டம் தான் இஸ்லாம்.

இத்தகைய சிறப்புக்களின் சிகரமாகத் திகழும் இஸ்லாம். நோன்பை வெறும் பொடும் போக்காக அனுஷ் டிப்பதற்காக விதியாக்கவில்லை. ஒவ் வொரு தனி முஸ்லிமும். அதன் மூலம் முழு சமுதாயமும் மனத் தளவில் இதப் பட்டும் - பதப்பட்டும். மாற்றம் கண்டும் - ஏற்றம் கண்டும் உயர வேண்டுமென்றே இஸ்லாம் விரும்புகின்றது.




அப்படியெனில். ஷரீஆ எதிர்பார்க்கும் அல்லது விரும்பும் மாறுதல். சகல மட்டங்களிலும். சமுதாய வட்டத்திலும் இன்றுவரை ஏற்பட வில்லையே ஏன்? இதற்குக் காரணம்தான் யாது?

இவ்விரு வினாக்களுக்கும் விடை என்னவென்று அறிய முற்படுவோமானால். 'நம்மை நாம் உணராததே" காரணம் எனத் துணிந்துரைக்கலாம். ஆம்... நாம் ஒவ்வொருவரும். ஏன் முழு சமுதாயமும் இன்றுவரை தன்னைத் தானே சுயவிமர்சனம செய்து. நம்மை நாமே உணரவில்லை என்றுதான் முல்லா குற்றஞ் சாட்டுவேன்... அது என்ன 'நம்மை உணர்தல்" என்றால் என்ன அர்த்தம் என்கிறீர்களா? நமக்கு பசி வந்தால்தான் உணவைத் தேடுவோம். நாடுவோம். பசி என ஒரு தேவை வராவிடில். நாம் உணவின் நினைப்போ அற்றிருப்போம். இந்த சாதாரண சின்ன விடயம். நம் எல்லோருக்கும் தெரியும். அதன் உண்மை நிலையும் புரியும்.

பசியைத் தீர்ப்பதற்கான உணவைத் தேடுகிறோம் எனில். பசியை- அதன் தேவையை நாம் உணர்ந்து விட்டோம் என்றுதானே அர்த்தம்! அந்தப் பசியை உணராதவரை. நமக்கு உணவு என ஒன்று தேவையாகப் பட்டதில்லை. உணர்ந்து விட்டபின். உணவு தேவையாகப்படுகிறது. அதனால் உணவைத் தேடுகின்றோம். தேடுதல் மனப் பான்மை நம்மில் செயல்படும் உணர்ச்சியைத் தூண்டி விடுகின்றது அல்லவா?

இந்த வரைவிலக்கணத்தின் உரைகல்லில். நம் சமுதாய நிலையை சற்றே நினைத்துப் பார்ப்போம். நம் சமுதாயத்தில் புதிய விடியல் - வெளிச்சம் அதாவது மாற்றம் அதன்வழி முன்னேற்றம் எற்படுவதற்கான செயலாக்கத்தினை எப்போதாவது பெற்றிருக்கின்றோமா? சமுதாய ரீதியில் இன்றுவரை ஆரோக்கியமான செயலாக்கத்தினை நாம் பெறவில்லை என்பதை உண்மை யாகவே நாம் ஒப்புக் கொள்வோமானால். அதன் அடிப் படை. நாம் நம் சமூதாயத்தின் பொதுத் தேவையை உணரவில்லை என்பதுவே கருத்தாகும்.

இந்த இடத்தில் நம் சன்மார்க்க சமுதாயத்தின்மீது உங்கள் பார்வையைப் படரவிட்டுப் பாருங்கள். சமூக. அரசியல். சமய. பொருளாதார. கல்வி கலாசாரம் போன்ற இன்னபிற துறைகளில் எல்லாம் அதன் நிலை என்ன? அதன் நிலைப்பாடு யாது? அது எதிர்நோக்கும் பிரச்சினைகள் எவை? இந்த சமுதாயப் பிரச்சினைகள் யாரால் எற்பட்டன. சமுதாயத்தைச் சுற்றியும் - பற்றியும் இருக்கின்ற சுற்றுப்புறச்சூழல் எத்தகையது? நம் சமுதாய வளர்ச்சிக்கு வாசற்படியாக இருப்பவர்கள் யார்? எவர்? அல்லது அதே வாசற்படிக் கதவை இழுத்து மூடும் துரோகிகள் - நயவஞ்சகர்கள் சந்தர்ப்பவாதிகள் - சுயநலவாதிகள் யார்? எவர்?

நாம் ஒவ்வொருவரும் நோன்பு நோற்று. பிறரின் பசித்துயர் அறிந்து. மனம் கசிந்துபோயுள்ள இந்த ரமழான் இறுதியில் பிறருக்கும் ஈந்துண்ண (பித்ரா) வாழ வழி செய்து. பெருநாளை எதிர்பார்த்து விழி பூத்திருக்கும் இவ்வேளை. நம் சமுதாயம் குறித்து சிந்தித்தோமானால். நம் சமுதாயம் பசியின் தேவையை உணரத் தலைப்பட்டு விட்டது. சமுதாயத்திற்கு பசி வந்துவிட்டது போல. நம் சமூகத்திற்கும் முல்லா குறிப்பிடும் பசி வந்துவிட்டால், இனி அழத்து வங்கிவிடும். அழுத பிள்ளைதானே பால்குடிக்கும்!

சன்மார்க்க நெஞ்சங்களே - முல்லா நாட்டின் தற்போதைய அரசியல் நெருக்கடியையும் இவ்விடத்தில் தொட்டுக்காட்டித் தூண்டாது விட்டால், முறையான பசியும். பூரணமான பசியும் வராது. நம் இலங்கை அரசியல் வரலாற்றில் முன்னெப்போதுமே வந்திராத அரசியல் நெருக்கடி. கடந்த இரு வாரங்களுக்கு முன் எழுந்துவிட்டது. ஆளுங்கட்சி - எதிர்க்கட்சி இரண்டிலுமுள்ள அதியுயர் அதிகாரம் கொண்ட இரு பதவிகளை (ஜனாதிபதி - பிரதமர்) வகிக்கும் தலைவர்களிடையே அதிகாரப் போட்டி வந்துவிட்டது.

இதன் தாக்கம் நம் சமூகத்தை எவ்வகையில் அதிரச்செய்யும்? இந்த தாக்கம் காரணமாக. நம் சமுதாய எதிர்காலம் எவ்வாறு அமையும்? அல்லது ஆளவந்தோரால் அமைக்கப்படும்? சமுதாயம் பாதிக்காத வகையில் நாம் - நம் முஸ்லிம் அரசியல் தலைமைத்துவம் எந்த விதமான எச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்? இப்படியொரு அரசியல் நெருக்கடி ஏற்பட்டநிலையிலும். நம் முஸ்லிம் தலைமைத்துவம் தொடர்ந்தும் பிளவுபட்டுத்தான் இருக்கப் போகிறதா? அல்லது ஒன்றிணைந்து ஒரு குரலில் நம் சமுதாய கோரிக்கைகளை முன்வைக்கப் போகின்றதா?

சமுதாயப் பசியை நாம் சரிவர உணரும்போது. நம் எதிர்காலத்தை தீர்மானிக்கப்போகும் இன்றைய அரசியல் சூழ்நிலை குறித்தும் சிந்திக்கக் கடமைப்பட்டுள்ளோம். அல்லவா? அந்த வகையில் நம் சமூகம் நம் தலைவர்களுக்கு எவ்விதமான அழுத்தங்களை கொடுத்து அவர்களை ஆற்றுப்படுத்தப் போகிறது? நம் தலைவர்களை எவ்வகையில் முன்வைக்கத் தூண்டப்போகிறோம்.

இவ்வாறான வினாக்களுக்கு விடை தேடுவதற்கான சிந்தனையே. இவ்வருடத்தின் நம் நோன்புப் பெருநாளின் சிந்தனையாகவும். உணர்வாகவும் உறுதிப்பாடாகவும் அமையட்டும். அல்லாஹ் நம் அனைவருக்கும் நேர்வழியை காட்டுவானாக!

ஈத் முபாறக!




முஸ்லிம்குரல் பத்திரிகை நமது மக்களின் இழப்புகளை ஆவணப்படுத்தி, இழப்புகளுக்கு நீதி வேண் டிப் போராடும் பணியை, முஸ்லிம் தேச ஆவணக் காப்பகத்தினூடாக முன்னெடுத்து வருவதை அறிந்திருப்பீர்கள். எமது இந்த முயற்சிக்கு நமது மக்கள் மத்தியிலிருந்து பெருமளவு ஆதரவும், ஆவணங்களும் வந்து சேர்ந்து கொண்டிருக்கின்றன.

இத்தகவல்களை நமது மக்களுக்கு பகிரங்கப்படுத்தும் நோக்கில் மக்கள் பத்திரிகை என்ற வகையில் இத் தொடர் எழுதப்படுகிறது. எமக்கு கிடைத்த விபரங்களின் எண்வரிசைப்படி பட்டியல்படுத்தப்பட்டுள்ளது.



30

ஹயாத்கான் முகம்மது ஆரிப்.
14/1. ஸாவியா வீதி.
காத்தான்குடி 01.
பிறந்த திகதி : 16.08.1972
சம்பவம் இடம்பெற்ற திகதியும் இடமும் : மீரா ஜும்ஆ பள்ளிவாயல். 03.08.1990. மரணம் புலிகளால் நிகழ்த்தப்பட்டுள்ளது.
மரண அத்தாட்சிப் பத்திர இலக்கம் : 5656



31

சாகுல் ஹமீட் முகம்மட் இப்றாஹீம்
இல. 5, புதுக்குடியிருப்பு, மட்கோ
பிறந்த திகதி : 03.12.1941
சம்பவம் இடம்பெற்ற திகதியும்
இடமும் : நிலாவெளி 10.01.1987 இனந்தெரியாதோரினால் கடத்தப்பட்டு கொலை செய்யப்பட்டார். மரண அத்தாட்சிப் பத்திர இலக்கம் : 1404



32

முகம்மட் இப்றாகீம் மனாஸிர்
இல. 5, புதுக்குடியிருப்பு, மட்கோ
பிறந்த திகதி : 21.02.1970
சம்பவம் இடம்பெற்ற திகதியும்
இடமும் : 1ம் வட்டாரம். கற்சுனைக்கல், நிலாவெளி, 12.08.1990 மரணம் இனந்தெரியாதோரால் நிகழ்த்தப்பட்டது.
மரண அத்தாட்சிப் பத்திர இலக்கம் : 269



33

நெய்னா முஹம்மது றபீக்.
143. பொது நூலக வீதி.
மருதமுனை 02.
பிறந்த திகதி : 06.01.1962
சம்பவம் இடம்பெற்ற திகதியும் இடமும் : பெரிய நீலாவணை 02. 20.03.1988 இனந்தெரியாதோரால் அடித்துக் கொலை செய்யப்பட்டார்.
மரண அத்தாட்சிப் பத்திர இலக்கம் : 474



34

முகம்மது இப்றாஹீம் முகம்மது றபீக்
எச்.எல். 114. அல் அமீன் 2ம் குறுக்கு வீதி. புதிய காத்தான்குடி 06.
பிறந்த திகதி : 01.06.1960.
சம்பவம் இடம்பெற்ற திகதியும் இடமும் : குருக்கள் மடம். 12.07.1990. மரணம் இனந்தெரியாதோரால் நிகழ்த்தப்பட்டது.
மரண அத்தாட்சிப் பத்திர இலக்கம் : 780

35

முஹம்மது ஹுஸைன் முஹம்மது சஹாப்தீன்.
இல 431. மீராபள்ளி வீதி. காத்தான்குடி 01
பிறந்த திகதி : 13.03.1948
சம்பவம் இடம்பெற்ற திகதியும் இடமும் : காத்தான்குடி மீரா ஜும்ஆ பள்ளிவாயல். 03.08.1990. மரணம் விடுதலைப் புலிகளினால் நிகழ்த்தப்பட்டது.
மரண அத்தாட்சிப் பத்திர இலக்கம் : 5623

36

முஹம்மது சஹாப்தீன் அப்துல் சுக்கூர்.
இல 431. மீராபள்ளி வீதி. காத்தான்குடி 01
பிறந்த திகதி : 11.10.1975
சம்பவம் இடம்பெற்ற திகதியும் இடமும் : காத்தான்குடி மீரா ஜும்ஆ பள்ளிவாயல். 03.08.1990. மரணம் விடுதலைப் புலிகளினால் நிகழ்த்தப்பட்டது.
மரண அத்தாட்சிப் பத்திர இலக்கம் : 5624

ஈத் முபாறக்

அன்பர்கள். ஆதரவாளர்கள். வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் அட்றாவின் நோன்புப் பெருநாள் வாழ்த்துக்கள்

காத்த நகரில் நவீன டிசைன்களில் பாதணிகளை மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள நீங்கள் தெரிவு செய்ய வேண்டிய ஒரே இடம்

காலத்திற்கேற்ற கண்கவர் டிசைன்களில் ஆண்கள், பெண்கள், சிறுவர்கள், குழந்தைகளுக்கான சகல வித பாதணிகளையும் நீங்கள் தெரிவு செய்ய இன்றே நாட வேண்டிய ஒரே இடம் - அட்றா

அட்றா

கைதேர்ந்த தொழிலாளர்களின் கைவண்ணத்தில் உருவாகும் பாதணிகளை தெரிவு செய்ய இன்றே நாடுங்கள்.

அட்றா தொழிலகம்
அட்வகேட் அப்துல் காதர் வீதி, காத்தான்குடி .02
0777 779125.
(ஓடர்கள் உடனுக்குடன் ஏற்றுக் கொள்ளப்படும்) Advt.

*அன்பர்கள், ஆதரவாளர்கள், அனைவருக்கும் எமது உள்ளம் கனிந்த நோன்புப் பெருநாள் வாழ்த்துக்கள்*

**அதி சிறந்த பாதணிகளுக்கு**
காத்தான்குடியில் சிறந்த ஓர் ஸ்தாபனம்

றிஜெனட்

இளைஞர்கள், பெண்கள், சிறுவர்களுக்கான அதி நவீன பாதணிகளை மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ள நீங்கள் தெரிவு செய்ய வேண்டிய ஒரே இடம்.

*கைதேர்ந்த தொழிலாளர்களின் கைவண்ணத்தில் உருவாகும் சிறந்த பாதணிகளுக்கு காத்தான்குடியில்*

றிஜென்ட்

றிஜென்ட்
தொழிலகம்
கடற்கரை வீதி,
காத்தான்குடி .04
0777 140888 Advt.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிக்கோவுக்கு ஒரு கடிதம் -1

உஸ்மான் மரிக்கார்



**அன்பின் அப்துல் ரகுமானுக்கு,**

ஈழத்து மண்ணின் இளைய கவிஞன் எழுதுவது. நீயும் தமிழ்க் கவிஞன் நானும் தமிழ்க் கவிஞன். நீ வயதால் மூத்தவன் நான் இளையவன். ஆகவே உன்னை சகோதரனே என்று அழைப்பதற்கு எனக்கு உரிமை உண்டல்லவா?

பல தஸாப்தங்களாக நீ இலக்கியச் சேவை செய்து வருகின்றாய். இருந்த போதிலும் கடந்த இரு தசாப்தங்களாக எமது ஈழத்து மக்களுக்காக நீ செய்து வரும் இலக்கியச் சேவை ஈடு இணையற்றது.

கடந்த இருபது வருடங்களாக நீ ஈழத்தமிழர் படும் துயர் கண்டு கண்ணீர் சிந்துகிறாய்.

சிங்கங்கள் தமிழ் மக்களை வேட்டையாடிய போது உன் எழுது கோல் சோகக் கண்ணீர் சொரிந்தது. பாதிக்கப்பட்ட புலிகள் கோபங் கொண்டு கொதித்தெழுந்த போது உனது அழுகை ஆனந்தக் கண்ணீரானது.

'அயல் நாட்டுச் சீதை"களுக்காக சிறகிழந்த ஜடாயுவாகத் துடிதுடித்த நீ ஈழத்து ராவணர்களை உனது 'ஆறாவது விரல்" கொண்டு சுட்டுத் தள்ளியதை மறக்கத்தான் முடியுமா?

இலங்கையில் தேர்ச்சில்லில் சிக்கிய கன்றுக்குட்டிகளாய் ஈழத்தமிழர் அவஸ்தைப் பட்ட போது நீயும் துடிதுடித்தாய். அப்படித் துடிக்காத தமிழ்நாட்டு மக்களைச் 'சினிமா சுவரொட்டி தின்னும் தாய்ப் பசுக்கள்" என்று காரசாரமாகக் கண்டித்தாய்.

ஈழத்தமிழர்களைச் சிங்களவர்கள் வேட்டையாடிய போது இருக்கின்ற இருகண்கள் போதாவென்று உன் மூன்றாவது கண்ணான நெற்றிக் கண் கொண்டு ஈழத்தை எரித்தாய்.

போதாததற்கு ஆனந்த விகடனில் 'நரம்பறுந்த யாழ்" மீட்டுவதை மறக்கத்தான் முடியுமா? யாழ் மண்ணைப் பார்த்து 'விழுப்புண் சுமந்த வீரனைப் போலிருக்கிறது" என்று நீ விதந்துரைத்த போது உண்மையிலேயே நான் உச்சி குளிர்ந்து போனேன்.

ஈழத்தமிழர் இரத்தம் சிந்தியபோது நீ கவிக்கோ - கவிஞர்களின் அரசன் - என்பதை நிஜமாகவே நிரூபித்து விட்டாய் சபாஷ்!

ஆயினும் சகோதரா!!

சிங்கங்கள் பசுக்களை கடித்துக் குதறிய போது ஆயிரம் கண் கொண்டு அழுதாயே. புலிகள் வெள்ளாடுகளை வேட்டையாடிய போது இருக்கின்ற இரு கண்களையும் இழந்து குருடானாயே. அரசமரம் பனந்தோப்பை ஆக்கிரமித்த போது பனைமரங்களின் அழுகையை ஆயிரம் காது கொண்டு கேட்டாயே. பனைமரம் தென்னந்தோப்பைச் சூறையாடிய போது அழுது குதறிய தென்னம்பிள்ளையின் தேம்பலைக் கேட்க மறுத்து இருக்கின்ற இரு காதுகளையும் இழந்து செவிடானாயே.

தமிழ்ச் சீதைகளைச் சிங்களராவணர்கள் கடத்திக் கொண்டு போய்க் கற்பழித்த போது சிறகிழந்த ஜடாயுவாய்த் துடிதுடித்தாயே. நமது ஸைத்தான்களைத் புலிகள் கொன்ற போது உயிரற்ற சடலமாய் ஆனாயே.

சகோதரா 'சிறில்" களால் தமிழ் மக்கள் தாக்கப்பட்ட போது இருக்கின்ற ஒரு தாக்குதல் போதாதென்று ஆயிரம் நாக்குகள் கொண்டு புலம்பினாயே.

உன் தம்பி. தங்கக் கம்பி 'பிரபா" வால் இஸ்லாமிய ரத்தங்கள் பச்சை பச்சையாகக் கொன்று குவிக்கப்பட்ட போது மட்டும் இருக்கின்ற ஒரு நாக்கையும் இழந்து ஊமையாய்ப் போனாயே.

அன்று சிறிலைக் கடித்துக் குதறிய அல்ஷேஷன் ஆனாய். இன்றோ பிரபாவின் காலை நக்கிக் கொண்டிருக்கின்ற போமரேனியனாய்ப் போனாயே.

சகோதரா! கண்ணிருந்தும் குருடானாயே.
காதிருந்தும் செவிடானாயே.
வாயிருந்தும் ஊமையானாயே.
மொத்தத்தில் ஜப்பானியக் குரங்கு பொம்மை யானாயே.

எங்கே போ னது உன் ஆறாம் விரல்? உன் சுட்டுவிரல் சுடாமல் போனது ஏன்? உன் நெற்றிக் கண்ணுக்கு என்ன நேர்ந்தது? அவிந்து போனதா அது?

வேற்று மொழி வெறியர்கள். உன்தாய் மொழி பேசுவோரைக் கொன்று குவித்தபோது கோபங்கொண்டு குரல் கொடுத்தாயே. உன் மொழி பேசும் வெறியர்கள் உன் மதத்தவர்களைக் கொன்று குவித்த போது நீ ஊமையாய்ப் போனது ஏன்?

நீ சுட்டு விரல் நீட்டித் தமிழகத்தவர்களைக் குற்றம் சாட்டும் போது 'மற்றும் மூன்று விரல்கள் உன் மார்பினைக் காட்டுவதை" மறந்து விட்டாயா?

கன்றுக் குட்டி தேர்ச் சில்லில் சிக்கிய போது 'சினிமாச் சுவரொட்டி சாப்பிட்ட தாய்ப்பசுக்கள்" என்று தமிழகத்தவர்களைத் தாக்கினாயே.

நீ மட்டும் என்னவாம்?
தமிழகத்துத் தாய்ப் பசுக்களாவது பரவாயில்லை சினிமாச் சுவரொட்டி சாப்பிட்டன. ஆனால் தமிழ் மொழி பேசும் ஈழத்து இஸ்லாமியர்களான நாம் பிரபாவின் தேர்ச்சில்லில் சிக்கிச் சின்னா பின்னமான போது தமிழ பேசும் தமிழகத்து இஸ்லாமியனான 'நீ ஐயோ! தம்பி பிரபாவின் தங்கத்தேர் உடைந்து விட்டதே தம்பியின் பயணம் தடைப்பட்டு விட்டதே" என்றல்லவா புலம்பிக் கொண்டிருந்தாய். அப்படிப் பார்த்தால் அந்தப் பசுக்கள் ஆயிரம் மடங்கு மேல். அரைநிர்வாணி என்று அவர்களை மட்டம் தட்டுகிறாய். நீ முழு நிர்வாணியாய் நின்று கொண்டிருப்பதை அறியாமல். இந்த இடத்தில் ஒரு பழமொழி ஞாபகம் வருகுது எனக்கு 'ஊசியைப் பார்த்து சல்லடை சொன்னதாம். உன்வாலில் ஓர் ஓட்டை இருக்குது. என்று"

சகோதரா இலங்கைத் தமிழர்களின் துன்பம் தெரிந்த உனக்கு இலங்கை முஸ்லிம்களின் துன்பம் துயரம் ஒன்றும் தெரியாததொன்றல்லவோ.

நீ இலங்கைக்கு வந்த போதெல்லாம் பொதுமேடையில் வைத்து முஸ்லிம் காங்கிரஸின் மூத்த கவிஞர்கள் முகாரி பாடினார்கள் புலிகளால் நேர்ந்த புண்களைக் காட்டிப் புலம்பித் தொலைத்தார்கள். ஆனாலும் அதுவெல்லாம் உன் காதில் விழவில்லை. நீ வாயே திறக்கவில்லை. உன் பாஷையில் சொன்னால் எமது புலம்பல் 'செவிடன் காதில் ஊதிய சங்காகியது" ஆயினும் சகோதரா அதை எமது பாஷையில் இன்னும் அழகாகச் சொல்லுவார்கள் 'எருமை மாட்டின் மேல் மழைபொழிந்தது போல்" என்று.

அது என்ன சகோதரா?

இன்னும் வரும்....

---

# வெளிச்ச வாசல்

அபூ அஸ்ரப் ஆங்கிலத்தில் : இஸ்லாம் ஒன் லைன்

**ஈராக்கில் அமெரிக்கா இன்னொரு வியட்நாமைச் சந்தித்திருக்கிறது. தினமும் தனது துருப்பினரைப் பலி கொடுத்து வருகிறது. இதற்காகத்தான் வேண்டாம் என்று சொன்னோம்' என்று முழு உலகமும் சொல்லிக் கொண்டிருக்க அமெரிக்க ஜனாதிபதியோ, தான் செய்தது சரி என்று வாதிட்டு, உலகில் தன்னை விடப் பெரிய முட்டாள் இல்லை என்பதை மீண்டும் மீண்டும் நிரூபித்து வருகிறார். இதே வேளை உயிரை விட்ட வீரர்களின் பெற்றோர் என்ன சொல்கிறார்கள் என்பதை இஸ்லாம் ஒன் லைன் இணையத் தளத்தில் பேட்டி காணப்பட்ட - கொல்லப்பட்ட ஒரு அமெரிக்கப் படை வீரரின் தந்தையின் வார்த்தைகளில் நாம் தெரிந்து கொள்ளலாம்.**

**கேள்வி -** உங்களது துயரத்தைப் பகிர்ந்து கொள்கிறேன். செப்டம்பர் 11ந் திகதிய தாக்குதலின் மூலம் நானும் கூட இழப் புக்களின் வருத்தத்தை ஓரளவு உணர்ந்தி ருக்கிறேன். உங்களது புதல்வ னைப் போல் ஒரு துணிவுள்ளவனாக இல்லையென்றாலும் கூட நானும் அமெரிக்கப் படையின் 40வது அணியில் உள்ளேன். இராணுவத்தினரான எங்களைப் பொறுத்த வரை பெருமைக்குரிய எங்களது தேசத்தின் பாதுகாப்பைத் தவிர வேறு எதையும் கருத்திற் கொண்டிருக் கவில்லை என்பதை நீங்கள் உணர்ந்து கொள்ள வேண்டும். உங்களது புதல்வ னோடு போருக்குச் சென்றிருந்தால் நானும் பெருமையும் மதிப்பும் அடைந்திருப்பேன். எனக்குரிய வாய்ப்பு வரும் போது நானும் ஈராக்கில் இருப்பேன். நீங்கள் ஒரு விட யத்தை உணரவேண்டும்... அதாவது அமெரி க்கா இந்தப் போரில் ஒரு பங்காளியாக இருக்க எண்ணவில்லை. செப்டம்பர் 11ம் திகதி காலையில் அறபு முஸ்லிம்கள் தங்களது பயங்கரவாதிகளை அனுப்பி நமது தலைக ளில் மோதியதன் விளைவாகவே இப்போர் ஏற்பட்டது. அத்தாக்குதல் மூலம் நமது தந்தையரும், தாய்மாரும், சிறுவர்களும், கணவர்களும், மனைவியரும், சகோதர சகோதரியருமாக மூவாயிரம் பேரை இழந்தோம்.

நான் உங்களிடம் கேட்க விரும்பும் கேள்வி என்னவெனில், சிறந்த ஒரு வீரனை வீணாகச் சாவதற்கு ஏன் அனுமதித்தீர்கள்? நீங்கள் போருக்குச் செல்ல அனுமதித்து விட்டு, இந்த அறபு முஸ்லிம்களால் 'இஸ்ல ாம் ஒன் லைன்' இணையத்தளத்தில் பேட்டி காணப்படுகிறீர்கள். நாட்டுக்காக உங்களது மகன் செய்த தியாகத்தையும் அதன் பெருமையையும் இழக்கச் செய்கிறீர்கள். உங்களைப் பேட்டி காணும் இதே முஸ்லிம் கள்தான் ஈராக்கில் உங்கள் மகன் இறந்த செய்தி கேட்டு மகிழ்ச்சியடைந்தவர்கள் என்பதையும் செப்டம்பர் 11ம் திகதிய தாக்குதல் குறித்துக் களிப்படைந்தவர்களும் என்பதை நீங்கள் உணரவில்லையா?

என்னை நீங்கள் மன்னிக்க வேண்டும்... உங்களது மகனது தியாகம் நிகழ்ந்த சில நாட்களில் அமெரிக்காவின் எதிரிகளோடு நீங்கள் ஒத்துழைப்பதைப் பார்த்து என் உள்ளம் எரிகிறது. நான் ஈராக்கில் மரணமடைய நேர்ந்திருந்தால், எனது பெற்றோர் எமது எதிரியுடன் கைகுலு க்கிக் கொள்ள மாட்டார்கள் என்ற நிச்சயத் துடனும் மகிழ்ச்சியுடனும் இறந்திருப்பேன். உங்களது மகனும் அப்படியே நினைத் திருப்பார் என்பதை நான் சர்வ நிச்சயமாகச் சொல்வேன்....

**பதில்-** எமது எல்லாப் படை வீரர்கள் குறித்தும் நான் மிகவும் பெருமைப்படுகி றேன் என்பதை முதலில் உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். செப்டம்பர் 11ம் திகதி நிகழ்ந்த துயரத்துக்குக் காரணமான வர்கள் ஈராக்கியர் அல்லர் என்பதை முதலில் உங்களுக்கு ஞாபகப்படுத்துகிறேன். அவர்கள் வெவ்வேறு நாடுகளைச் சேர்ந் தவர்கள். ஈராக்கியர் பேரழிவு ஆயுதங்களை உ ற்பத்தி செய்கிறார்கள் என்றும் அவற்றை அவர்கள் வைத்திருக் கிறார்கள் என்றும் ஜனாதிபதி புஷ், அமெரிக்காவுக்குப் பொய் சொன்னார் என்பதை இப்போது நாம் அறிகிறோம்.

அந்த ஆயுதங்களோ அவை இருந்ததற்கான அடையாளங்களோ இன்று வரை கண்டு பிடிக்கப்படவுமில்லை, நிரூபி க்கப் படவுமில்லை. இந்தப் போர் ஏற்ப டுத்தும் பயங்கரத்தில் நமது மிகப் பெரும் நாடு பிரதிநிதித்துவம் எடுத்துக் கொள்ளும் என்றும் அவர் குறிப்பிடவில்லை. எனது மகன் வீணே இறந்து விடவில்லை. எந்த அமெரிக்க ப்படைவீரனும் வீணாக இறக்க வில்லை. உலகத்தில் சகிப்புத் தன்மையையும் அமைதியையும் நிரப்புவதற்காக தங்களது வாழ்க்கைகளை அவர்கள் அர்ப்பணித்



திருக்கிறார்கள். இன்று நடைபெறும் முஸ் லிம்களுடனான இந்தக் கலந்துரையாடலில் நீங்கள் என்னை அவதானித்தால், சமய நம் பிக்கைகளுக்கு அப்பால் உலகம் முழுக்கவும் உள்ள மக்களுடன் நாம் சகிப்புத் தன்மை கொண்டவர்களாக இருக்க வேண்டும் என்பதைத் தெரிந்து கொள்வீர்கள். அமெரிக் காவின் எதிரிகள் மக்கள் அல்லர் என்பதைத் தெளிவு கொள்ள வேண்டும். அநேகமாக அவர்களது அரசுகளின் விருப்பங்க்ளே அதைத் தீர்மானிக்கின்றன. என்னைப் பொறுத்த வரை இயேசு எனக்குக் கற்பித்துத் தந்ததற்கொப்ப, தேசிய, மத, நிற வேறுபாடுகளுக்கும் வெறுப்புகளுக்கும் அப்பால் எல்லோரும் எனது நண்பர்களும் சகோதரர்களுமாவர். மிகச் சரியாகச் சொல் வதானால் எனது மகனைப் போல.

**கேள்வி -** நான் ஒரு மெக்ஸிக்க அமெரிக்கன். பிறந்து வளர்ந்தது கலிபோர் னியாவில். 1997ம் ஆண்டில் நான் முஸ்லிமா னேன். உங்கள் மகனுக்கு நிழ்ந்தது துயரமானது.இந்த அரசு இளம் லத்தீன் களையும் நிறத்தால் வித்தியாசப் பட்டவர்களையும் மாத்திரம் தங்களது கொடூர நோக்கங்களுக்குப் பயன்ப டுத்துவதாக நினைக்கிறேன். எனது கேள்வி என்னவெனில்... உங்களது மகனின் இழப்புக்குப் பிறகு அமெரிக்கா குறித்து என்ன உணர்கிறீர்கள்? இந்த நாடு மாறிவிட்டது என்று உணர்கிறீர்களா? ஆம் என்றால் எவ்வாறு? முஸ்லிம்களைப் பற்றிய உங்களது எண்ணம் என்ன?

**பதில் -** தேசத்தைப் பற்றிய எனது எண்ணத்தில் மாற்றமேதுமில்லை. ஏனெனில் அமெரிக்கா சமரச மனப்பான்மையுள்ளதும் பல் வேறு கலாசாரங்களைக் கொண்ட மக்களையுடையதுமான ஒரு நாடாகும். எனது தேசத்தின் மீது மதிப்பும் அன்பும் கொண்டுள்ளேன். இந்தத் தேசத்தில்தான் எனது பேரன்மார் பிறந்தனர். எனது கோபமெல்லாம் திரு.புஷ்ஷையும் அவரது நண்பர்களும் போன்ற பொய்யர்கள் மீதுதான். அவர்களது தேவையின் பேரில் தான் எமது புதல்வர்களையும் அமெரிக் காவின் புதல்வர்களையும் செத்துப் போவ தற்கு அனுப்பியிருக்கிறார்கள்.

சில விடங்களைத் தெரிந்து கொண்டதன் மூலம் முஸ்லிம்கள் மீது மரியாதை கொண்டுள்ளேன். உண்மை என்னவெனில் நான் அவர்களையும் அவர்களது சமயத்தையும் மதிக்கிறேன். அவர்களது சமயமானது மரணத்தைக் கொண்டு வரும் சமயமல்ல. மாறாக அன்பை ஏற்படுத்தும் சமயம் அது. துரதிர்ஷ் டவசமாக, நானும் நீங்களும் கூட மரபு வழியான பகைமை கொண்ட தலைவர் களைக் கொண்டுள்ளோம். இதுவே போருக்கும் வருத்தங்களுக்கும் மரணங்க ளுக்கும் அடிப்படையாகும்.

(இன்னும் வரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விகிதாசாரப் பிரதிநிதித்துவ விசித்திரத்தில் பறிபோக உள்ள முஸ்லிம்களின் தனித்துவப் பிரதிநிதித்துவம்

-ஏ.யு.எல்.எம். ஹாரிஸ்

இலங்கை வாழ் முஸ்லிம்களின் அரசியல் இருப்பை உறுதிப்படுத்தும் பாராளுமன்ற தனித்துவ பிரதிநிதித்துவம் வடக்கு கிழக்கில் இருந்தே தெரிவு செய்யப்படுகின்றன. இத் தெரிவானது 1989ம் ஆண்டு இடம்பெற்ற தேர்தலில் இருந்தே ஆரம்பமாகின்றது. தனித்துவத் தலைமைத்துவத்தினூடாகவே முஸ்லிம்களின் தனித்துவ பிரதிநிதித்துவம் முதன்முதலில் பெற்றுக் கொள்ளப்பட்டது.

வடக்கு கிழக்கில் முஸ்லிம்களின் பிரதிநிதித்துவம் அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை, வன்னி ஆகிய மாவட்டங்களில் இருந்தே தெரிவு செய்யப்படுகின்றது. இலங்கை-இந்திய ஒப்பந்தத்தின் பின்னணியில் இந்தியப்படை நிலை கொண்டிருந்த சூழலில் 1989ம் ஆண்டு இடம்பெற்ற தேர்தலில் அம்பாறையில் ஒரு பிரதிநிதியும், மட்டக்களப்பில் ஒரு பிரதிநிதியும், வன்னியில் ஒரு பிரதிநிதியும் தேசியப்பட்டியல் ஊடாக ஒரு பிரதிநிதியும் முஸ்லிம்களின் தனித்துவத்தை உறுதிப்படுத்தி தெரிவுசெய்யப்பட்டனர்.

இந்தத்தேர்தல் முஸ்லிம்களின் அரசியல் வரலாற்றில் முக்கியத்துவமிக்கதொன்றாகும். முஸ்லிம் மக்கள் தீர்க்கமான ஆணையை முஸ்லிம் மாகாண கோரிக்கையை வென்றெடுப்பதற்காக அளித்திருந்தனர். வடக்கு கிழக்கு முஸ்லிம் மக்களுக்குள் (குறிப்பாக அம்பாறையிலும், திருமலையிலும்) அன்றிருந்த தேசிய கட்சிகள் மீதான ஈடுபாடும், மயக்கமும், முஸ்லிம் தேசிய உணர்வின்மையும் கூடுதலான தனித்துவப் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்படுவதற்கு தடையாக இருந்தன. அம்பாறை மாவட்டத்தில் 500 வாக்குகள் குறைவாக கிடைத்ததால், விகிதாசார விசித்திரத்தால் இரண்டு பிரதிநிதிகள் கிடைப்பது தவறிப்போனது. திருகோணமலை மாவட்டத்தில் கிண்ணியா மக்கள் தேசியக் கட்சிகளில் மயங்கிநின்றதால் தனித்துவ பிரதிநிதித்துவமே இல்லாமல் போய்விட்டது.

விகிதாசார பிரதிநிதித்துவ விசித்திரம் என்பது எல்லாக்கட்சிகளையும் விட ஒரு வாக்கு கூட எடுக்கும் கட்சிக்கு ஒரு பிரதிநிதித்துவம் போனசாக கிடைப்பதே அந்த விசித்திரமாகும். இந்த விசித்திரத்தைப் பயன்படுத்தி முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழும் அம்பாறை மாவட்டத்தில்கூட போனஸ் ஆசனத்தை ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸால் 1989ம் ஆண்டுத் தேர்தலில் பெற்றுக் கொள்ளமுடியவில்லை. முஸ்லிம் தேசிய உணர்வின்மையும், முஸ்லிம்களை தொடந்து அவமதிக்கும், நட்டாற்றில் கைவிடும் ஐ.தே. கட்சிக்கு முஸ்லிம்கள் வாக்களித்ததே இதற்கான காரணமாகும்.



1994ம் ஆண்டுத் தேர்தலில் அம்பாறை மாவட்டத்தில் இரண்டு பிரதிநிதிகள் உட்பட 07 உறுப்பினர்களை தனித்துவமாக முஸ்லிம்கள் பெற்றுக்கொண்டாலும், விகிதாசார பிரதிநிதித்துவ விசித்திர போனஸ் ஆசனத்தை முஸ்லிம்களின் தனித்துவக் கட்சியால் அம்பாறையில் பெற்றுக் கொள்ளமுடியவில்லை. அப்போதும் அம்பாறை மாவட்ட முஸ்லிம்களில் கணிசமானோர் மீண்டும் ஐ.தே. கட்சிக்கு வாக்களித்ததே இதற்குக்காரணமாகும்.

2000ம் ஆண்டுத் தேர்தலில் மர்ஹூம் அஷ்ரஃப் அவர்கள் தனது சாணக்கியத்தைப் பயன்படுத்தி அம்பாறையில் பொதுஜன முன்னணியுடன் கூட்டுச் சேர்ந்ததன் காரணமாக விகிதாசாரப் பிரதிநிதித்துவ போனஸ் ஆசனத்தை அம்பாறையில் பெற்றுக் கொள்ள முடிந்தது. ஆனால் அந்த விசித்திரத்தை கண்ணால் காண்பதற்கு அந்தப் பெருந்தகைக்கு கொடுத்து வைக்கவில்லை.

2001ஆம் ஆண்டுத் தேர்தலில் ஐ.தே.கட்சி ஆதரவு உறுப்பினர் நௌஷாத் சுயேட்சையாக போட்டியிட்டு, 16,000 வாக்குகளை பிரித்தெடுத்ததன் காரணமாக முஸ்லிம் காங்கிரஸ் விசித்திரமான போனஸ் ஆசனத்தை பெற்றெடுத்து வெற்றிவாகை சூடியது. இந்த வெற்றி முஸ்லிம்கள் ஒற்றுமைப்பட்டதால் பெற்றது என்பதைவிட ஐ.தே. கட்சி வாக்குகளை நௌஷாட் பிரித்ததே காரணமாகும்.

முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் அவர்கள் இந்த விகிதாசார பிரதிநிதித்துவ விசித்திரம் பற்றி மேடைகளில் அடிக்கடி பேசிவருவதையும் இந்த விசித்திரம் தரும் வெற்றியால் பேரம்பேசும் சக்தி அதிகரிக்கும் என்றும் மகிழ்ச்சி பொங்க கூறிவருவதையும் காணுகிறோம். ஆனால் இவரின் இந்த மகிழ்ச்சிக்கான சூழல் தற்போது இல்லை என்பதையே தற்போதைய அரசியல் கள நிலவரம் சுட்டிக்காட்டுகின்றது. இவர் சிறுபிள்ளைத் தனமாக ஐ.தே. கட்சியுடன் 2001ல் தேர்தல் உடன்பாடு வைத்து புலிகளைத் திறந்துவிட்டதன் பின்னர், அதே சிறுபிள்ளைத்தனத்துடன் புலிகளுடன் உடன்பாடு வைத்து குட்டு வாங்கி குனிந்து கொண்டிருக்கும் நிலையில் விகிதாசார பிரதிநிதித்துவ கதையளப்பது வேடிக்கை யாகவே உள்ளது.

ரஊப் ஹக்கீமின் 'கிடைத்ததை பகிர்ந்துண்ணும் பழக்கமின்மை" காரணமாக ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் துண்டு துண்டாக உடைந்துள்ள நிலையிலும், புலிகள் வடக்குக் கிழக்கில் சுதந்திரமாக நடமாடி தேர்தலில் போட்டியிடக்கூடிய சூழ்நிலை காணப்படும் நிலையிலும் என்ன விகிதாசார விசித்திரம் பற்றிக் கதைக்கிறாரோ? தெரியவில்லை.

முஸ்லிம் மக்களின் இருப்பை அச்சுறுத்தும் எதிர்வர இருக்கும் பாராளுமன்றப் பொதுத் தேர்தலில் அம்பாறை மாவட்டத்தில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஒரேயொரு பிரதிநிதித்துவத்தையே பெற்றுக்கொள்ளும். முஸ்லிம்களுக்கான தனித்துவத் தரப்பை அங்கீகரிக்காத ஐக்கிய தேசியக் கட்சியுடன் கூட்டு வைத்துக்கொண்டு என்ன முகத்துடன் முஸ்லிம் காங்கிரஸ் மக்கள் முன் வரப்போகிறது என்பதே மக்களின் முக்கியமான கேள்வியாகும். அத்துடன், தமிழ் மக்கள் ஒன்றுதிரண்டு புலிகளின் பிரதிநிதிகளுக்கு வாக்களிக்கும் சூழலும் இத்தேர்தலில் காணப்படுகிறது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் முஸ்லிம் மக்களின் வாக்குகள் மூன்று பகுதியாகப்

⇨ 09



## சுவையாகச் சமையுங்கள்~05

இல்லறத்தில் நுழையும் நம்மவர்கள் எல்லோரும் அது பற்றிய எல்லா வகையான அறிவுகளுடனும் இருப்பதில்லை. இதனால் சிற்சில இடறல்கள் தலைகாட்டவே செய்யும். அவ்வாறானவற்றைக் களைந்து நல்லறமாக மாற்றுவதற்கும் ஒருவரை ஒருவர் நன்கு புரிந்து இணைபிரியாத் தம்பதிகளாகத் திகழவதற்கும் ஆலோசனைகளை பன்னூல் ஆசிரியர் 'கையேடு கலைஞர்' டாக்டர் அப்துல் பாரி 'புதுமணத் தம்பதிகள் கையேடு' என்ற தலைப்பிலான நூலில் முன்வைத்துள்ளார். அவற்றிலிருந்து சில பகுதிகள் இங்கு இடம்பெறுகின்றன. நமது மக்களும் இவ்வாறான இடறல்களை சந்திக்கும் போது அவற்றிலிருந்து விடுதலை பெறுவதற்கு இத்தொடர் வழிகாட்டும் என்று நம்புகின்றோம்.

சுவையாய் சமைக்கப் புதுப்பெண் கற்றுக் கொள்ள வேண்டும். கற்றுக் கொண்டு விட்டால், எல்லோரையும் எளிதில் கவர்ந்து விடலாம். மூத்தவர்களை வளைத்துப் போடவும் முடியும்.

வாழைப்பூ, வாழைத்தண்டு, கொத்த மல்லி கீரை, அகத்திக் கீரை இவை யாவும் வயதானவர்களுக்குத் தேவையானவை. இவை பக்குவமாக அவர்களுக்கு சமைத்துக் கொடுத்தால், உடலில் விஷம் தங்காமல் மலச்சிக்கல் இல்லாமல் வாழுவார்கள். மலச்சிக்கல் இல்லையென்றால், மனச்சிக்கல் இல்லாமல் மகிழ்ச்சியாக இருப்பார்கள். மருமகளுக்கு கொஞ்சம் ஏச்சுக்கிடைக்கும்.

வயது ஆனாலே வாயுத் தொல்லை மூலம் இரத்த அழுத்தம், நீரிழிவு என்று ஏதாவது நோய் வரும் இதற்கு பக்குவமாய் சமைத்துப்போட்டாலே 'நல்ல மருமகள்' என்று பெயர் எடுத்துவிடலாம்.

யார் யாருக்கு எப்படி சமைத்துக் கொடுக்க வேண்டும் என்பது மருமகளுக்கு தெரிந்திருக்க வேண்டும். அதற்காக புத்தகங்களை படித்துத் தெரிந்து கொள்ள வேண்டும். உதாரணமாக, நீரிழிவு நோயாளிகள் காலை 11 மணிக்கு மோர் அல்லது தக்காளி ஜூஸ் குடிக்க வேண்டும். மாலை 4 மணிக்கு போண்டா அல்லது சுண்டல் சாப்பிட வேண்டும். இல்லாவிட்டால், கோபப்பட்டு கத்துவார்கள். சரியான நேரத்தில் அவர்களுக்கு வேண்டியதை கொடுத்துவிட்டால் சபாஸ் பெற்றுவிடலாம்.

வீட்டுக்கு வீடு சமையல் மாறும். உப்பு, உறைப்பு கூடக்குறைய இருக்கும். புகுந்தவீட்டில் உள்ளவர்களுக்கு சமையல் எப்படி இருக்க வேண்டும் என்பதை மாமியாரிடம் மருமகள் கற்றுக்கொள்ள வேண்டும்.

கணவனுக்கு என்ன பிடிக்கும் என்பது தெரிந்து, அவனுக்கு வாய்க்கு ருசியாக சமைத்துப் போட்டால், நிச்சயமாகக் கணவனைக் கவர்ந்து விட முடியும்.

# இல்லமே சுவனமாக...! இனிய யோசனைகள்...!

கடந்த இதழின் தொடர்ச்சி...

### மனைவிகளுக்கு...

- கணவனிடம் அடிக்கடி இது வேண்டும்/ அது வேண்டும்/ என்று கேட்டுக் கொண்டிருக்காதீர்கள்.
- தம்முடைய வேலையிலோ, வணிகத்திலோ கணவன் பிசியாக இருந்தால் சிணுங்க வேண்டாம். முகம் சுளிக்க வேண்டாம். ஏனெனில் அந்தப் பணியின் பலன் உங்களுக்கும் கிடைக்கும்.

உங்கள் பணத்தை உங்கள் கணவரிடமிருந்து மறைக்க வேண்டாம். இல்லையேல் உங்கள் மீது அவரது நம்பிக்கை அகன்று விடும்.

- உங்கள் கணவர் புத்தகம் வாசித்துக் கொண்டிருக்கும்போது அவரிடம் அடிக்கடி பேசி தொல்லை தராதீர்கள்.
- உங்கள் கணவர் புகைப் பிடிக்கிறார், பத்திரிகைகள், புத்தகங்களை அதிகமாக வாங்குகிறார் எனில் அதனை ஆட்சேபிக்காதீர்கள்.
- எப்போதும் எல்லாவற்றுக்கும் ஆமாம்சாமி போட்டுக்கொண்டிருக்காதீர்கள். இதனால் உங்களது கணவரது பார்வையில் மதிப்பிழந்து போவீர்கள். மாறாக உங்களது கருத்துகளை அவ்வப்போது வெளிப்படையாகச் சொல்லுங்கள்.
- கணவருடன் சேர்ந்தே உணவருந்துங்கள். இல்லையெனில் தனியாக சாப்பிட்டு சாப்பிட்டு அவருள் சுயநலம் வளர்ந்துவிடும்.
- உங்கள் கணவர் எப்போதாவது இரவில் காலதாமதமாக வீட்டுக்கு வந்தால் ரொம்பவும் உணர்ச்சி வசப்பட்டு விடாதீர்கள். சரியான காரணத்தால் காலதாமதமாகியிருக்கவும் வாய்ப்பு உள்ளது.
- உங்களுடைய வீண் செலவுகளுக்காக அதிகமாக சம்பாதிக்கவும் உழைக்கவும் கணவனை நிர்ப்பந்தப்படுத்தாதீர்கள்.
- உங்கள் கணவரை அழுக்கு உடைகளை அணிந்து கொண்டு வெளியே போகவிடாதீர்கள். கணவரின் தூய்மையான உடைகளுக்கு பொறுப்பாளி நான்தான் என்கிற உணர்வு உங்களுக்கு எப்போதுமே இருக்கட்டும்.
- கணவரின் செருப்பையோ, ஷூவையோ எடுத்து வைப்பதை இழிவாகக் கருதவேண்டாம். ஏனெனில் இப்படிப்பட்டஅடக்கம் அவரை அதிகமாக மகிழ்ச்சியிலாழ்த்துகிறது.
- கணக்கு வழக்கில் உங்கள் கணவரை ஏமாற்றாதீர்கள். அவர் ஆட்சேபிக்கமாட்டார். ஆனால் பெரும்பாலும் இத்தகைய தவறுகளை அவர் கண்டு பிடித்துவிடுவார்.
- வீட்டில் கணவரைத் தனியாக விட்டுவிட்டு வெளியே எங்கேயும் போகாதீர்கள். ஏனெனில் கணவன் மனம் நொந்து போகும்.
- கணவன் வீட்டுக்குத் திரும்பும்போது எங்கேயாவது போய் ஒளிந்துவிடாதீர்கள். உங்களைத் தேடி வீடு முழுக்க அலையவிடாதீர்கள். அதற்கு மாறாக அவர் வருகையை எதிர்பார்த்துக் காத்திருங்கள். சிரித்த முகத்துடன் வரவேற்பதில் மகிழ்வடையுங்கள்.
- கணவனுடன் அதிகமாக வீண் அரட்டை அடிக்காதீர்கள். அவர் மௌனமாக இருக்கும்போது தொண தொணவென்று பேசி தொல்லை கொடுக்காதீர்கள். ஏதோ கவலை அவரை வாட்டுகின்றது என நினைத்து அவரை மகிழ்வூட்ட முனையுங்கள்.
- குழந்தைகளின் நிலைகுறித்து அவரிடம் தொடர்ந்து சொல்லிய வண்ணம் இருங்கள். ஏனெனில் அவர் அவர்களின் தந்தையாக இருந்தாலும் அவரது கவனம் மற்றப் பணிகளில் சிதறி இருக்கும்.




ஃபஹீமா மாலிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "சந்திரநேரு எம்.பி. இதனை அறிவாரா?"

திகாமடுல்ல பாராளுமன்ற உறுப்பினர் சந்திரநேரு அவர்கள் அண்மைக்காலமாக தான் கலந்து கொள்ளும் வைபவங்களில் முஸ்லிம் விரோதக் கருத்துக்களைத் தெரிவித்து வருகின்றார். மேலும் 'அம்பாரை மாவட்டத்தில் வாழும் தமிழர்கள் முஸ்லிம் அரசியல் வாதிகளால் திட்டமிட்டு புறக்கணிக்கப்பட்டு வருகின்றனர்" என்றும் கூறிவருகின்றார்.



அதிலும் குறிப்பாக கடந்த அரசாங்க காலத்தில் அமைச்சராகவிருந்த மறைந்த தலைவர் எம்.எச்.எம். அஷ்ரஃப் அவர்கள் தனது சமூகமான முஸ்லிம் சமூகத்தினருக்கே சேவைகளைச் செய்து தமிழ்மக்களைப் புறக்கணித்தார். அவரைப்போலவே தற்போதைய முஸ்லிம் காங்கிரஸ் தலைவர்களும் தமிழ்ப் பிரதேசங்களையும், தமிழ் மக்களையும் புறக்கணிக்கின்றனர். இந்த நிலை தொடராமல் தமிழ் மக்களுக்கும் அவர்கள் சேவை செய்ய வேண்டும் எனவும் சந்திரநேரு அவர்கள் கூறி வருகின்றார்.

சந்திரநேரு எம்.பி. அவர்களின் கூற்று எவ்வளவுக்கு உண்மையானது என்பது அவருக்கே தெரியாது என்றே நாம் நினைக்க வேண்டியுள்ளது. இன்று அம்பாறை மாவட்ட தமிழ் மக்களை பிரதிநிதித்துவம் செய்யும் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர் இருப்பது போல் கடந்த காலங்களிலும் இருந்தனர். அதில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான கனகரெத்தினம் திருமதி ரங்கநாயகி, திவ்வியநாதன், சங்கர் போன்றவர்கள் எமது ஞாபகத்தில் உள்ளனர். குறிப்பிட்ட இந்த பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்களுக்குக் கிடைத்த நிதி ஒதுக்கீடுகள் தங்கு தடையின்றி கிடைத்து வந்தன. அந்த நிதிகளை அவர்கள் அம்பாறை மாவட்டத்தில் உள்ள தமிழ் பிரதேசங்களுக்கே செலவிட்டனர். அவைகளை ஒரு போதும் முஸ்லிம்கள் தமக்காக கேட்கவில்லை.

எனினும் அம்பாறை மாவட்டத்தில் முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களாகவிருந்த எம்.சீ. அகமது, எம்.எம். முஸ்தபா, எம்.ஏ. மஜீட், ஜலால்தீன், உதுமாலெப்பை, யூ.எல்.எம். முகைதீன், போன்றோரும், ஐ.தே.கட்சி அரசாங்கத்தில் அமைச்சராக இருந்த ஏ.ஆர். மன்சூர் அவர்களும் தமிழ்ப்பிரதேசங்களுக்கும், தமிழ் மக்களுக்கும் குறிப்பிடக்கூடிய அபிவிருத்திகளையும், உதவிகளையும் செய்திருக்கின்றார்கள். இந்தக் காலகட்டத்தில் முஸ்லிம்கள் யாரும் அவைகளைத் தடுக்கவில்லை.

அதனையடுத்து முஸ்லிம் காங்கிரஸுக்கு அதிகாரம் கிடைத்தது. மறைந்த மாபெரும் தலைவர் அல்-ஹாஜ் எம்.எச்.எம். அஷ்ரஃப் அவர்களுக்கு அமைச்சர் பதவி கிடைத்தவேளை முஸ்லிம் சமூகத்தின் தேவைகளுக்கு முன்னுரிமையளித்த அன்னார், தமிழ் சமூகத்தையோ, அல்லது சிங்கள சமூகத்தையோ மறக்கவில்லை. புறக்கணிக்கவுமில்லை. அம்பாறை மாவட்டத்தில் உள்ள தமிழ் பிரதேசங்களுக்கு இதற்கு முதல் எந்த தமிழ், சிங்கள, முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினரும், அல்லது அமைச்சரும் ஒதுக்கீடு செய்யாத, பிரமிக்கத்தக்க நிதியை ஒதுக்கீடு செய்து அபிவிருத்தியடைய வைத்தனர். தமிழ் மக்களுக்கு உதவிகளையும் செய்தார். மேலும் தமிழ் சகோதரர்களுக்கு தனது அமைச்சில் வேலைவாய்ப்பினையும் வழங்கினார். இதில் அம்பாறை மாவட்டத்தில் 1997ஆம் ஆண்டு தனது அமைச்சின் ஊடாக மர்ஹூம் எம்.எச்.எம். அஷ்ரஃப் அவர்கள் தமிழ் பிரதேசங்களுக்கு செய்த நிதி ஒதுக்கீடுகளில் சிலதை உதாரணத்திற்கு இதன் கீழ் தருகின்றோம்.

01. சுகாதார நிலையம் - வீரமுனை 450,000
02. கமு/விநாயகர் வித்தியாலயம் - சவளக்கடை 300,000
03. விஞ்ஞான கூடம் - அன்னமலை நாவிதன் வெளி. ம.வி. 600,000
04. விஞ்ஞான கூடம் - கமு/ராணமடு இந்து ம.வி 600,000
05. கமு/வீரச்சோலை தமிழ் வித்தியாலயம் 300,000
06. நாவிதன் வெளி கிராமோதய நிலையம் 100,000
07. கமு/ மாணிக்கமடு தமிழ் ம.வி. இறக்காமம் 350,000
08. சனசமூக நிலையம் - மல்லிகைத்தீவு 300,000
09. சவளக்கடை அக்றயின் சேவா நிலையம் 225,000
10. வாசிகசாலை, பாண்டிருப்பு 300,000
11. தளபாடங்களுக்காக - பாண்டிருப்பு வாசிகசாலை 31,000
12. சிவசக்தி வித்தியாலயம் - நற்பிட்டிமுனை (த.பி) 400,000
13. விபுலானந்த வித்தியாலயம் - நற்பிட்டிமுனை (த.பி) 400,000
14. பாண்டிருப்பு மயான எல்லைச் சுவர் நிர்மாணம் 1500,000
15. காரைதீவு கேட்போர் கூடம் 1500,000
16. ஆர்.கே.எம். மகளிர் பாடசாலை மாடிக்கட்டிடம் - காரைதீவு 20,00,000
17. கமு/ அட்டப்பளம் விநாயகர் வித்தியாலயம் 200,000
18. கமு/ விநாயகர் வித்தியாலயம் - மதில்சுவர் - நிந்தவூர் 400,000
19. விபுலானந்த அநாதை விடுதி பூர்த்தி (ஆலயடிவேம்பு) 500,000
20. பதிவாளர் காரியாலயம் திருத்த வேலை (ஆலயடிவேம்பு) 800,000
21. கலாசார மண்டப மிகுதி வேலை (ஆலயடி வேம்பு) 250,000

ஆகியன 1997ஆம் ஆண்டின் நிதி ஒதுக்கீடுகளில் சிலதாகும். இதுதவிர 1998, 1999,2000 ஆண்டுகளில் மல்வத்த, வளத்தாப்பிட்டி உட்பட அம்பாறை மாவட்டத்தில் உள்ள தமிழ் பிரதேசங்கள் பலவற்றுக்கு அன்னார் பல லட்சங்களை அபிவிருத்திகளுக்காக ஒதுக்கீடு செய்திருக்கின்றார். மேலும் மட்டக்களப்பு, திருகோணமலை, போன்ற மாவட்டத்தில் உள்ள தமிழ் பிரதேசங்களுக்கும் அமைச்சர் என்ற ரீதியில் மர்ஹூம் அல்-ஹாஜ் எம்.எச்.எம். அஷ்ரஃப் அவர்கள் தனது நிதியினை ஒதுக்கீடு செய்துள்ளார் என்பது மறுக்கவோ, மறைக்கவோ முடியாத உண்மையாகும். அன்னாரின் தனித்துவமான பாணியில் இதுவும் ஒன்றாகும். இதற்காக அன்னார் தமிழ் மக்களிடமிருந்து எதையும் எதிர் பார்க்கவில்லை.

விடயம் இப்படியிருக்க அம்பாறை மாவட்டத்தில் தமிழ் மக்கள் புறக்கணிக்கப்பட்டு வருகின்றார்கள் என்று மேடைக்கு மேடை பேசிவருகின்ற சந்திரநேரு அவர்களிடம் வடக்கு, கிழக்கில் உள்ள தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் இலங்கை சுதந்திரமடைந்தகாலத்திலிருந்து இங்கு வாழ்கின்ற முஸ்லிம்களுக்குச் செய்திருக்கும் சேவைகள், அபிவிருத்திகள், நன்மைகள் என்ன? என்று முஸ்லிம் மக்கள் சார்பாக நாம் கேட்டால் அவர் பதிலாக எதைச் சொல்வார்? எனினும் நாம் கேட்கமாட்டோம். அப்படியொரு அரசியலை எமது தலைவர்கள் எங்களுக்குச் சொல்லித்தரவில்லை.

இங்கே இந்த விபரங்களை ஏன் தருகிறோமென்றால் உண்மைகளை மூடி மறைக்கவோ அல்லது மறுக்கவோ கூடாது என்பதனாலேயே. மேலே குறிப்பிட்ட இவ் விபரங்கள் மூலமாக சந்திரநேரு எம்.பி. போன்றவர்களின் தவறான கருத்துக்களும், பேச்சுக்களும் தவிர்க்கப்பட்டு தமிழ் முஸ்லிம் ஒற்றுமை தொடரவேண்டும். இதுவே எமது விருப்பமாகும்.

**எம்.எல்.எம். முஸ்தபா**
**பொது செயலாளர்**
**முஸ்லிம் சமூக நலன் பேணும் அமைப்பு**
**மருதமுனை**

# சினிமாவும் சமூகச் சீர்கேடும்

இப்பொழுது தொலைக்காட்சியில் பலதரப்பட்ட நாடகங்கள், சினிமாப்படங்கள் என அதிகமாகக் காட்டப்பட்டு வருவதனால் இன்று அநேகமானோரின் கவனமும் தொலைக்காட்சியின் பக்கமே திரும்பியுள்ளது.

சினிமாப்படங்கள் பார்ப்பது பாவமான செயல் என எண்ணியிருந்த எமது சமூகப் பெண்களும், இப்போது தங்கள் வீட்டில் இருந்து கொண்டு தொலைக் காட்சியில் திரைப்படங்களைப் பார்ப்பதிலேயே மூழ்கியிருப்பதும் வருந்தத்தக்கது.

அதனால், தாங்கள் அன்றாடம் செய்யும் வீட்டு வேலைகளிலும் கவனம் கொள்ளாமல் திரைப் படங்கள் பார்ப்பதிலேயே அதிக கவனம் செலுத்து வோரும் உண்டு.

இன்றைய சினிமாப்படங்கள் காதலிப்பது எப்படி? கொலை செய்வது எப்படி? கொள்ளையடிப்பது எப்படி? என்பதையெல்லாம் மிகக் கச்சிதமாகக் கற்றுக் கொள்கின்றன.

அதனால், கல்வி கற்கும் மாணவ மாணவிகளின் எதிர்காலம் பெரிதும் பாதிப்படையக்கூடிய ஓர் துர்ப்பாக்கிய நிலை உருவாகி வருவதும் குறிப்பிடத்தக்கது.

இன்னும் தங்களுடைய வயது வந்த பெண் பிள்ளைகளையும், இளஞ்சிறார்களையும் தங்கள் கூடவே வைத்துக் கொண்டு குடும்பத்துடன் இருந்து திரைப்படங்களில் வரும் அசிங்கமான காதல் காட்சிகளையும் பார்த்துக் கொண்டிருக்கும் தாய்மார்களும் உண்டு.

அதனால் நல்வழி காட்டவேண்டிய தாய்மார்களே தங்களது பிள்ளைகளுக்குத் தாங்களே தவறான பாதையை விட்டுச் செல்லவும் வழிகாட்டிகளாக இருப்பதை யிட்டும் நாம் கவலை கொள்ளாமல் இருக்க முடியாது.

இதனை உற்று நோக்கும் போது அசையாத இறை நம்பிக்கையுடன் இருந்து வரும் எமது மக்களின் ஈமானை எந்த அளவுக்கு இன்றைய திரைப்படங்கள் திசை திருப்பிக் கொண்டிருக்கின்றது என்பதையும் நாம் ஒவ்வொருவரும் கவனத்தில் கொள்ள வேண்டியது அவசியம்.

இந்த நிலை தொடருமேயானால் எமது சமூகம் கெட்டுக் குட்டிச் சுவராகிவிடும் என்பதில் சந்தேகமே இல்லை.

தொலைக் காட்சியில் சில நல்ல நிகழ்ச்சிகளைப் பார்ப்பதில் தவறில்லை. ஆனால் நம் ஈமானைப் பழுதாக்கக் கூடிய காட்சிகளை பார்ப்பதுதான் தவறு.

ஆகவே, திரைப்படங்கள் பார்ப்பதில் கழிக்கும் நேரத்தை, திக்ர், ஸலவாத், குர்ஆன் ஓதுவது போன்ற நல்ல அமல்களைச் செய்து, அல்லாஹ்வின் திருப் பொருத்தத்தை பெற நாம் ஒவ்வொருவரும் முயற்சிப்போமாக.

**கோட்டைமுனை எஸ். ரி. ஆரிப்**

## ஆப்கானிஸ்த்தானில் ...

சிலையுடைப்பை நிறுத்தியுள்ளனர். அமெரிக்க மற்றும் சியோனிச ஊடகங்கள் அடிக்கடி கூறும் மற்றுமொரு விடயம்தான் "எஞ்சியிருக்கும் தலிபான்கள்" போன்ற பதங்கள். ஆனால் உண்மையில் நாம் கூற வேண்டிய பதம் எஞ்சியிருக்கும் அமெரிக்கக் கூட்டுப்படையினர் என்ற பதம்தான். தாம் கைது செய்ததாகக் கூறி குவாண்டவாமோ குடாவில் உள்ள சிறையில் அடைத்துவைத்து கொடுமைப் படுத்தப்படுபவர்கள் எல்லாம் எவ்விதக் குற்றமும் செய்யாத சாதாரண பொது மக்களே ஆனால், நூற்றுக்கணக்கான அமெரிக்கக் கூட்டுப்படையினர் யுத்தங்களின்போது தாலிபான்களினால் கைது செய்யப்பட்டுள்ளனர் என்ற செய்திகள் முற்றாக மூடிமறைக்கப்பட்டுள்ளன. எனவே, நீங்கள் நினைப்பதுபோன்ற தாலிபான்கள் கோழைத்தனமான அமெரிக்கக் கூட்டுப்படைகளின் விமானக் குண்டு வீச்சிற்கு பயந்து பின்வாங்கவும் இல்லை. புறமுதுகுகாட்டி தப்பியோடவும் இல்லை. அவ்வாறான கோழைகளாகத் தாலிபான்கள் இருந்திருந்தால் உஸாமாவை அமெரிக்காவிடம் ஒப்படைத்துவிட்டு தமது ஆட்சிபீடத்தில் நிலையாய் இருந்திருப்பார்கள். மாறாக பொதுமக்கள் அநியாயமாகக் கொல்லப்படுவதைத் தவிர்க்கவும் தரைவழியாக அமெரிக்கக் கூட்டுப்படையினரை உள்ளே ஈர்த்தெடுக்கவும் கூட்டுப்படையினருக்குக் கேடயமாகப் பயன்படுத்தப்பட்ட வடக்குக் கூட்டணியினருடன் யுத்தம் ஏற்பட்டு மேலதிக இழப்புகள் முஸ்லிம் தரப்பிலேயே ஏற்படுவதைத் தவிர்க்கவுமே ஒரு யுத்ததந்திர நடவடிக்கையாக தமது சகல ஆயுதங்களையும் பாதுகாப்பான இடங்களுக்கு நகர்த்திவிட்டு தாமும் பின்வாங்கிக் கெரில்லாத் தாக்குதல்களுக்குத் தயாராகினர். போகும்போது மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றி இஸ்லாமிய முறைப்படி மீண்டும் நாட்டை ஆட்சி செய்வோம் என்பதை மட்டும் சொல்லிவிட்டுச் சென்றனர். அவர்களின் திட்டப்படியே நாட்டின் பல நகரங்களையும் படிப்படியாகக் கைப்பற்றி தமது சட்டத்தை நிலை நாட்டி வருகின்றனர் என்பது வெளிப்படையான உண்மை. இதே கதிதான் ரஷ்ய ஆக்கிரமிப்பின் போதும் ரஷ்யாவிற்கு நேரிட்டது.

மாறாக சிறு சிறு தாக்குதல்களை மேற்கொண்டுவிட்டு அரசு, கூட்டுப்படைகளின் நடவடிக்கைகளையும் உதவி நிறுவனங்களின் நடவடிக்கைகளையும் குழப்பிவிட்டுத் தப்பியோடுகின்ற கோழைத் தனமான அற்பத்தனமான தாக்குதல்கள் அல்ல தாலிபான்களின் தாக்குதல்கள். எனவே தாலிபான்களின் போராட்ட வெற்றியின் பின்னணி ஆயுதப்பலத்தின் உதவியால் மாத்திரம் பெறப்படும் வெற்றியல்ல. மாறாக, அசைக்க முடியாத திடமான இறை நம்பிக்கைக்குக் கிடைக்கும் வெற்றியாகும் 'அசத்தியம் என்றுமே நிலைத்திருப்பதில்லை. ஆனால் சத்தியம் என்றென்றும் நிலைத்தே தீரும்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலிகளின் திட்ட வரையில் முஸ்லிம்கள்?

– ஸிராஜ் மஷ்ஹூர் –



இடைக்கால சபை தொடர்பாக புலிகள் கையளித்துள்ள திட்ட வரைவிலுள்ள 'சொற்களின் அரசியல்' முஸ்லிம்களைப் பொறுத்தவரை மிக முக்கியமானது. அது பற்றியே இக்கட்டுரை ஆராய முற்படுகிறது. ஏலவே தமிழ்ப்படுத்தப்பட்டுள்ள ஆவணத்தில் இச் சொற்களின் நுட்பங்கள் பல தவறவிடப்பட்டுள்ளமையை இங்கு அவசியம் குறிப்பிட்டாக வேண்டும்.

இதன் தலைப்பில் "The Proposal by The Liberation Tigers of Tamil Eelam on behalf of the tamil people" என்று வருகிறது. அதாவது 'தமிழ் மக்கள் சார்பாக தமிழீழ விடுதலைப்புலிகளின் முன்மொழிவு" என்பது இதன் அர்த்தம். புலிகள் தாம் 'தமிழ் மக்களை' மட்டுமே பிரதிநிதித்துவம் செய்கின்றனர் என்பதை இதன் மூலம் ஏற்றுக் கொள்கின்றனர். மறுதலையாகச் சொன்னால், முஸ்லிம்களை அவர்கள் பிரதிநிதித்துவம் செய்யவில்லை என்பதை இதன் மூலம் 'தெளிவாக' ஏற்கின்றனர். அவர்கள் வழமையாகக் குறிப்பிடும் 'தமிழ் பேசும் மக்கள்' என்ற சொற்றொடரை இது கொண்டிருக்கவில்லை. அவ்வாறாயின் அது, "On behalf of the Tamil Speaking People" என்று அமைந்திருக்க வேண்டும். ஆக, முஸ்லிம்களைப் பிரதிநிதித்துவம் செய்ய முடியாத தமது இயலாமையை - அதன் 'அரசியல் நியாயத்தை' அவர்கள் ஒப்புக்கொள்கின்றனர் என்பதே இதன் உட்கிடை.

இதன் தலைப்பில் "An Interim Self - Governing Authority for the NorthEast of the Island of Sri Lanka" என்று குறிப்பிடப்படுகிறது. இங்கு 'The Island of Sri Lanka' என்று சொல்வதன் அரசியல் என்ன? வெறுமனே 'Of Sri Lanka' என்று மட்டும் குறிப்பிடாதது ஏன்? இலங் கைத்தீவில் சிறிலங்கா, தமிழீழம் என்ற இரு நாடுகள் உள்ளன என்ற புலிகளது அடிப்படைக் கோட்பாட்டிலிருந்தே இவ்வாசகம் தேர்ந் தெடுக்கப்பட்டுள்ளது.

அடுத்து இதன் முதற்பந்தி சட்டவாட்சி, மனிதஉரிமைகள், அனைத்து நபர்களினதும் சமத்துவம், மற்றும் 'மக்கள்களது' (கவனிக்கவும்: 'மக்களது' அல்ல) சுயநிர்ணய உரிமை போன்ற தத்துவங்களின் அடிப்படைகள் மீது உறுதிகொண்டிருப்பதாகக் கூறுகிறது. இது 'the right to self - determination of Peoples" என்று வருகிறது. இங்குள்ள 'Peoples' என்பதன் அர்த்தம் 'மக்கள்' அல்ல. வசதிக்காக இதை 'மக்கள்கள்' என்று தமிழ்ப்படுத்தலாம். அதாவது 'தமிழ் மக்கள் + சிங்கள மக்கள் = மக்கள்கள்' என்ற சமன்பாடே இதன் விரிந்த பொருள். இதில் 'முஸ்லிம் மக்கள்' எங்கே போனார்கள்? அவர்கள் எப்போதும் போலவே இதிலும் காணாமல் போயிருக்கிறார்கள்.

அதேவேளை வடக்கு கிழக்கு என்று வரும்போது, 'The People of the NorthEast' - 'வடக்கு கிழக்கின் மக்கள்' என்பதே பிரயோகிக்கப்படுகிறது. அதாவது வடக்கு கிழக்கில் ஒரேயொரு 'மக்கள்' மட்டுமே இருக்கின்றனர் என்பதே இதன் பொருள்.

இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபையின் உறுப்புரிமை பற்றிய ஏற்பாட்டில் மட்டுமே 'முஸ்லிம்கள்' பற்றிப் பேசப்படுகிறது. இதன் உருவாக்கத்தில் முஸ்லிம் சமூகத்தினது பிரதிநிதிகள் தமது பங்கினை ஆற்ற உரிமையுடையவர்கள் என்று குறிப்பிடப் படுகின்றது.

2.1. a . LTTE யினால் நியமிக்கப்படும் அங்கத் தவர்கள்.
2.2. b . சிறிலங்கா அரசாங்கத்தால் நியமிக்கப்படும் அங்கத்தவர்கள்.
2.3. c . வடகிழக்கில் உள்ள முஸ்லிம் சமூகத்தால் நியமிக்கப்படும் அங்கத்தவர்கள்.
இங்கு 2.3. c. Members appointed by the Muslim community in the NorthEast' என்பதே மூலவாசகம்.

முதலாவது இங்கு முஸ்லிம்கள் 'community' - 'சமூகம்' ஆகப் பார்க்கப்படுகிறார்கள். 'People' - 'மக்கள்' ஆக அல்ல. ஏனெனில் 'மக்கள்'என்பது அரசியல் அர்த்தத்தில் மிகவும் கனதியான பதமாகும். 'மக்கள்' அரசியல் அதிகாரத்தை உடையவர்கள். ஜனநாயக அமைப்பில் 'மக்கள் இறைமையே' அடிப்படையானது. இவ்வாறு முஸ்லிம்களை 'மக்களாகக்'கொள்ளாது, மிக மேலோட்டமாக 'சமூகமாக' ஆக்கிவிடுவது புலிகளுக்கு மிகவும் வாய்ப்பானது. முஸ்லிம்களை மிக எளிதாகப் புறந்தள்ளுவதற்கு (exclude) இதை விடவும் வேறு என்ன ஆதாரம் வேண்டும்?

அதாவது முஸ்லிம்கள் அதிகாரத்தில் பங்கு கேட்க முடியாது. அவர்கள் வடகிழக்கில் உள்ள ஒரு 'குழுவினர்' மட்டுமே என்பதே இதன் உட்கிடை. ஏற்கனவே கைச்சாத்தான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் முஸ்லிம்களை 'குழுவாகப்' பார்த்த அனுபவம். இங்கு அவர்களுக்கு இன்னும் வசதியாக ஆகியிருக்கிறது.

'வடகிழக்கில் உள்ள முஸ்லிம் சமூகத்தால் நியமிக்கப்படும் அங்கத்தவர்கள்' என்பதன் அர்த்தம் என்ன? இதற்கு மேல் புலிகளும் இலங்கை அரசாங்கமும் தத்தமது அங்கத்தவர்களை நியமிப்பார்கள் எனத் தெளிவாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அதாவது நியமிப்பவர் யார் என்பது மிகக்குறிப்பாகவும் (Specific) தெளிவாகவும் உள்ளது.

ஆனால், 'வடகிழக்கில் உள்ள முஸ்லிம் சமூகம்' என்று பொதுவாக (Genaralised) குறிப்பிடப்படுவதன் அர்த்தம் என்ன? நியமிப்பவர் யார்? முஸ்லிம் காங்கிரஸா? தேசிய ஐக்கிய முன்னணியா? அஷ்ரஃப் காங்கிரஸா? அல்லது பள்ளிவாசல் சம்மேளனமா? அல்லது இவை எல்லாவற்றினதும் கலவையா? அல்லது அரசாங்கமா? அல்லது புலிகள் தாமே முஸ்லிம் பிரதிநிதிகளை நியமிப்பார்களா? இக் கேள்விக்குத் தெளிவான விடை இல்லை. இது யாராகவும் இருக்கலாம். வசதிக்கேற்ப இதை வியாக்கியானப்படுத்தலாம் என்ற தந்திரமே இதில் ஒளிந்திருக்கிறது.

இதில் குழப்பத்தைப் 'பேணுவதன்' மூலம் முஸ்லிம்களைப் பிரித்தாள்வது இலகுவானது. கடந்த காலங்களில் முஸ்லிம் அரசியல் தலைமைகளை நிராகரித்துவிட்டு, சிவில் சமூக நிறுவனங்களோடு (குறிப்பாக பள்ளிவாசல் சம்மேளனங்களோடு) புலிகளது பிராந்தியத் தளபதிகள் பேசிவந்துள்ளனர். முஸ்லிம்களைக் கூறுபடுத்தி அணுகுவதன் மூலமும், பிராந்தியப் பிரச்சினைகளை மட்டும் மட்டுப்படுத்திப் பேசுவதன் மூலமும் இரு விடயங்களைச் சாதிக்கலாம் என அவர்கள் கருதுகின்றனர்.

01. வடக்கு கிழக்கு முஸ்லிம்களது ஒருமித்த 'தேசியப் பண்பைக்' கூறுபடுத்திச் சிதைத்தல்.
02. முஸ்லிம்களுக்கு 'அரசியல்' பிரச்சினைகள் இல்லை. உள்ளூர்மட்டப பிரச்சினைகளே உள்ளன என நிறுவ முற்படல்.

இடைக்கால தன்னாட்சி அதிகார சபையிலுள்ள வடகிழக்கென்பது 'ஒற்றையாட்சி' அமைப்பே. இங்கு பல்லினத் தன்மையோ, பன்மைத்துவப் பண்போ (Pluralism) இல்லை என்பதே இதன் சாரம் எனலாம்.

இலங்கையில் 'ஒற்றையாட்சி' தீர்வைத் தராது. எனவே 'சமஷ்டி' அடிப்படையிலேயே தீர்வு காண முடியும் என்று ஒஸ்லோவில் வைத்து அரசுடன் உடன்பட்ட அதே புலிகள், வடக்கு கிழக்கில் ஒற்றையாட்சியே தீர்வு என்கின்றனர். வடகிழக்கில் ஒன்றுக்கு மேற்பட்ட தன்னாட்சிப் பிராந்தியங்களின் கீழ் ஆகக்குறைந்த அதிகாரத்தையாவது - 'யாருடனும்' பகிர அவர்கள் தயாரில்லை.

'NorthEast' - 'வடகிழக்கு' என்ற சொல்லே கையாளப்பட்டிருக்கிறது. 'North and East'- 'வடக்கு கிழக்கு' என்று கையாளப்படவில்லை. அதாவது, வடகிழக்கு இணைப்பு எந்த மறுபரிசீலனைக்கும் அப்பாற்பட்டது. அது நிரந்தரமானது என்பதே அவர்களது நிலைப்பாடாகும்.

'நிபந்தனையற்ற வடக்கு கிழக்கு இணைப்பை' ஏற்கமுடியாது. முஸ்லிம்களது அரசியல் அபிலாஷைகளைத் திருப்தி செய்யும் ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டால் மட்டுமே, வடக்கு கிழக்கு இணைப்பை ஆதரிக்க முடியுமென்ற 'முஸ்லிம் நிலைப்பாட்டிற்கு' புலிகளிடம் எந்தப் பெறுமானமும் இல்லை.

இடைக்கால தன்னாட்சி அதிகார சபையில் உள்ளடங்கியிருக்கும் மாவட்டங்களை விபரிக்கையில், முதன்முதலில் அம்பாறையைக் குறிப்பிடுவதன் அவசியம் என்ன? அது ஒரு முஸ்லிம் பெரும்பான்மை மாவட்டம் என்பதாலா? வடக்கு கிழக்கில் புலிகள் தமது வழமையான நிர்வாக அமைப்பில் ஒவ்வொரு மாவட்டத்திற்கென்றும் தனித்தனிக் கட்டமைப்புகளைக் கொண்டிருக்கின்றனர். ஆனால் மட்டக்களப்பு மாவட்டமும், அம்பாறை மாவட்டமும் இணைக்கப்பட்டு, 'மட்டு - அம்பாறை' என்று தனியொரு கட்டமைப்பாக புலிகளால் ஆக்கப்பட்டிருப்பதன் பின்னுள்ள அரசியலை விளங்கினால், மேலே அம்பாறையை முதலில் குறிப்பிட்டிருப்பதன் அரசியலையும் புரிந்து கொள்ளலாம்.

வடகிழக்கில் எந்த மதத்திற்கும் முன்னுரிமை தரப்படாது. 'மதச்சார்பின்மை' பேணப்படும் என்று குறிப்பி டப்பட்டுள்ளது. முஸ்லிம் களது தனித்துவமான சமய, கலாசார உரிமைகள் இதில் மறுக்கப்படுமா? இதற்கான தெளிவான பதில்கள் இல்லை. 'பாரபட்சம் காட்டப்படமா ட்டாது' போன்ற வார்த்தைகள் பல்வேறு மூன்றாம் மண்டல நாடுகளின் அரசியல் அமைப்புகள் போலவே உள்ளன. அவற்றுக்கு நடைமுறையில் எந்தப் பெறுமானமுமே இல்லை.

இவ்வாறு நுணுகி நோக்கினால், புலிகளது திட்ட வரைவில் உள்ளடங்கியிருக்கும் 'சொற்களின் அரசியலை' நன்கு புரிந்து கொள்ளலாம். யூகோஸ்லாவிய சமஷ்டி சிதைந்தபோது, ஐரோப்பாவில் பொஸ்னியா என்ற இன்னொரு முஸ்லிம் நாட்டை உருவாக்குவதில் முன்னோடியாக நின்றவரும், அதன் முதல் ஜனாதிபதியுமான அலி இஸ்ஸத் பெகோவிச்சின் ஒரு கருத்தை நிறைவாகத் தருவது மிகவும் பொருத்தமானது. "ஒரு யுத்தம் முடிவடைந்திருக்கிறது. இன்னும் பல யுத்தங்கள் இனிமேல்தான் தொடங்கப்போகின்றன." நமது அரசியல் சூழலிலும் இவ்வார்த்தைகளுக்கு அர்த்தம் இருப்பது போலவே தெரிகிறது.

## மின் ஒளிபெறும் கரம்பைக் கிராமம்

வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் புனர்வாழ்வு மீள் குடியேற்ற செயலணியின் தலைவருமான றிஷாட் பதியுதீன் அவர்களின் நிதி ஒதுக்கீட்டினால் 17-11-2003 அன்று வீதி விளக்குகள் இடம்பெயர்ந்த மக்கள் வசிக்கின்ற கரம்பை கிராமங்களுக்கு வழங்கப்பட்டன. கரம்பை, சபா-மர்வா கிராமத்திற்கும் இவ்வீதி விளக்குகள் வழங்கப்பட்டதால் கரம்பைப்பகுதி மின் ஒளியில் ஒளி பெற்றுள்ளது.

கரம்பை சபாமர்வா கிராம மக்கள் இவ்வளவு காலமாக இருட்டினுல் மூழ்கி இருந்த போது வீதி விளக்குகள் தற்போது பொருத்தப்பட்டதால் கரம்பை மக்கள் றிஷாட் பதியுதீன் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கின்றனர். இருட்டில் நடமாடமுடியாமல் கஷ்டப்பட்டவர்கள் சந்தோசத்துடன் நடமாடுகின்றார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

எஸ். அப்துல் ஜாஹித்-பாலாவி

## அமைச்சர் அஸ்வர் மீது வீண் பழிபோடலாமா?

நுரைச்சோலையில் அமைக்கப்பட்டுள்ள வெறும் தபாலக கட்டிடத்திற்கு மட்டும் கணக்கு கூட்டிய இப்னுமசூத் அவர்கள், அந்த தபாலகத்திற்கு உள்ளே வைக்கப்பட்டுள்ள அதி நவீன கருவிகளுக்கும், பெக்ஸ் மற்றும் தொலைத்தொடர்பு சாதனங்களுக்கும் ஏன் கணக்கு கூட்டவில்லை? அப்படி கூட்டியிருந்தால் 65 லட்சங்கள் செலவாகியிருப்பது புலப்படும்.! இப்னு மசூத் அவர்கள், அமைச்சர் அஸ்வர் மீது, 65 லட்சம் ரூபாய் ஊழல் குற்றச்சாட்டு சுமத்துவது அவரின் அப்பட்டமான வங்குரோத்துத்தனம். உண்மை தெரிந்த மக்கள் அதை ஒரு போதும் ஏற்றுக் கொள்ளத்தயாராக இல்லை. தவிர மக்கள் தொடர்பாடல் அமைச்சர் அல்ஹாஜ் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் அவர்களின் தலைமையில், அவரது அமைச்சு மூலமாகத்தான் அந்த தபாலகத்துக்கான தொழில் நுட்பக்கருவிகள், மற்றும் தளபாடங்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளபோது அமைச்சர் அஸ்வர் அவர்கள் எப்படி ஊழல் செய்திருக்க முடியும்? இதற்கு இப்னு மசூத் அவர்கள் தகுந்த பதில் தரவேண்டும்.

எஸ்.எம்.சலீம்கான், தில்லையடி - புத்தளம்

## விகிதாசாரப் பிரதிநிதித்துவ...

பிரியும் ஆபத்தும், களநிலையும் காணப்படுகிறது. தமிழ் மக்கள் இம்முறை 1,80,000க்கும் மேற்பட்ட வாக்குகளை புலிப்பிரதிநிதிகளுக்கு அளித்து ஐந்து உறுப்பினர்களையும் தமதாக்கிக்கொள்ளும் வரலாற்று வெற்றியை பெற்றுக்கொள்ளும் சந்தர்ப்பமும் உண்டு.

திருகோணமலை மாவட்டத்தில் ஒரு பிரதிநிதித்துவம் கிடைத்தாலும் கூட வன்னிமாவட்டத்தின் கள நிலவரமோ பிரதிநிதித்துவத்தைப்பற்றி கற்பனையே பண்ணமுடியாது உள்ளது. இங்கு தமிழ் மக்கள் ஒன்றுதிரண்டு வாக்களிக்க காத்திருக்கிறார்கள்.

இந்த ஆபத்தான எதிர்வரும் பொதுத்தேர்தலில் முஸ்லிம் மக்களின் பிரதிநிதித்துவம் 04ஐ தாண்டமுடியாத அரசியல் சூழலே காணப்படுகிறது. இந்தச் சூழ்நிலையில் எவ்வாறு பேரம் பேசும் சக்தி இருக்கும் என்பதை ரஊப் ஹக்கீம் அவர்களே தெளிவு படுத்த வேண்டும். வடக்கு கிழக்கில் 20க்கும் 25க்கும் இடைப்பட்ட பிரதிநிதிகளைப் பெற்று புலிகளே இலங்கை அரசியலை தீர்மானிக்கும் சக்தியாக இருக்கப்போகிறார்கள்.

இந்த இக்கட்டான சூழ்நிலையில் வடக்கு கிழக்கு முஸ்லிம்களாகிய நாம் முஸ்லிம் தேச ஆணைக்காக முஸ்லிம் அரசியல் சக்திகளை ஒரேயணியில் இணைத்து போட்டியிடச் செய்ய அழுத்தம் கொடுப்பதன் மூலமே விகிதாசாரப் பிரதிநிதித்துவ விசித்திரத்தினூடாக பறிபோகும் நமது பாராளுமன்ற பிரதிநிதித்துவத்தை காப்பாற்ற முடியும். இல்லையேல் நாடற்ற சமூகமாக மாறுவதை யாராலும் தடுக்க முடியாது போய்விடும்.

## 'இனந்தெரியாத' நபர்களுக்கு

எனது பாடல்களை நீ தண்டித்தாய்.
முதலில் தாளங்களைத் திருடினாய்
பிறகு ராகங்களைப் பறித்தாய்
இறுதியாய் இம்சித்தாய்
என் இசையை.

எனது புல்லாங்குழலின் துளைகளை
முன்னோர் பொழுது
பூட்டினாய்.
பின்,
காற்றைக் கடத்தினாய்.
இதழ்கள் திறந்தால்
இரட்டிப்பு வரியென்றாய்
கடைசியாய்
என் மூங்கில் காட்டையே
கொழுத்தி ரசிக்கின்றாய்!

உன்னைச் சுட்ட தீயை எடுத்து
என்னை ஏன் நீ
எரித்து ரசித்தாய்?

உனக்கான புதையலுக்கு
நீ நடத்தும் யாகமிது.
ஆடு கேட்கும் உன் சாமிக்கு
என்னை ஏன் பலி கொடுத்தாய்?

உன்னை 'யாரோ'
எரித்த தீயால்
என்னை நீயும்
எரித்தாய்...... ரசித்தாய்.....

என்னை எரித்த தீயை எடுத்து.........
அறி;
எவர் வைத்தாலும்
எரியும்
தீ!

யூயெல். மப்றூக்

12102003

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தங்கவடிவேல் எம்.பீ.க்கு ஒரு திறந்த மடல்

மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரான இ. தங்கவடிவேல் ஐயாவுக்கு இத்தால் எழுதிக்கொள்வதாவது:

காலாகாலமாக உங்கள் தமிழ் சமூகத்தினரிலுள்ள பேரினவாதிகளாலும், மற்றும் பெரும்பான்மை சமூகத்தினராலும் ஏமாற்றப்பட்டுவந்த முஸ்லிம் சமூகத்தினரான எமக்கு இப்பொழுது எதனை நம்புவது எதனை நம்பாமல் விடுவது என ஒன்றுமே புரியவில்லை.

கடந்த ஜுன்மாதம் கல்முனையில் இடம்பெற்ற தமிழ் அமைப்பின் பிரதிநிதிகளுடனான மாநாட்டில் நீங்கள் கலந்துகொண்டு தெரிவித்த காரசாரமான இனவாத கருத்துக்களை அறிந்து வேதனைப்பட்டேன்.

போதாக்குறைக்கு தங்களது இனவாதக் கருத்துக்களை தினக்குரல் பத்திரிகையின் நவீன இனவாதிகளும் முன்னுரிமை தந்து ஜுன் 11ஆம் திகதிய இதழில் பிரசுரித்திருந்தார்கள்.

"தமிழர்களே தமிழை வளர்த்தவர்கள், வேறெவரும் தமிழுக்கு உரிமை கோரமுடியாது. முச்சங்கங்கள் அமைத்து தமிழை வளர்த்தவர்கள் தமிழர்கள்தான். இன்று ஒரு சிலர் நாம் தான் தமிழை வளர்க்கிறோம் என்கிறார்கள். இதனை ஒரு போதும் ஏற்றுக்கொள்ளமுடியாது. தமிழை வெறும் கொச்சையாகப் பேசிவிட்டு தமிழை வளர்க்கிறோம் என்று மார் தட்டுபவர்கள் இனியாவது ஒதுங்கிக்கொள்ளட்டும். சிங்கள மக்கள் நல்லவர்கள். ஆனால் இனவாத சக்திகளே தவறாக நடந்து கொள்கின்றன". என்று அந்தச் செய்தியில் குறிப்பிடப்பட்டிருந்தது. ஆனால் இதைவிடவும் இனவாத துவேஷ வார்த்தைகளை நீங்கள் அந்த மாநாட்டில் கக்கியிருந்தீர்கள். அவை வெளிவரவில்லை.



தமிழ் வளர்த்ததாகக் கூறி தம்பட்டமடிக்கும் தங்கவடிவேல் அவர்களே! இந்த விவகாரத்திலே தாங்கள் அறியாத பல விடயங்கள் இருப்பதாக எனக்குப் படுகிறது. அவற்றில் ஒரு சிலவற்றைத் தெரியப்படுத்தலாமென நினைக்கின்றேன்.

நாட்டின் வடக்கு கிழக்கு உட்பட தென்பகுதியிலும் தமிழர்கள் தமிழைப்பேசுவதற்கு, எழுதுவதற்கு, படிப்பதற்கு அஞ்சி தறி கெட்டு ஓடிய ஒரு காலமொன்றிருந்தது. தலைநகரிலும், தென்பகுதியிலும் தமிழர் கலாசாரத்துடன் பூவும் பொட்டும் வைத்து பவனி வரப்பயந்த காலமிருந்தது. அந்த நிலை மறைந்து இன்னும் இரண்டு வருடங்கள் கூட ஆகவில்லை. அதற்குள் நீங்கள் மேற்கண்டவாறு கூறி தம்பட்டம் அடிக்கலாமா?

ஆனால் நாட்டில் அரசியல் மாற்றமோ, யுத்தமோ, சமாதானமோ எந்தச் சூழ்நிலையிலும் அஞ்சாது எம்மவர்கள் துணிந்து நின்று தமிழில் பேசினார்கள், எழுதினார்கள், படித்தார்கள், போதித்தார்கள், பிரச்சாரம் செய்தார்கள், பிரார்த்தனைகள் புரிந்தார்கள்.

வாகனப் பயணத்திலும், வழிநெடுகிலும் தமிழில் பேசுவதற்கு தமிழர்கள் தயங்கிய வேளையில் முஸ்லிம்கள் இயல்பாகவே தமிழைப் பேசினார்கள். தென்னிலங்கையிலும், கொழும்பிலும் தமிழ்ப்பத்திரிகைகளைக் கூட கையில் வைத்திருப்பதற்கு அஞ்சினார்கள். ஆனால் முஸ்லிம்கள் தமிழ்ப்பத்திரிகைகளை தாராளமாக வாங்கிப் படித்தார்கள். தொலைபேசியிலும் ஒரு வார்த்தை தமிழில் கதைப்பதற்குக்கூட தமிழர்கள் பயந்திருந்தனர். பொலிஸ் நிலையங்கள் இராணுவ முகாம்கள் என்றாலே தமிழுக்கும் தமிழர்களுக்கும் எமன். அங்கெல்லாம் அப்பாவித் தமிழர்களுக்காக அர்ப்பணித்து சேவையாற்றியவர்கள் முஸ்லிம்களே!

தமிழ் மக்கள் தங்களது உயிருக்கே போராடிக் கொண்டிருந்தபோது அவர்களுக்கு இலக்கிய, இலக்கணங்களை படைக்க எங்கே நேரமிருந்தது. அப்பொழுதெல்லாம் முஸ்லிம்கள் தமிழில் இலக்கண இலக்கியம் படைத்தார்கள். தமிழ் மாணவர்களுக்குப் போதித்தார்கள். இவற்றையெல்லாம் தங்கவடிவேல் எம்.பியால் எப்படி மறைக்க, மறுக்க முடிந்தது?

முஸ்லிம்கள் மாத்திரம்தான் கொச்சைத்தமிழில் பேசுகிறவர்கள் என்றால் தமிழர்கள் அனைவரும் என்ன வழுவில்லாத இலக்கணத்தமிழா பேசுகிறார்கள். மலையகத்தவரின், யாழ்ப்பாணத்தவரின், தென்னிந்தியரின் தமிழ் பற்றி இவருக்குத் தெரியாதா?

சென்ற ஆண்டு கொழும்பில் இடம்பெற்ற உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாட்டுக்கு வருகை தந்து எழுதியிருந்ததைப்பார்த்து வாசித்த ஒரு தமிழ் அமைச்சர் ஒருவரின் "தமில்" உச்சரிப்புக் கேட்டு மாநாட்டுக்கு வருகை தந்தோர் வெட்கித் தலை குனிந்தார்கள்.

இதேவேளை இலங்கை முஸ்லிம்களின் தமிழ்ப்புலமையைக்காட்ட இந்தியாவில் இருந்து வெளிவரும் "தற்காலத் தமிழ் அகராதி" ஆக்கக் குழுவில் இலங்கைத் தமிழ்ச் சொற்கள் சார்பில் பேராசிரியர் எம்.ஏ. நுஃமான் மாத்திரமே தேர்ந்தெடுக்கப்பட்டார் எனும் ஓர் உதாரணமே போதுமானதாகும். இதைவிட இலங்கையிலும் இந்தியாவிலும் ஏன் வெளிநாடுகளிலும் கூட முஸ்லிம்கள் தமிழ் வளர்த்துக் கொண்டிருக்கும் பல்வேறு உதாரணங்களை எடுத்துக் கூறலாம்.

இலங்கையிலிருந்து புலம் பெயர்ந்து உலகின் பல்வேறு நாடுகளிலும் வாழ்ந்து கொண்டிருக்கும் தமிழர்கள் அவர்களின் இளசுகள் இன்று தமிழ் மொழியையா வளர்த்துக்கொண்டிருக்கிறார்கள் என்பது தங்கவடிவேல் எம்.பிக்குத் தெரியாதா என்ன? சில வேளைகளில் தமிழ் மொழியைப் பேசுவதற்கு அவர்கள் தம்பிள்ளைகளுடன் சங்கடப் பட்டுக்கொண்டிருப்பதை நான் மேற்குத்தேச நாடுகளில் நேரடியாகக் கண்டேன். இலங்கையிலிருந்து புலம்பெயர்ந்த தமிழ்ப்பெற்றோர்களே இதனைப் பல்வேறு சந்தர்ப்பங்களில் தெரிவித்திருக்கிறார்கள்.

ஆனால் தமிழ் மொழி பேசும் முஸ்லிம்கள் அவர்கள் எந்த நாட்டில் இருந்தாலும் தமிழ் மொழியைப் பேசுகிறார்கள். எழுதுகிறார்கள். தம் குழந்தைகளுக்குப் போதிக்கிறார்கள். அதேவேளை முஸ்லிம்கள் வேறெந்த மொழியையும் கீழ்த்தரப்படுத்துவதுமில்லை. உரிய மொழிக்கு உரிய கண்ணியத்தைக் கொடுத்து காத்து வருகின்றார்கள். இத்தகைய கொள்கைகளைக் கொண்ட முஸ்லிம்களை கொச்சைத் தமிழில் பேசுபவர்கள் என இழிவு படுத்துவது நாகரிகமானதல்ல.

தங்கவடிவேல் எம்.பி அவர்களின் உத்தியோகபூர்வ ஊடகவியலாளர் கூட ஒரு பிரபலகவிஞரான முஸ்லிம்தானே. இதனைக் கூட தங்கவடிவேல் எம்.பி மறந்துவிட்டாரா? சமீபத்தில்தானே அவருக்கு யாழ்ப்பாணத்தில் பொன்னாடை போத்திக்கௌரவித்தார்கள். அப்படியானால் தங்கவடிவேல் எம்.பியின் கூற்றுப்படி கொச்சைத்தமிழ் பேசும் ஒரு முஸ்லிம் நபருக்கு எப்படி பொன்னாடை போர்த்தினார்கள்.

இது எல்லாவற்றையும் விட வேடிக்கை என்னவென்றால், "சிங்கள மக்கள் நல்லவர்கள். இனவாத சக்திகளே தவாறக நடந்து கொள்கின்றன" என்றும் அவர் கூறியிருப்பது. சிங்கள மக்கள் நல்லவர்கள் என்றால் அந்த நல்லவர்களை ஏன் அநியாயமாக நீங்கள் கொலை செய்தீர்கள்? அது ஒரு புறமிருக்க நல்லவர்களாகிய நீங்கள் ஏன் முஸ்லிம்களை கிழக்கில் படுகொலை செய்து வடக்கில் அவர்களது பூர்வீகப் பூமியிலிருந்து இரவோடிரவாக விரட்டியடித்தீர்கள். இப்படி உங்களால் விடையளிக்க முடியாத பல கேள்விகளைக் கேட்டுக் கொண்டே போகலாம். தமிழுக்கு நாங்கள்தான் உரிமையாளர்கள் என்று மார்தட்டும் நீங்கள் இலங்கை இனப்பிரச்சினைத்தீர்வில் முஸ்லிம்கள் தனித்தரப்பாகப் பங்குபற்ற வேண்டிய அவசியமில்லை. அவர்களும் தமிழ் மொழி பேசுவதால் அவர்கள் தமிழர்களாகக் கருதப்பட்டு அவர்களுக்காகவும் நாங்கள் பேசி வருகிறோம் என எங்களை ஏமாற்றுகிறீர்கள்.

சந்தர்ப்பத்துக்கு ஏற்றபடி எங்களைக் கறிவேப்பிலையாகப் பாவித்து விட்டு எடுத்து வீசி விடுவதில் முதலாவது பேரினவாதிகளான நீங்கள் குறிப்பிட்ட "நல்ல சிங்கள மக்களும்"இரண்டாவது பேரினவாதிகளான உங்கள் தமிழ்ச் சமுகமும் சாமர்த்தியர்கள் என்பதை நாம் நன்கு அறிவோம். ஆனால் காலமெல்லாம் ஒருவனை, ஒரு சமூகத்தை ஏமாற்ற முடியாது என்பது சரித்திரம் உங்களுக்கும், எங்களுக்கும் ஏனையோருக்கும் விட்டுச் சென்ற அனுபவப் பாடமாகும் என்பதை நினைவிற் கொள்ளுங்கள்.

அன்புடன்
மனிதநேய அக்கறையுள்ள,
ஹமீட் ஏ. ஹுஸைன், ஏறாவூர்.

## தலைப்பிறை தந்த தத்துவப் பெருநாள்

கவிஞர் - பதியதளாவ பாறூக்

கடமைக்கு கால்வைத்த
ரமழான் பிறை
நடந்து வந்து
விரதப் பரீட்சையை
அடியார்கள் மத்தியில்
நடத்தி விட்டு
அகன்று விட்டது!

ஆமாம்!
எழுதிய விதிக்குள்
எழுந்த பிறை
முப்பது நாள் விரதத்திற்குள்
முகத்தைக் காட்டி
மாண்பு கூறி
மகத்தான பேறுகளால்
மனிதனைப் புனிதனாக்கி
ஒரு வைத்தியராக
விடைபெற்றிருக்கிறது!

தத்துவங்கள்
தத்தெடுத்து வந்த
இந்த
ரமழான் மாதம்
பசிக்குள்ளிருந்து
பக்குவப்பட்டுக் கொண்ட
முக்தி பெற்றவர்களின்
முகவரிகளை
இறைவன்பால்
எழுதிக்காட்டியிருக்கிறது!

ஓ...!
அடியார்கள் தாங்கிய
பசியும் தாகமும்
நபுசுப் புலியின்
போராட்டத்திற்கு முன்
இறைவனுக்கஞ்சிய
பயமும் பக்தியும்
ஈத் தினத்தில்
வெற்றி நாடாவை
வெட்டியிருக்கிறது!

ஆமாம்!
நோன்பு எனக்குரியது
அதற்கு
கூலி கொடுப்பவனும் நானே
அல்லாஹ் அறைந்த
அழியாச் சட்டம்
சொர்க்கத்திற்கு
பல அடியார்களை
சொந்தக்காரர்களாக்கியுள்ளது!

வறுமைக்கு
வழி சொன்ன
இந்த ஈத்
செல்வந்தர்களின்
இதயங்களுக்கு
திறவுகோலைக் கொடுத்து
சகலோரும் கொண்டாட
ஒரு
சமத்துவப் பெருநாளை
விடியலாக்கி இருக்கிறது!



## குறிப்பிட்டுக் கூறுமளவிற்கு கோழியிறைச்சி சிறந்ததா?

– இருதய மருத்துவ நிபுணர் D.P அத்துக்கோரளை

கோழியிறைச்சியில் அதிகளவு கொழுப்பு உள்ளடங்கியிருப்பது தோலிலாகும். நன்கு பொரித்த கோழியிறைச்சியில் சாதாரணமாய் பொரித்த கோழியிறைச்சியைக் காட்டிலும் அதிகளவிலான கொழுப்பு உள்ளடங்கியிருப்பதைக் காணக்கூடியதாக உள்ளது. அதிலும், நாட்டுக் கோழியிறைச்சியினைக் காட்டிலும் ப்ரொய்லர் வகை கோழியிறைச்சியில் அதிகக் கொழுப்பு உள்ளது. கோழியின் மார்பகப் பகுதியிலுள்ள இறைச்சி 01 அவுன்சில் 01 கிராம் கொழுப்பு உள்ளது. ஆகவே இது இருதயத்திற்கு உகந்ததல்ல. நாம் உண்ணும் உணவில் கொழுப்புச் சத்து அதிகரிக்கும் போது தீய கொலஸ்ரோலின் மட்டமும் அதிகரிக்கிறது என்பதை நாமறிவோம். கோழியிறைச்சியில் கொழுப்புக்கு புறம்பாக ஏனைய இறைச்சிகளில் உள்ளது போல் கொலஸ்ரோலும் அடங்கியுள்ளது. இதுவும் இருதயத்திற்கு உகந்ததல்ல.

பொதுவாக மாட்டிறைச்சி, பன்றியிறைச்சி, ஆட்டிறைச்சி மற்றும் செம்மறி ஆட்டிறைச்சி போன்றவற்றைக் காட்டிலும் கோழியிறைச்சியில் கொலஸ்ரோல் குறைவாக இருப்பினும் கொழுப்பு அதிகமாகவே உள்ளது. ஆகவேதான், ஏனைய இறைச்சிகளுக்குப் பதிலாக கோழியிறைச்சியை மருத்துவர்கள் விதந்துரைக்கின்றனர் போலும்.

கோழியிறைச்சி மிகவும் வெப்பமான உணவு என்பதால் கர்ப்பிணித் தாய்மார் அதனை விலக்கி வைப்பது நல்லது என்று கூறப்படுகிறது. ஏனெனில் அத்தகையவர்கள் கோழியிறைச்சியினை உண்பதால் கருச்சிதைவும், ஊனமுற்ற குழந்தைகளை பிரசவிக்கவும் வாய்ப்புள்ளது.

இறைச்சிக் கடை முதலாளி தனது இலாபத்தைத்தான் பார்ப்பாரே தவிர நுகர்வோரின் உடல் நலம் அவருக்கொரு பொருட்டல்ல. ஆகவே, ப்ரொய்லர் கோழிகளை இறைச்சிக்காக வளர்ப்போர் அவை விரைவாக கொழுப்பதற்குத் தேவையான மருந்துகளையும் ஹோமன்களையும் அவற்றுக்கு ஊசி மூலம் ஏற்றுகின்றனர். இந்த வகை கோழியிறைச்சியில் இரும்புச் சத்து உள்ளதாகவும் கூறப்படுகிறது. ஆனால், அதற்காக கோழியிறைச்சிதான் சாப்பிட வேண்டும் என்பதில்லை. வேறு வகை உணவுகளிலிருந்தும் இரும்புச் சத்தைப் பெற்றுக் கொள்ளலாம் என்பதனை மனதில் இருத்திக் கொள்ள வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முஸ்லிம்களிடம் சமூக உணர்வு இல்லையா?

எம்.ஐ. றிஸ்வானா, சாய்ந்தமருது



இஸ்லாம் முழு சமூகத்திற்கும் அனுப்பப்பட்ட மார்க்கமாகும். அது அனைத்து சமூகத்திற்கும் வழிகாட்டப் பிறந்தது. ஒரு முஸ்லிமானவன் சமூகத்தோடு ஒருங்கிணைந்து செயற்பட வேண்டியவனாவான். இவ்வாறு முஸ்லிம்களின் சமூகப் பொறுப்பும், செயற்பாடும் விரிந்து செல்கின்றது. ஆனாலும் இன்று முஸ்லிம்களின் சமூக உணர்வு எவ்வாறு உள்ளது என்றால் அது அவர்களுக்கு அப்பாற்பட்டது என்றாகிவிட்டது.

அண்டை வீட்டார் முதல் இவ் அகிலம் முழுவதும் எமது சமூக உணர்வு சென்றிருக்க வேண்டும். ஆனால் அது இன்று எமக்குள் இல்லை. சமூகம் ஒற்றுமையாய் இருந்தால்தான் சமாதானம் வரும். இன்று சமூகங்கள் ஒற்றுமையாயில்லை. அதனால் முழு உலகமும் நிம்மதியற்று போயுள்ளது. மேலும் முஸ்லிம்களாகிய நாம் அதில் அதிகம் அக்கறைகாட்ட வேண்டியவர்களாக இருக்கின்றோம். சமூக உணர்வின் அடிப்படை விடயங்கள் பின்வருமாறு நோக்கலாம்.

## சமூகம் பற்றி இஸ்லாம்:-

இஸ்லாம் சமூகத்தினால் கட்டியெழுப்பப்பட்ட ஓர் மார்க்கம். முஸ்லிம் சமூகத்தை கண்டு ஏனைய கோத்திரங்கள் இஸ்லாத்தை தழுவிய வரலாறுகளும் உண்டு. அன்று இஸ்லாமிய மக்கள் இருந்த ஒற்றுமை தற்போது இங்கில்லை. மேலும் சமூக ஒற்றுமை, சமூக உணர்வு என்பவற்றை இஸ்லாம் குர்ஆனில் பல இடங்களில் கூறுகின்றது.

அக்காலத்தில் ஒருவர் இன்னொருவருக்கு உதவி செய்யக் கூடியவராகவும், ஒரு முஸ்லிம் இன்னொருவருக்கு கட்டுப்படக்கூடியவராகவும் சமூகத்தில் குழப்பங்கள் எதுவுமின்றி அனைவரும் சமூகத்தில் அக்கறை கொண்டவர்களாக இருந்தார்கள். இதனால் இஸ்லாம் வளர்ச்சியடையக் காரணமாய் இருந்தது.

## இன்றைய நிலை:-

முன்னொரு போதும் இல்லாது முஸ்லிம்களின் சமூக நிலை சீர்கெட்டுள்ளது. சமூகம் என்றால் என்ன என்று கேட்கும் அளவுக்கு நவீன கலாசாரம் எம்மை அடிமையாக்கியுள்ளது. சமூக உணர்வுகளை எம்மை விட்டு நாமே தூரமாக்கியுள்ளோம். குறிப்பாக நாம் இன்றைய சமூக சேவையாளர்களை எடுத்து பார்ப்போமானால், சமூக சேவை என்பது வெறும் சூது என்ற அளவுக்கு சென்று விட்டது. சேவை செய்வோர் நம்மில் பலர் இல்லை. இவ்வாறான சமூகசேவை இயக்கங்கள் மூலம் தன்னையும் ஏமாற்றி சமூகத்தையும் ஏமாற்றி இறுதியில் அவர்களே இலாபங்களைப் பெற்று விடுகின்றனர்.

இன்று இவ் இயக்கங்கள் அவர்களுக்கு தொழிலாகவும் அமைந்துவிட்டது. இதுவே எமக்கு முஸ்லிம்களின் சமூக உணர்வு எங்கு சென்றிருக்கின்றது என்பதை உணர்த்துகின்றது. அடுத்து இவர்களைவிடவும் முக்கிய அந்தஸ்தில் எம் அரசியல் தலைவர்கள் இருக்கின்றனர். என்றாலும், இன்றைய அரசியல் வாதிகளின் நிலை நாமெல்லாம் அறிந்த ஒன்று. முற்று முழுதாக இலாப நோக்கமே அரசியலிலும் உள்ளது. சேவை செய்வோர் அரிதாகவே உள்ளனர்.

மூன்றாவதாக எம் சமூகத்தில் ஏற்பட்டுள்ள போட்டிகள் காரணமாக சமூக எண்ணங்கள் சிதைக்கப்பட்டுவிட்டன. உன்னைவிட நான் உயர்ந்தவன் உன்னைவிட நான் அந்தஸ்த்தில் பெரியவன் என்று வீடு, வாகனம் அனைத்திலும் போட்டி ஏற்பட்டுள்ளதை நாம் அவதானிக்கலாம். மேலும் சமூக நினைப்போடு சமூகத்தை கவனியாத நிலையும் இன்றுள்ளது. சமூகத்தில் குற்றங்கள் நடைபெறும்போது அவற்றை என்ன என்று கேட்காத அளவில் நாமும் பிளியாகி விட்டோம். சமூகமும் அதன்பாட்டில் சீரழிந்து போகின்றது. இவற்றையெல்லாம் தட்டிக்கேட்க நாம் தயார் இல்லை. இதுதான் இன்றைய எமது சமூக நிலை.

முஸ்லிம் சமூகம் எவ்வாறு இருக்க வேண்டுமென்று இஸ்லாம் எதிர்பார்த்ததோ, அவ்வெதிர்பார்ப்பில் எம்மால் சிறிதளவு கூட நிறைவேற்ற முடியவில்லை. இதற்கெல்லாம் காரணம் நவீன காலாசாரமும் எம்மில் ஏற்பட்ட அந்நிய கொள்கைகளும்தான். இந்நிலையை இவ்வாறே விட்டால் இறுதியில் கவலைப்பட வேண்டியது நாமே! வருமுன் காப்போம் எம்மிலும் சமூகத்தின் உணர்வுகளை ஏற்போம். தூய எண்ணத்துடன். இன்ஷா அல்லாஹ்.

## புலிகளின் யோசனைகள் பற்றி.... சிங்கள மக்களின் அபிப்பிராயங்கள் இது முஸ்லிம் மக்களின் அபிப்பிராயங்கள் என்ன?

வடக்கு, கிழக்கு பிரச்சினைக்கு உரிய தீர்வாக சுய நிர்வாக அதிகார சபையொன்றைக் கேட்டு புலிகளினால் அண்மையில் அரசாங்கத்திடம் தமது யோசனைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. அதில், யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறை ஆகிய எட்டு மாவட்டங்களுக்கான ஐந்து வருடகால எல்லையைக் கொண்டதும், பூரண அதிகாரத்தைக் கொண்டதுமான இடைக்கால சுய நிர்வாக முறையொன்றை புலிகள் கேட்டுள்ளனர்.

மேற்படி எட்டு மாவட்டங்களிலும் உள்ள காவல்துறை, நீதிமன்றம், சுங்க அதிகாரம், வரி அறவிடல், நிதித்துறை, காணி, வெளிநாட்டுக் கடனுதவி மற்றும் கடலின் உரிமை ஆகியவற்றுக்கான பூரண அதிகாரத்தை தமக்குத் தரும் படி புலிகள் கேட்டிருந்தனர். அது தொடர்பான பலரின் கருத்துக்கள் கீழ் வருமாறு முன்வைக்கப்பட்டிருப்பது கவனத்திற்குரியவை.

01. பயப்பிராந்தியை ஏற்படுத்தி கையொப்பத்திற்காக சமர்ப்பிக்கப்பட்ட ஆவணம். -மானிட விஞ்ஞானி பந்துல அந்தகம-

02. நிச்சயமாக இந்நாட்டுக்குள் இன்னொரு நாடு உருவாகும். -பேராசிரியர் சுனந்த மஹேந்திர-

03. சில விண்ணப்பங்கள் பேச்சுவார்த்தைக்கு தகுதியற்றவை. -பேராசிரியர் சோமரட்ண பாலசூரிய-

04. நாட்டின் ஒரு பகுதியில் சர்வாதிகார ஆட்சியை நிறுவுவதே நோக்கம். - ஏ.பீ.ஸீ. டி சில்வா-

05. வேறொரு தனி நாட்டுக்கான மொத்த யோசனைகள் -சரத்சந்திர எதிரிசிங்க (கலைஞர்)-

06. யோசனைகள் பற்றி கட்டாயம் பேச்சுவார்த்தை ஒன்று தேவை. -பெட்டி வீரகோன்-

07. இது அதிகார பகிர்வல்ல. அதிகாரத்தை பறித்தெடுத்தலாகும். -சட்டத்தரணி எஸ்.எல். குணசேகர-

08. நாட்டை இரண்டாக்கும் முயற்சியின் கடைசி முடிவு. -தேசிய பிக்கு முன்னணியின் பிரதான செயலாளர் கலவலக சந்திராலோற்ற தேரர்-

09. அரசியல் சட்டத்திற்கு மிகவும் மாற்றமானது. -சட்டத்தரணி ஹரீன் தோமஸ்-

10. சமாதான விரும்பிகளின் அனைத்து எதிர்பார்ப்புகளும் சுக்கு நூறாக்கப்பட்டு விட்டன. -பேராசிரியர் நந்தன கருணாநாயக்க-

11. அதனை ஊத்தைக் குழியில் வீச வேண்டும். -அல்லே குணவங்ச தேரர்-

12. இந்த யோசனை பற்றி பேச்சுவார்த்தை நடத்துபவர்கள் தேசத்துரோகிகளாவார். மருத்துவர் குணதாச அமரசேகர-

13. மிகவும் கேடானது. - கலாநிதி சந்திர சிறி ராஜபக்ஷ-



## சமாதான நீதவான்



இல: 209, வன்னியர் வீதி, நிந்தவூர் - 13 எனும் முகவரியில் வதியும் அல்-ஹாஜ் எம்.எம். முகம்மது சித்தீக் (இஸ்ஸத்தீன்) அகில இலங்கை சமாதான நீதவானாக அண்மையில் சத்திய உரை செய்து கொண்டார்.

இவர் சாய்ந்தமருது அல்-ஜலால் வித்தியாலயம், கல்முனை ஸாஹிராக் கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவருமாவார். மேலும், தமிழ், ஆங்கிலம், சிங்களம் ஆகிய மும்மொழிகளிலும் செயலாற்றும் பிரசித்த நொத்தாரிசுமாவார் என்பது குறிப்பிடத்தக்கது.


**உங்கள் வீடுகளில் மாஸ்டர் கொன்ரோல் வயறிங், நோமல் வயறிங், பைப் லைன் போன்றன செய்து கொள்ளவும், கிணறுகள், டாங்கிகள், சுத்தம் செய்து கொள்ளவும் எம்மைத் தொடர்பு கொள்ளவும்.**

**ராஸீக் இலக்றிகல் சேவிஸ்,**
**448/11, 3 ஆம் ஒழுங்கை, புதிய பாலமுனை வீதி, மஞ்சுந்தொடுவாய், மட்டக்களப்பு**

உரிமையாளர்
**அலியார் மஹ்றூப்**

**உலக கனேடிய பல்கலைக்கழக சேவை நிறுவனத்தின் நிதியுதவியுடன் மட்டக்களப்பு தொழில் நுட்பக் கல்லூரியில் வீட்டு மின்சுற்று பயிற்சி முடித்து மட்டக்களப்பு சர்வோதயம், கல்முனை கிறிஸ்த்தவ இல்லம் போன்ற நிருவாகங்களால் விசேட சான்றிதழ் பெற்றவர்.**

Advt.


## வளர்ந்திடும் பெருநாள்



வந்தது பெருநாள் - இன்பம்
வார்த்திடும் திருநாள்
சிந்தையில் மகிழ்ச்சி - துள்ளிச்
சிந்துதே எங்கும்!

இஸ்லாமியர் பெருநாள் - உள்ளம்
யீர்த்திடும் நன் நாள்
கஷ்டங்கள் மறையும் - நற்
கனிவான திருநாள்

ஈதுல் பெருநாளில் - இரக்கும்
ஈகை முஸ்லிம்கள்
தோதாய் வாழ்ந்திடவே - வரும்
தூய்மைப் பெருநாள்!

ஏழைகள் மகிழ் நாள் - மக்கள்
ஏற்றங்கள் நிறை நாள்
வாழைக் குருத்தினைப்போல் -
நாளும்
வளர்ந்திடும் பெருநாள்!

மூதூர் 'கலை மேகம்'

## மறுப்பறிக்கை!

திருகோணமலை மாவட்ட மக்கள் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ திடீர் தௌபீக் அவர்களின் தொலைபேசி இலக்கத்தை தேடுகின்றார்கள் என்ற தங்களது பத்திரிகையின் 2003-10-17ம் திகதிய செய்தி தொடர்பாக,

இந்தச் செய்தி ஏற்றுக் கொள்ள முடியாத ஒன்றாகும். ஏனெனில் திருமலை மாவட்டத்தில் உள்ள ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்களைவிட இவர் மாவட்டத்தின் எல்லாப்பிரதேசங்களுக்கும் அடிக்கடி சென்று மக்கள் பிரச்சினைகளை கேட்டறிந்து கொண்டிருக்கிறார் என்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

இந்தச் செய்தியில் உண்மை இருக்குமாக இருந்தால் உரிய நபர், தனது சொந்தப் பெயரை செய்தியின் கீழ் போட்டிருக்கலாம். அதைவிடுத்து ஓட்டுப்போட்டவன் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இவர் உண்மையிலேயே ஓட்டுப் போட்டவர்தான் என்பதை தாங்கள் எப்படி உண்மைப்படுத்தினீர்கள்? செய்தியை தந்தவர் இவருக்கு எதிராக ஓட்டுப் போட்டவராகக் கூட இருக்கலாமல்லவா? அல்லது இவரது தனிப்பட்ட அரசியல் எதிரியாகக் கூட இருக்கலாம். நிலைமை இப்படி இருக்க செய்தியின் உண்மைத்தன்மையை அலசி ஆராயாமல், திடீரென பிரசுரித்தது தவறாகும். முஸ்லிம் குரல் சமூகத்திற்கு விடிவையும், விமோசனத்தையும் பெற்றுத்தரும் என்ற எதிர்பார்ப்பில் இருக்கும்போது இப்படிப்பட்ட செய்திகள் இதன் நம்பகத் தன்மையை கேள்விக்குட்படுத்தி இருக்கிறது.

எம்.எச்.எம். அமீம் (ஆசிரியர்),
தாஹா நகர், மூதூர் -07

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிர்காலத்தில் முதலிடுதல்

"மானிட சமுதாயம் சிறுவர்களுக்கு அதிசிறந்ததைக் கொடுத்தல் வேண்டும்." சிறுவர் உரிமைகள் பற்றிய 1959 ஆம் ஆண்டின் ஐ.நா. பிரகடனம்.

சிறுவர்களின் மானிட உரிமைகள் மீது உறுதிசெலுத்தல் என்பது அவர்களின் எதிர்காலத்துக்காய் செலவழித்தலாகும். இதனால் எதிர்காலச் சந்ததியினரின் மனித உரிமைகளுக்கு அத்திவாரம் இடப்படுகிறது.

சிறுவர்களுக்கு விசேட பாதுகாப்பும், கவனிப்பும் தேவை. வளர்ந்தோர் உலகம் சிறுவர்களைப் பாதுகாத்து உரிமைகளை மதித்து அவர்களது திறமைகளை வளர்க்கவும் உணரவும் வழிவகை செய்தல் வேண்டும். இவை தொடர்பாக அரசாங்கம் உதட்டளவிலான சேவையே புரிகின்றன.




வளர்ந்தோர்களைப் போன்றே சிறுவர்களும் மனித உரிமை மீறல்களுக்கு உட்படுத்தப் படுகின்றனர்.

சிறுவர்கள் அரச அதிகாரிகளினால் அநியாயங்களுக்கு உட்படுத்தப்படுகின்றனர். மோசமான நிலையில் பூட்டி வைக்கப்படுகின்றனர். இன்னும் ஆயுதப் போராட்டங்களில் ஆயிரக்கணக்கானோர் இறந்ததுடன் அதே அளவினர் அகதிகளாகியுள்ளனர்.

இலட்சக் கணக்கான சிறுவர்கள் ஆபத்து விளைவிக்கும் தொழில்களில் ஈடுபடுத்தப்படுகின்றனர். சிறுவர் கடத்தல், பாலியல் உறவுகள் போன்றவற்றில் ஈடுபடுத்தப் படுகின்றனர். குற்றம் இழைப்பவர்களுக்குப் பிறரைவிட சிறுவர்களை அணுகி அவற்றில் ஈடுபடுவது இலகுவான விடயம்.

சிறுவர் தொடர்பான ஐ.நா. சபை தீர்மானம் 1959 இல் பிரகடனப்படுத்தப்பட்டதுடன் 1989 இல் சட்டவடிவம் வழங்கப்பட்டது. அது தொடக்கம் சோமாலியா, அமெரிக்கா தவிர்ந்த பிற நாடுகள் இதனை அங்கீகரித்துள்ளன.

## சிறுவர்களின் அதிக நலன் அக்கறை

சிறுவர்களின் நலன் பற்றிய ஆவணத்தின் படி சிறுவர்கள் பற்றிய எல்லா முடிவுகள், நடைமுறைகளின் போதும் பிள்ளைகளின் அதியுயர் நலன் பேணப்படவேண்டுமென்று கூறப்பட்டுள்ளது. அவர்களது நலன்கள் பற்றி அவர்கள் விசாரிக்கப்படல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய விடயங்களில் அவர்களது அபிப்பிராயம் கவனத்தில் எடுக்கப்படல் வேண்டும்.

வயது ஏற ஏற சிறுவர்களுக்குத் தமது அபிப்பிராயத்தை வெளியிடக் கூடிய ஆற்றல் அதிகரிக்கிறது.

18 வயதுக்குக் குறைந்த ஒவ்வொரு பிரஜையும் சிறுவரே. தேசிய சட்டங்களின் செயற்பாடு மூலம் இது வேறுபடலாம். எல்லா சிறுவர்களும் தமது உரிமைகளை அனுபவிக்கச் செய்வதும், பாரபட்சம் காட்டப்படாமல் தடுத்துக் கொள்வதும் அரசின் கடமையாகும். சம சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும் என்பது முக்கிய அம்சமாகும். பால் வித்தியாசம் காட்டப்படக்கூடாது. அனைவருக்கும் சம கல்வி வாய்ப்பு, சம வளர்ச்சி, போதுமான வாழ்க்கைத் தரத்தை அனுபவிக்கும் வாய்ப்பு என்பன அளிக்கப்படுதல் வேண்டும்.

## 4 வகை உரிமைகள் உள்ளன.

1. உணவு, உறைவிடம், சுகாதார வசதிகள்
2. கல்வி, சிந்திக்கும் உரிமை, மனச்சாட்சி, சமய உரிமை போன்ற வளர்ச்சி உரிமைகள்.
3. பாதுகாப்பு உரிமைகள், உயிர் வாழும் உரிமை, துஷ்பிரயோகம், கவனயீனம் போன்றவற்றிலிருந்து பாதுகாப்பு.
4. பங்குபற்றும் உரிமைகள், சமூக அரசியல் வாழ்வு உரிமைகள்.

உரிமைகள் பற்றி மக்களுக்குத் தெரியப்படுத்தப்படுவது முக்கியமானது. அப்போதுதான் மக்களுக்குத் தமது கோரிக்கைகளைக் கோர முடியும்.

## சிறுவர் உரிமைகளும், பொறுப்புகளும்

குடும்பத்திலும், சமூகத்திலும் பிறரின் உரிமைகளை புரிந்து நடக்கும் பொறுப்பும் சிறுவர்களுக்குண்டு. கடமை, பொறுப்பு, உரிமை போன்றன பற்றி சிறுவர்களுக்கு அறிவுறுத்தும் பொறுப்பு குடும்பங்களுக்கு உண்டு. இதன்படி குடும்பத்திலோ, சமூகத்திலோ நடக்கும். அநீதிகளை அகற்றும் பொறுப்பும், அரசுக்கு உண்டு.

வீட்டுத் தகராறுகள், பிள்ளைகளை வேலைக்கு அமர்த்தல், பாலியல் துஷ்பிரயோகம் போன்றன தனிப்பட்ட நபர்களால் நடாத்தப்பட்ட போதும் தவிர்ப்பது அரசின் கடமை.



இவற்றைக் கண்காணிக்கும் பொறுப்பு 10 நிபுணர்களைக் கொண்ட 1 குழுவிடம் அளிக்கப்பட்டுள்ளது.

மனித உரிமைகள், சர்வதேச சட்டம், சிறுவர் நீதி, சமூக சேவை, மருத்துவம், எழுத்துத்துறை, அரச அரசசார்பற்ற பணி போன்றவற்றில் ஈடுபாடும் அனுபவமும் உடையோர் இதற்காகத் தெரிவு செய்யப்படுவர்.

சட்டம் அமுலாக்கல் மட்டத்தில் இருந்து இரு ஆண்டுகளுக்குள் அரசுகள் தாம் இத்துறையில் மேற்கொண்ட சீர்த்திருத்தங்கள் பற்றி இக்குழுவிற்கு அறிவித்தல் வேண்டும்.

அதன் பின் மேற்கொள்ளப்பட வேண்டிய மேலதிக விடயங்கள் பற்றி குழு நாடுகளின் அரசுகளுக்கு அறிவிக்கும். 5 ஆண்டுகளுக்கொரு முறை முன்னேற்ற அறிக்கை அனுப்பப் படுதல் வேண்டும்.

## சிறுவர்களுக்கான ஆபிரிக்க ஆவணம்

இது OAU ஆக (ஆபிரிக்க ஒற்றுமை அணி) ஏற்பட்டது. இது சிறுவர் உரிமைகளை மேலும் வலுப்படுத்துகிறது. சிறுவர்களை இராணுவத்தில் சேர்ப்பதைத் தடை செய்கிறது.

## சர்வதேச மன்னிப்புச் சபையின் பணிகள்

சிறுவர்கள் பல்வேறு வகை அநியாயங்களுக்குட்படுத்தப்படுவதை இது உலகுக்கு வெளிக்காட்டுகிறது. இது பற்றி ஆராய்ச்சியில் ஈடுபட்டுப் பிரசாரம் செய்கிறது. இத்துறையில் சேவையில் ஈடுபட்டுள்ள அரச சார்பற்ற நிறுவனங்களுடன் இணைந்து செயற்படுகிறது.

சிறுவர்களின் உரிமைகளைப் பாதுகாப்பது தொடர்பாக அரசுகளுக்குத் தமது கடப்பாடுகளை நினைவு படுத்திக் கொண்டே இருக்கிறது. சிறுவர் உரிமைகள் பற்றிய விடயங்கள் ஆவணப்படுத்தப்படுவது இலகு. ஆனால், அவற்றை அமுல் செய்வது முக்கியம். ○

# யுத்தத்தின் விளைவுகள்

கொடுமையான யுத்தத்தின் விளைவுகள் எத்தனை எத்தனையோ இன்றைய உலகில். நமது இலங்கை நாட்டிலும் கூட இன, மத யுத்தங்கள் முடிவில்லாமல் நடந்து கொண்டிருப்பது நாம் எல்லோரும் தெரிந்த விடயமே. இந்த யுத்தத்தினால் இரத்தம் சிந்தும் அப்பாவி மக்களின் எண்ணிக்கை உலகில் மட்டுமல்ல இலங்கை நாட்டிலும் அதிகரித்துக் கொண்டே இருக்கின்றது. இதுவெல்லாம் யுத்தத்தின் கொடுமைகள்தான். இன்றைய விஞ்ஞான உலகில் மனிதர்களின் மத்தியில் அநாதைகளும் விதவைகளும் பிள்ளைகளை இழந்த பெற்றோர்களும் பெருகி வருகின்றனர். இதுவும் யுத்தத்தின் விளைவுதான். மற்றும் எத்தனையோ குடும்பங்கள் அகதிகளாக முகம் காட்டவும் ! யுத்தந்தான் காரணம். மனிதன் ஆயுதங்களைப் பயன்படுத்தியும் அணுகுண்டுகளை சிதற வைத்தும் யுத்தம் புரிகிறான். மனிதன் செய்யும் யுத்தத்தினால் அவனுக்கு மட்டுமா பாதிப்பு எத்தனை இயற்கை ஜீவன்களுக்குப் பாதிப்பு!

ஆறறிவு படைத்த அற்புத மனிதன் செய்யும் யுத்தத்தினால் தாவரங்கள் மரங்கள், அழிக்கப்பட்டு காடுகள் ஒழிக்கப்பட்டு பஞ்சத்தின் மத்தியில் இருந்து கொண்டு பாடுபட யுத்தம்தான் காரணம். இவை மட்டுமா இன்னும் எத்தனையோ இயற்கை வளங்கள் அழிவதற்கும் இந்த யுத்தம்தான் காரணம். அப்பாவி உயிர்களின் கண்ணீருக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டுமா யுத்தத்தை நிறுத்த வேண்டும். முன்னைய காலத்தில் யுத்தமென்றால் என்ன என்று குழந்தைகள் கேட்பார்களாம். ஆனால் இன்று உலகம் மாறி விட்டது முன்பெல்லாம் மனித இரத்தத்தைக் காண கண்காட்சிகள் நடக்க வேண்டுமாம். இன்றைய உலகில் யுத்தத்தின் மத்தியில் இரத்தம் சிந்தாதவர் ஒருவரும் இல்லை என்று கூற வேண்டும். ஆகவே எப்படியேனும் யுத்தத்திற்கு முற்றுப்புள்ளி வைத்து நாம் சுபீட்சமாக வாழ்வோம்!

கே.எல். ஹில்மி

# தோப்பூருக்கு தனியான பிரதேச செயலகம் வேண்டும்!

கிழக்கு மாகாணத்தின் திருகோணமலை மாவட்டத்தின் தனி முஸ்லிம்கள் வாழும் ஒரு பிரதேசமே தோப்பூர் கிராமமாகும். இது முஸ்லிம்களின் கேந்திர ஸ்தலமுமாக காணப்படுகிறது. இங்கே சுமார் 20,000 தனி முஸ்லிம்கள் வாழ்ந்து வருகின்றனர். அவற்றுள் அண்ணளவாக சுமார் 15,000 வாக்காளர்கள் காணப்படுகின்றனர். இங்கே 12 முஸ்லிம் கிராம உத்தியோகத்தர் பிரிவும் காணப்படுகின்றது. அவற்றுள் கல்வி ஸ்தலங்களாக, 3 உயர்தரப்பாடசாலைகளும் 4 கணிஷ்ட பாடசாலைகளும் 2 ஆரம்பப் பாடசாலைகளும் அமைந்துள்ளன. அத்தோடு, மார்க்கக் கடமைகளை நிறைவேற்றுவதற்காக ஒரு தப்லீக் மர்க்கஸும், 8 ஜும்ஆ பள்ளிவாயல்களும், 6 தக்கியாக்களும் காணப்படுகின்றன. அத்தோடு 10 குர்ஆன் மத்ரஸாக்களும், ஒரு ஆண்கள் அரபுக் கல்லூரியும், ஒரு பெண்கள் அரபுக் கல்லூரியும் இருப்பது குறிப்பிடத்தக்கதாகும். மேலும் இங்கு 10 முன்பள்ளிப் பாடசாலைகளும் இயங்கிவருகின்றன. இதில் ஆரம்பப்பருவத்திலே மார்க்க விடயங்களும் போதிக்கப்படுவது குறிப்பிடத்தக்கதாகும்.

இவ்வாறு பல்வேறுபட்ட கோணத்தில் முன்னேறிக் காணப்படும் எங்கள் கிராமம் அரசியல் அரங்கில் புறக்கணிக்கப்படுவதே அல்லலுக்குரிய விடயமாக இருக்கின்றது. தோப்பூர் பிரதேச மக்களின் அபிலாஷையோ, எதிர்பார்ப்போ தோப்பூருக்கான தனியான பிரதேசசெயலகம் பெற்றுக் கொள்வதேயாகும். இதற்கான அரும் முயற்சியில் எமது பிரதேச புத்திஜீவிகள், பள்ளிபரிபாலன சபைத்தலைவர்கள் நிர்வாகத்தினர் உலமாக்கள், சமூக சேவையாளர்கள், உயர் அதிகாரிகள், இன்னும் பலர் ஈடுபட்டனர். அதன் நிமிர்த்தமாக மறைந்த தலைவர் மர்ஹூம் எம்.எச்.எம். அஷ்ரஃப் அவர்கள் தோப்பூர் மக்களின் விடயத்தில் கரிசனை கொண்டு, பிரதேச செயலகம் அமைப்பதற்கான பூர்வாங்க வேலைகளை ஆரம்பித்து அதற்கான உயர் மட்டக் குழுவும், அமைக்கப்பட்டு எமது ஊர்ப் பிரமுகர்களும் அழைக்கப்பட்டு, கொழும்பில் வைத்து இது விடயமாக கலந்தாலோசித்து தோப்பூருக்கான பிரதேச செயலகம் அமைப்பதற்கான பைலும் போடப்பட்டது. ஆனால்



இவ்விடயத்தில் கோபம் கொண்ட ஒரு சில சுயநல விஷமிகள் பல சதித்திட்டங்களைச் செய்து அதனை முறியடித்தனர். இதனை கேள்வியுற்ற தோப்பூர் பிரதேச மக்களுக்கு 'பழம் நழுவி மண்ணுள் வீழ்ந்த கதையாகிவிட்டது"

இத்தருணத்தில் சில நாட்களுக்குப்பின் மூதூரில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில் தோப்பூருக்கான தனியான பிரதேச செயலகத்தை நான் முன்னின்று அமைத்துத்தர அரும்பாடுபட்டு உழைப்பேன். என உறுதியிட்டு கூறிவிட்டு சென்றுவிட்டார். வழமைபோல் அரசியல் வாதிகளின் வாய்ப் பேச்சுக்கு கை அசைத்து, கை தட்டி ஆரவாரித்து, சந்தோஷப் பட்டனர். இவ்வாறு கூறியவர் தான் தற்போதைய முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் றவூப் ஹக்கீம் அவர்கள். அதன் பின்னர் மூன்று முறை தேர்தலுக்கு வந்து போய் விட்டார். மூன்று முறையும் இந்தப் பொய்யையே சொன்னார். ஏமாந்து ஏமாந்து தோப்பூர் முஸ்லிம்கள் பொய் வார்த்தைகளால் வெந்து போய் விட்டனர். இவர் மட்டுமா? பொய் சொன்னார். திருகோணமலை மாவட்டத்தின் தற்போதைய பாராளுமன்ற கதிரைகளை அலங்கரித்துக் கொண்டிருக்கும் மூவேந்தர்கள். முன்னாள் பிரதி அமைச்சர் பண பலம் படைத்தோர் எல்லோரும் கூறிய தேர்தல் வாக்குறுதிகள் எல்லாமே தோப்பூருக்கான பிரதேச செயலகம் நாங்கள் பெற்றுத்தருவோம் என்பதேயாகும்.

எது எவ்வாறாக இருந்தாலும் தோப்பூர் மக்களின் கனவான எதிர்கால ஆசையான தோப்பூருக்கான தனியான பிரதேச செயலகம் பெற்றுத்தர இன்று கிழக்கு அபிவிருத்தி அமைச்சரும், திருகோணமலை மாவட்ட மூவேந்தர்களும் அரும் முயற்சி எடுக்க வேண்டும்.

கிழக்கு அபிவிருத்தி அமைச்சரே! திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற முஸ்லிம் உறுப்பினர்களே! திருகோணமலை மாவட்டத்தில் என்ன நடக்கிறது என்று தெரியுமா? வெருகல், ஈச்சிளம்பற்று பிரதேசம் சில காலம் உப பிரதேச செயலகமாக இயங்கி வந்தது. தற்போது அதனை நிரந்தர தனிப் பிரதேச செயலகமாக பிரித்து, அதனுடைய நிர்வாக எல்லைகள் அனைத்தையும் பிரிப்பதற்கான குழுவும் அமைக்கப்பட்டு அதற்கான வேலைகளும் முடிவுறும் தறுவாயில் உள்ளது.

எனவே தமிழ் பிரதேச செயலகங்களை பிரிக்க சட்டத்தில் இடம் உள்ளதென்றால் முஸ்லிம் களுக்கென்று பிரதேச செயலகம் பிரிக்க முடியாதா? அதற்கு இவ் அரசியல் வாதிகளுக்கு தைரியம் இல்லையா? தட்டிக் கேட்க முடியாதா? அது அவர்களுக்கென்று பிரிக்கப்படுவதாகும். இது பற்றி தற்போது பேச வரவில்லை. தோப்பூர் மக்களின் கனவுகளும், அபிலாஷைகளும், விருப்பங்களும் தோப் பூருக்கென தனியான பிரதேச செயலகம் அமைவதிலேயே தங்கி இருக்கின்றது.

எனவே இது விடயத்தில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தேசியத் தலைவர் ரவூப் ஹக்கீம் கவனமெடுப்பாரா? திருகோணமலை மாவட்ட முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களான கே.எம். தௌபீக்.(திடீர்), எம்.எஸ். தௌபீக், எம்.ஏ.எம். மஃரூப் ஆகியோர்களாவது கவனமெடுப்பார்களா? என்று தோப்பூர் பிரதேச முஸ்லிம்கள் எதிர் பார்க்கின்றனர்..

எஸ்.எம். தாணீஸ் – தோப்பூர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாட்டிலிருந்து மீன் இறக்குமதி செய்யும் கடலால் சூழப்பட்ட புதுமைமிகு நாடு

இலங்கையானது இந்து சமுத்திரத்தின் முத்து என்று கூறப்படுகிறது. 29 முக்கியமான நதிகளும், 65 கிளை ஆறுகளும், 80,000 சிறிய பெரிய குளங்களும் இலங்கைக்கு சொந்தமானவை.

கடலால் சூழப்பட்ட இந்நாட்டின் 19,000,000 சனத்தொகைக்கு போதுமான அளவு மீன் உற்பத்தி இல்லையென்று கூறுவது ஆச்சரியமானது. உண்மை என்னவென்றால், போதுமான அளவு மீன்பிடி வளம் இல்லாதபடியால், தேவையான மீனை இறக்குமதி செய்ய வேண்டி ஏற்பட்டுள்ளது.

71,536 மெற்றிக்தொன் கருவாடு, மாசி, டின்மீன் மற்றும் வேறு மீன் உற்பத்திகள் கடந்த வருடம் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன. இவற்றின் முழுப் பெறுமானம் ரூபாய் 5747 மில்லியனாகும். இதில் டின்மீனுக்காக மட்டும் ரூபாய் 1740 மில்லியன் செலவழிக்கப்பட்டுள்ளது. நம்நாடு சமுத்திரத்தால் சூழப்பட்டிருப்பினும் போதுமான அளவு மீன் உற்பத்தி இல்லை. கடந்த வருட மீன் உற்பத்தி 274760 மெற்றிக்தொன்னாகும்.

போதுமான அளவு மீன் உற்பத்தி இல்லாதபடியால் தற்போது டின்மீன் பாவனைக்கு பொதுமக்கள் பழகியுள்ளனர். இதுவரை சிலி நாட்டிலிருந்தே டின்மீன் இறக்குமதி செய்யப்பட்டு வந்தது. ஆனால், தற்போது வர்த்தக மற்றும் நுகர்வோர் அமைச்சினால் டின்மீன் இறக்குமதி செய்யும் சந்தர்ப்பம் விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது. அதன்படி, கூட்டுறவு மொத்த விற்பனை நிலையமும், மற்றும் தனியார் நிறுவனங்களும் டின்மீன் இறக்குமதி செய்து வினியோகிக்கின்றன.

இலங்கைக்குத் தேவையான மீனில் 2,29,000 மெற்றிக் தொன்னில் 3% வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படுகிறது. மீனவர் சனத்தொகை 5,16,990 ஆகும். கடற்றொழிலில் ஈடுபடுவோரின் தொகை 1,42,300 பேர் ஆகும். 1337 மீன்பிடிக் கிராமங்களில் இவர்கள் வசிக்கின்றனர்.

கடற்றொழிலில் ஈடுபடுவோரின் தொகையும், நாட்டின் தேவையும் அதிகமாக இருப்பினும் குறைந்த விலையில் போஷாக்குள்ள மீனைப் பெற்றுக்கொள்ள மக்கள் படும் கஷ்டத்திற்கு விடிவு இன்னும் ஏற்படவில்லை. போஷாக்கான மீன் மலிவு விலையில் கிடைக்காத படியினாலேயே மக்கள் டின்மீன் உண்ண முனைந்துள்ளனர்.

கடற்றொழில் அமைச்சுக்கு காலத்துக்குக் காலம் அமைச்சர்கள் நியமிக்கப்படுகின்றனர். ஆனால், கடற்றொழிலோ ஒரே இடத்தில் ஊறுகிறது. மீனவர்கள் முன்னேற பொருத்தமான சூழலேயில்லை. இதற்குப் பொறுப்பாளிகள் யார் என்பதை யாரால்தான் கூற முடியும்.

# கல்விக்கு முதலிடமளிப்போம்

சில அரசியல்வாதிகள் தங்களை முன்னிறுத்திக் கொள்வதற்காக மாணவர்களை பலிக்கடாக்களாக்குகின்றனர். ஆகவே, மாணவர்கள் இதனை நன்கு புரிந்து கொண்டு செயற்பட வேண்டும். புத்திஜீவிகளும், அனுபவசாலிகளும் ஓரங்கட்டப்பட்டு உறவுமுறையினருக்கு பதவிகள் வழங்கப்பட்டன. இதன் காரணமாக எம் நாடு ஒரு வித தேய்மானத்திற்கு உள்ளாகியுள்ளது.

1945ம் ஆண்டிலேயே இலவசக் கல்வி அறிமுகப்படுத்தப்பட்டது. கல்வி சம்பந்தமாக ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட யுனெஸ்கோ அமைப்பானது 1990ம் ஆண்டு ஒரு முடிவுக்கு வந்தது. அதுதான், அனைவருக்கும் கல்வி என்பது. இலவசக் கல்வியின் தந்தை என்று போற்றப்படும் கன்னங்கரா அவர்கள் 45 ஆண்டுகளுக்கு முன்பே அதை உணர்ந்திருந்தார். அதன் காரணமாகவே இலவசக் கல்வி அறிமுகப்படுத்தப்பட்டது.

எமது ஆரம்பம் சிறப்பாகவே இருந்தது. ஆனால், தற்போது உயர் கல்வியைப் பொறுத்தளவில் மிகவும் பின்தங்கியுள்ளோம். முன்பு நாம் தெற்காசிய மண்டல நாடுகளுள் முன்னணியில் இருந்தோம். ஆனால், தற்போது நாம் பின்தள்ளப்பட்டுள்ளோம். ஏனைய நாடுகள் முன்னேறியுள்ளன. நாம் செல்ல வேண்டிய துறைகளை இன்னும் சென்றடையவில்லை.

கடந்த வருட பரீட்சைப் பெறுபேறுகளின் படி கொழும்பில் 22பேரும், காலியில் 05 பேரும், குருனாகலையில் 04 பேரும், கண்டியில் 03 பேரும் மற்றும் அநுராதபுரம், புத்தளம், மாத்தளை, களுத்துறை போன்ற மாவட்டங்களில் ஒருவர் வீதம் அதி கூடிய புள்ளிகளைப் பெற்றுள்ளனர். 16 மாவட்டங்களில் ஒரு மாணவர்கூட தேறவில்லை. பொதுவாக, இப்பெறுபேறுகளால் நாம் திருப்தியடைந்திட முடியாது. சா/த பரீட்சைக்கு தோற்றுகின்றவர்களுள் 76 சதவீதமானோர் ஆங்கில பாடத்தில் தவறி விடுகின்றனர். உ/த பரீட்சைக்கு தோற்றுகின்றவர்களுள் 50 சதவீதமானோர் பல்கலைக்கழகத்திற்கு தெரிவாவதில்லை.



எம் நாட்டு கல்வி முறையில் ஏதோ ஒரு தவறு இருப்பதாகவே தோன்றுகிறது. இது ஒரு அரசியல் கட்சியினதோ, அமைச்சரினதோ பிரச்சினையல்ல. இது ஒரு நாட்டின், எம் நாட்டின் பிரச்சினையாகும்.

இப்பிரச்சினைகள் வென்றெடுக்கப்பட வேண்டுமானால், கல்விக்கே முக்கியத்துவம் வழங்கப்பட வேண்டும். கல்வி சீரடைந்தால் நாடு தானாகவே சீரடையும். □

## சமாதானப் பெருநாள்

முன்பெல்லாம்
எங்களூரில்
பெருநாட்கள்
வந்துவிட்டால்
பட்டாசுகள் படபடக்கும்.

நேற்றுவரை
பட்டாசுகள்
புதைக்கப்பட்டு
பகரமாக
துப்பாக்கிச் சூடுகளும்
அழுகைச் சப்தங்களும்
எமது வாழ்வில்
அங்கமாகிப் போயின.

பட்டாசுகளும்,
துப்பாக்கிச் சூடுகளும்
சூறையாடப்பட்டு,
சாந்தமான நாளாக மிளிரும்
அந்தப் பெருநாளை
காத்தபடி
நாங்கள்.

**காவத்தமுனை ஜாபிர் எச்எம்.**

## ஆங்கில மொழி ஆக்கிரமிப்பினால் ஏனைய மொழிகள் அழியும் அபாயம்!

உலகில் மூன்று விதமான மொழிகள், உள்ளன. இறந்த மொழி, இலக்கண மொழி, மற்றும் உயிரியல் மொழி. தமிழ் என்பது உயிரியல் மொழியாகும். இதனை இறந்த மொழியாகவோ இலக்கண மொழியாகவோ மாற்றக் கூடாது.

புதுயுகம் அல்லது புதிய உலகம் என்பது இதுவரை நாம் கண்ட உலகத்தைக் காட்டிலும் வித்தியாசமானது. அதில், அடிப்படை வித்தியாசங்கள் இரண்டை காண முடிகிறது. நாம் நினையாதவாறு தொழில் நுட்பம் முன்னேறியுள்ளது. வெப் மற்றும் டிஜிடல் உபகரணங்கள் உருவாகியுள்ளன. எதிர்காலத்தில் இன்னும் புதிய உற்பத்திகள் சந்தைக்கு வரலாம்.

மற்றைய மாற்றம் என்னவென்றால், ஆங்கில மொழியின் ஆதிக்கம், ஆங்கில மொழி அறிவின்றி புதிய தொழில்நுட்ப உபகரணங்களை செயற்படுத்த முடியாது. எதிர்கால உலகத்திற்கு ஆங்கில அறிவு அத்தியாவசியமானது. ஆனால், ஆங்கில ஆதிக்கத்தின் காரணமாக ஏனைய மொழிகள் அழியும் அபாயம் உள்ளதால் நாம் மிகவும் கவனமாக இருக்க வேண்டும். இந்த பயங்கரமான அபாய அறிவிப்பு தற்போது இலத்திரனியல் ஊடகங்களில் காணக் கூடியதாக உள்ளது.

கட்டாயம் ஆங்கிலம் கற்கத்தான் வேண்டும். தமிழ் மொழி அழிவுக்குள்ளாவது சிங்களவர்களாலோ, ஆங்கிலேயர்களாலோ அல்ல. தமிழ் மொழியை அறியாதவர்களாலேயே. தமிழர்க்கும், முஸ்லிம்களுக்கும் தமிழ் மொழி வேண்டாமா?

இது ஆளும் கட்சியின் தொழில் வாய்ப்பு வருடமாகும். அதே போன்று ஆயிரக்கணக்கான பட்டதாரிகள் தொழில் வாய்ப்பை வேண்டி நடுவீதியில் ஒப்பாரி வைக்கும் வருடமுமாகும். 10 இலட்சத்திற்குக் கிட்டிய தொகையினரான தொழில் வாய்ப்பற்று நிர்க்கெதியாயுள்ள இளைஞர்-யுவதிகள் பெருமூச்சிவிடும் வருடமுமாகும்.

10 ஆயிரம் பட்டதாரிகளுக்கு அரச மற்றும் தனியார் நிறுவனங்களில் தொழில் வாய்ப்பு பெற்றுத் தரப்படும் என்று அரசசார்பு ஊடகங்கள் மூலம் பறைசாற்றப்பட்ட ஆனால், தொழில் வாய்ப்பேதும் பெற்றுக் கொடுக்காத வருடமுமாகும். ஆயிரக்கணக்கானோருக்கு வெளிநாட்டு தொழில்வாய்ப்பு பெற்றுத்தருவதாக அளித்த உறுதி காற்றில் கரைந்த வருடமுமாகும்.

ஒட்டுமொத்தமாகக் கூறுவதாயின் தேசிய தொழில்வாய்ப்புக் குழுவொன்றை வெளியிடுவதாகக் கூறினும் இன்னும் அது வெளியிடாத வருடமுமாகும்.

சாதாரண ஊழியர்களைச் சேர்த்துக்கொள்ளும் நடைமுறையை மீறி 2002 தை முதலாம் திகதியில் இருந்து 2003 புரட்டாதி முதலாம் திகதி வரையான காலத்துள் அனைத்து அரசாங்க நிறுவனங்களிலும் குறைந்தபட்சம் 500 பேர்களுக்கு மேற்பட்ட ஆலோசகர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள் மற்றும் சபைகளுக்கு நியமிக்கப்பட்ட 10 ஆயிரத்திற்கு கிட்டிய தொகையினரை விடுத்தே இன் நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

## அரசாங்க ஆலோசகர்கள் 68 பேரினது வருடாந்த செலவு ரூபா 540 இலட்சமாகும்

அதே வேளை அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள் மற்றும் சபைகளில் இருந்து வெளியேற்றப்பட்ட ஊழியர்களின் தொகை 15 ஆயிரத்திற்கும் அதிகமாகும். இதன் மூலம் அரசாங்கத்தின் தொழில் வாய்ப்புக் கொள்கையை நன்கு புரிந்து கொள்ள முடியும்.

ஆளும் கட்சி அரசியல் வாதிகளினால் முறைகேடான முறையில் நியமிக்கப்பட்டுள்ள ஆலோசகர்களுள் அடையாளம் காணப்பட்ட 68 பேர்கள் உள்ளனர். 2002 பங்குனி முதலாம் திகதியில் இருந்து 2003 பங்குனி முதலாம் திகதி வரையுள்ள காலத்துள் நியமிக்கப்பட்டுள்ள 68 ஆலோசகர்களுள் 52 பேரினது மாதாந்த சம்பளம் மட்டும் ரூபா 13 இலட்சத்தைத் தாண்டுகிறது. இந்த 68 பேரில் 16 பேரினது சம்பள விபரங்கள் கிடைக்கப்பெறவில்லை. ஆனாலும், கிடைத்துள்ள தகவல்களின்படி இந்த 16 பேரினதும் மாதாந்த சம்பளம் மட்டும் ரூபாய் 5 இலட்சத்தைத் தாண்டுகிறது. அப்படி கணக்கெடுப்பின் ஆலோசகர்கள் 68 பேரினதும் மாதாந்த சம்பளமாக அரசாங்க நிதியில் இருந்து ரூபாய் 18 இலட்சம் செலவு செய்யப்படுகின்றது.

இந்த ஆலோசகர்களுக்கு பாவனைக்காக வாகனங்களும் வழங்கப்பட்டுள்ளன. அவற்றுள் அனேகமானவை ரூபா 30000-35000 தொகைக்கு தனியாரிடம் இருந்து வாடகைக்கு பெறப்பட்டதாகும். மேலும், ஒவ்வொரு ஆலோசகர்களுக்கும் எரிபொருள் மற்றும் வேறு போக்குவரத்துச் செலவுகளும் கூட வழங்கப்பட்டுள்ளன. அதே போன்று தொலைபேசிக் கட்டணம் மற்றும் அனைபேருக்கும் நடமாடும் தொலைபேசி அல்லது நிரந்தர தொலைபேசியோ அல்லது இரண்டுமோ வழங்கப்பட்டுள்ளன.

இப்புறம்பான செலவினங்களையும் கணக்கெடுக்கும் பட்சத்தில் ஒரு ஆலோசகருக்கு எடுக்கும் சம்பளத்திற்குப் புறம்பாக குறைந்த பட்சம் ரூபாய் 40 ஆயிரமேனும் செலவிடப்படுகின்றது. அந்த வகையில் ஆலோசகர்கள் 68 பேரினதும் மாதாந்த புறம்பான செலவினங்கள் மட்டும் ரூபாய் 27 இலட்சத்தைத் தாண்டுகிறது.

சம்பளம் மற்றும் உபரி செலவினங்களை கணக்கெடுக்கும் பட்சத்தில் இவர்களுக்காக அரசாங்கம் மாதாந்தம் ரூபாய் 45 இலட்சம் செலவழிக்கின்றது. அதன்படி இவர்களுக்கான மொத்த வருடாந்த செலவீனம், ரூபாய் 540 இலட்சங்களாகும்.

இத்தொகை மேலும் அதிகரிக்க வாய்ப்புள்ளது. எவ்வாறெனில் விருந்தோம்பல் செலவுகள், காகிதாதிகள், உதிரி ஊழியர் குழாமிற்கான செலவுகளும், அடிப்படை செலவுகளுடன் கணக்கெடுக்கப்படுமிடத்து அதிகரிக்கவே செய்யும்.

இந்த ஆலோசகர்களுள் பெரும்பாலானோர் வேறு வேறு இடங்களில் நிரந்தர தொழில் வாய்ப்புக்களை பெற்றுள்ளவர்களே. இரண்டு தொழில் வாய்ப்புக்களில் இருந்தும் பணம் கறப்பவர்களே. தாம் தொழில் புரியும் ஏனைய நிறுவனங்களில் வழங்கப்படுகின்ற கொடுப்பனவுகளையும் (உதவித்தொகைகளையும்) பெற்றுக் கொள்கின்றனர்.

தொழில் வாய்ப்பற்ற தன்மைக்கு நிரந்தரத் தீர்வு எடுக்கப்படும் என்றும், அது வரை தொழில் வாய்ப்பற்றவர்களுக்கு மாதாந்தம் 2000 ஆயிரம் கொடுப்பனவு வழங்கப்படுமென்றும், அப்பழுக்கற்ற வகையில் நிர்வாகம் நடைபெறுமென்றும், ஊழல்கள், வீண் விரயங்கள் ஆகியவை ஓரங்கட்டப்படுமென்றும் தேர்தல் சமயத்தில் சூளுரைத்த ஐ.தே.க. ஆனது நாட்டை ஆளும் வரத்தைப் பெற்றிருக்கும் வேளையில் இத்தகைய முறைகேடான நிகழ்வுகளை அனுமதிப்பதை இட்டு பொதுமக்கள் சற்று சிந்திக்க வேண்டும்.

இத்தகைய நியமனங்களின் நோக்கம் தொழில் வாய்ப்பற்ற தன்மைக்கு தீர்வாகவோ, நாட்டின் அபிவிருத்தியை முன்னிட்டு ஆலோசனை பெறுவதற்காகவோ அல்ல என்பதையும், தங்களது அபிமானிகளுக்கு சுகபோக வாழ்வை அமைத்துக் கொடுப்பதற்கே என்பதையும் அனைவரும் உணர்ந்து கொள்ள வேண்டும்.

தனிப்பட்ட வகையில் சம்பந்தப்பட்டோரை தாக்குவது எமது நோக்கமல்ல. அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற வீண் விரயத்தையும், அநியாயத்தையும் சுட்டிக் காட்டுவதே எமது நோக்கமாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேதமாக்கப்பட்ட வீடுகளும் சிந்திக்க வேண்டிய எம்.பி.மாரும்

இந்தக் கட்டுரையின் நோக்கம் எம்பிமாரின் வீடுகளை உடைத்த சேதப்படுத்தியதை நியாயப்படுத்தியோ, உடைத்த இளைஞர்களை நியாயப்படுத்தியோ எழுதுவதல்ல. இவ்வாறு வீடுகள் உடைக்கப்பட்டு சேதமாக்கப்பட்டது சரியா தவறா என்ற விடயம் இரண்டாம் நிலை விவாதத்தின்பாற்பட்டது. இந்த வீடுடைப்பின் பின்னாலுள்ள சில யதார்த்தங்களை இந்த மூவேந்தர்களும் சற்று சீர்தூக்கிப்பார்க்க வேண்டும் என்பதே இந்தக் கட்டுரையின் நோக்கம். ஏன் தமது வீடுகள் சேதமாக்கப்பட்டன. இவ்வாறு சேதமாக்கத் தூண்டியது எது.....? தாம் விட்ட தவறுகள் என்னென்ன? தமக்காக உயிரையே தரத்துடித்த மக்கள் இன்று தமது உயிரையே ஒரு பொருட்டாக மதிக்காத நிலைக்கு தள்ளப்பட்டதேன்?

2000ஆம் ஆண்டு பத்தாம் மாதம் மூதூரில் தேர்தல் கூட்டத்தில் கலந்து கொண்ட முஸ்லிம் காங்கிரஸ் வேட்பாளரான உபைதுள்ளா மற்றும் ஏனைய இருபத்து நாலு முஸ்லிம் சகோதரர்கள் அக் கூட்டத்தில் இடம் பெற்ற புலிகளின் தற்கொலைத் தாக்குதலில் ஷஹீதாக்கப்பட்டனர். உபைத்துள்ளாஹ்வின் மரணத்தின் பின் ஏற்பட்ட அவரது வெற்றிடத்தை எங்கோ ஓர் மூலையில் சாதாரணமாய் வாழ்ந்து கொண்டிருந்த எம்.எஸ். தௌபீக் நிரப்பினார். பின் நடைபெற்ற தேர்தலில் உபைத்துள்ளா மற்றும் ஏனையோரின் மரணம் சம்பாதித்துத்தந்த அனுதாப வாக்குகளால் அவர் அரியணை ஏற்றப்பட்டார். எனவேதான் பல உயிர் இழப்புகளின் பின்னணியிலேயே எம்.எஸ். தௌபீக் எம்.பி யாக்கப்பட்டார். இது போலவே பலத்த நம்பிக்கைகளுடன் ஏனைய திடீர் தௌபீக், மற்றும் சின்ன மஹ்ரூப் எம்.பிக்களாக தெரிவு செய்யப்பட்டனர்.

ஆனால் கிண்ணியா மக்களின் மனக்கணக்கில் மண்ணள்ளிப்போட்டதாக அமைந்த அவர்களது செயற்பாடுகளும், நடவடிக்கைகளும் ஐயோ நாங்கள் நன்றாக ஏமாற்றப்பட்டுவிட்டோமே என்ற கழிவிரக்கத்துக்கு முஸ்லிம்களை உள்ளாக்கியது என்பது நூறுவீத உண்மை. இவர்கள் எம்.பிக்களாக தெரிவு செய்யப்பட்ட ஆரம்பகாலகட்டம் தொட்டு இன்றுவரை இவர்களிடையே நீயா நானா என்ற சபாஷ் சரியான போட்டி. ஒருவர் ஒரு அபிவிருத்தி வேலைத்திட்டத்தை முன்வைத்தால் அடுத்தவர் அதற்கு எப்படியாவது முட்டுக்கட்டை போடுவார். இவ்வாறான பல சம்பவங்கள் நிகழ்ந்ததன் பயன் கிண்ணியா முஸ்லிம்களுக்கு ச்சீ எனப்போய்விட்டது. உதாரணமாக 2002ஆம் ஆண்டு முள்ளிப்பொத்தானையில் நிர்மாணிக்கப்பட்ட புகையிரத நிலையத்தை திறந்து வைப்பதில் சின்ன மஹ்ரூபுக்கும் - சின்ன தௌபீகுக்கும் இடையில் பனிப்போர் நிகழ்ந்து கடைசியில் சின்ன தௌபீக் கத்திரி பிடித்து றிபன் வெட்டினார். கிண்ணியாப்பாலத்தை கட்டுவதில் அக்கறை காட்டிய எம்.பி நீயா நானா என்ற போட்டியில் சின்ன மஹ்ரூபும் சின்ன தௌபீக்கும் கோதாவில் இறங்கியுள்ளதுதான். இது போல அண்மையில் கிண்ணியாவில் பஸ்டிப்போ கட்டுவதற்காக முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு அது வெற்றிநிலையும் அடைந்த நிலையில் சின்ன தௌபீக் பஸ்டிப்போ கட்டுவதற்காக ஒரு இடத்தை (Site) முன்மொழிய நீ எது சொன்னாலும் அவை எல்லாவற்றையும் எதிர்த்தே தீருவேன் என்ற தோரணையில் மஹ்ரூப் வேறோர் இடத்தை வழி மொழிந்தார். விளைவு பஸ்டிப்போ விவகாரம் நோய்கொண்டு படுக்கையில் வீழ்ந்துவிட்டது.



சபருள்ளா கிண்ணியா – 06

இவர்களின் இந்த ஏட்டிக்குப்போட்டி என்ற மோசமான தாக்குதலில் தகர டப்பாவாய் நசுங்கிப் போனது இவர்களுக்காக வோட்டுப்போட்ட அப்பாவி கிண்ணியா ஜனங்கள்தான். இன்றும் அதே பழைய கிண்ணியா, பள்ளம் மேடு தூங்கும் அதே பழைய தார் இறந்த பாதைகள் ஒரு சில கிரவல் ரோடுகளைத்தவிர அபிவிருத்தியின் கடைக்கண்பார்வை கிண்ணியா நோக்கி விழுந்ததாய் தெரியவில்லை. கிண்ணியா முஸ்லிம்களைப் பொறுத்தவரை So many cooks spoil the soup என்ற வெள்ளைக் கார வாசகம் நிஜமாகிவிட்டது. மண்டுகளைப்போல இந்த எம்பிமார்கள் தம்முன்னேயே சண்டை போட்டுக் கொண்டது மக்களின் சிண்டைப்பிய்த்ததோடு மூன்று முஸ்லிம் பிரதிநிதித்துவம் என்ற பெருமைப்பீற்றலை ஒரேயடியாகப் பெயர்ந்தெறிந்து விட்டது.

அபிவிருத்தி தொடர்பான இவர்களது சிறுபிள்ளைத்தனமான சண்டை பொதுவாக மக்கள் நலன், சமூக நலன் என்று யோசிக்கின்றவர்களை ரொம்பவே கோபப்படுத்தியிருந்த வேளைதான் அரசுக்கும் - புலிகளுக்குமிடையே ஏற்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின் திருமலை மாவட்ட முஸ்லிம்கள் மீது குறிப்பாக மூதூர், கிண்ணியா முஸ்லிம்கள் மீது புலிகளால் கட்டவிழ்த்து விடப்பட்ட ஆதிக்கபாவம் ஆரம்பித்தது.

கிண்ணியாவில் தொடர்ந்தும் புலிகளால் அரங்கேற்றப்பட்டு வந்த கப்பம் கோரல், ஆட்கடத்தல், கால்நடைக்கடத்தல், ட்ரக்டர் மாட்டுவண்டில்கள் கடத்தல் என்பன தம் இயைபாக்கத்தை முற்செலுத்தி நகர ஆரம்பித்தன. இவ்வாறு பல கோரச்சம்பவங்கள் நடந்தும் இந்த மூவேந்தர்களும் வாய்பொத்தி மௌனியாகக் கிடந்தனர். ஏழை விவசாயிகளின் மாட்டு வண்டில்களை கடத்தி கப்பம் கோருதல் அதிகரித்தன. முஸ்லிம்களின் கடைகள் உடைக்கப்பட்டு சூறையாடப்பட்டன. குறிப்பாக இந்த வருடத்தின் ஜூன் மாதத்தில் புலிகளால் எழுபத்தைந்து மாடுகளுடன் கடத்திச் செல்லப்பட்ட வான் எலயைச் சேர்ந்த லத்தீப் என்பவர் என்ன ஆனார் என்பது இன்னும் தங்கமலை ரகசியமாகவே உள்ளது. இதற்கெல்லாம் முத்தாய்ப்பு வைத்தாற்போல முஸ்லிம்களின் பூர்வீக பூமியான குரங்குபாஞ்சான் புலிகளால் கடந்த ஜூன் மாதம் வரலாறு திரிவு படுத்தப்பட்டு உண்மை வரலாறு ஊமையாக்கப்பட்டு ஆக்கிரமிக்கப்பட்டது. ஆக்கிரமிக்கப்பட்ட முஸ்லிம்களின் பூர்வீக பூமியான குரங்குபாஞ்சான் தொடர்பில் சமூக அக்கறை உள்ள சிலர் பத்திரிகை வாயிலாகவும், கலந்துரையாடல்கள் மூலமாகவும் ஆக்கிரமிக்கப்பட்ட குரங்குபாஞ்சான் முஸ்லிம்களின் தாயகமே என்று போராடிக் கொண்டிருக்கின்றனர். கிண்ணியாவின் ஒவ்வொரு முஸ்லிமும் ஆக்கிரமிக்கப்பட்ட தனது மண் தன்னிடமே மீளவும் வந்து சேர வேண்டும் என்ற கொதிப்பிலும் உணர்விலும் இன்றுவரை உயிர்தரித்துக்கொண்டிருக்கிறான். குரங்கு பாஞ்சான் உள்ளூரில் மட்டுமல்லாது சர்வதேச தளத்திலும் ஒரு மிகப்பெரிய பிரச்சினையாக (issue) வெடித்து முஸ்லிம்களது பூர்வீக பூமியே என்ற கோஷம் இன்னும் வந்து கொண்டுதானிருக்கிறது. ஆயுதம் தவிர அனைத்து வழிகளாலும் முஸ்லிம்கள் தமது தாயகத்தை மீட்க போராடிக்கொண்டுதானிருக்கிறார்கள்.

ஆனால் இவ்வளவு சஞ்சலங்களை ஏற்படுத்தியுள்ள இந்த குரங்கு பாஞ்சான் மீது இந்த மூன்று எம்பிக்களும் காட்டிய அக்கறை காணுதற்கரியது. குரங்குபாஞ்சான் தொடர்பில் ஓரிரு வார்த்தைகளை சப்பிக் கொட்டி விட்டு ஒரேயடியாய் ஒதுங்கிக் கொண்ட இவர்களிடம் கிண்ணியா முஸ்லிம்கள் இது தொடர்பில் ரொம்பவும் எதிர்பார்த்தனர். எனினும் வழமை போலவே இந்த மூவேந்தர்களும் ஏமாற்றி விட்டனர். ஒரு சாதாரண முஸ்லிம் குடிமகன் காட்டிய அக்கறையை விடவும் ஒரு துணிக்கையளவே அமைந்த இவர்களது கரிசனை எந்த மூலைக்கு என எரிந்தனர் மக்கள். குரங்குபாஞ்சான் புலிகளால் ஆக்கிரமிக்கப்பட்டு சுமார் நான்கு மாதங்கள் கடந்த பின்னரே

ஒப்புக்கு இவர்கள் குரங்குபாஞ்சான் முஸ்லிம்களின் பூமி என ஓதிவைத்தனர். இவ்வளவு காலம் இதைச் சொல்ல எடுத்ததற்கு காரணம் இவர்கள் ரொம்பவும் பிஸி.....?

ஆகக்குறைந்தது குரங்குபாஞ்சான் முஸ்லிம்களின் பூர்வீக பூமியே என அழுத்தம் கொடுத்து தன் குரலை எழுப்பக் கூட இல்லை இவர்கள். வெறுமனே நாற்காலிகாக்கும் நபர்களை பிரதிநிதிகளாக நிறுத்தினால் பின் என்னதான் நடக்கும் என்ற நிலையே கிண்ணியா மக்கள் மனதில் வேரூன்றலாயிற்று.

குரங்கு பாஞ்சான் புலிகளால் ஆக்கிரமிக்கப்பட்ட பின்னர் அதனைச் சுற்றியுள்ள முஸ்லிம் பிரதேசங்களில் வாழும் பல முஸ்லிம் சகோதரர்கள் புலிகளால் கடத்தப்பட்டனர். கடைகள் கொள்ளையிடப்பட்டன. கப்பம் வசூலிக்கப்பட்டது. தொடரும் அநீதிகளை முற்றுப்புள்ளிக்குள் செல்லுமாறு சொல்ல எவருமில்லை, யாருமில்லை. முஸ்லிம் தேசத்தெருவில் அலைகின்ற அநாதைகளாக கிண்ணியா முஸ்லிம்களின் தலைவிதி தறுதலையானது.

இவ்வாறு பல விடயங்களில் தமது எம்பிமாரை நம்பி ஏமாந்து கொண்டிருக்கும் வேளைதான் 22.10.2003அன்று மீண்டும் புலிகளால் முஸ்லிம் சகோதரர் ஒருவருக்குரிய மாட்டுவண்டில் கடத்திச் செல்லப்பட்டு கப்பம் கோரப்பட்டது. இதனால் வெகுண்டெழுந்த கிண்ணியா மக்கள் தமது எதிர்ப்பை காட்டுமுகமாக அடுத்த நாள் ஹர்த்தாலை அனுஷ்டித்தனர். இதுவரைகாலமும் தம்முள் அடக்கி ஒடுக்கி வைத்த உணர்ச்சிகளை அன்றைய தினம் கொட்டித் தீர்த்த இளைஞர்களின் கோபவேசம் மூன்று எம்பிமார்களின் வீடுகளை நோக்கித் திரும்பியது. விளைவு அந்த வீடுகள் சேதமாக்கப்பட்டன. உண்மையில் இந்த வீடுகளை இந்த இளைஞர்கள் உடைக்க பின்னணிக்காரணம் மூன்று எம்பிக்களும்தான். இவர்கள் சரியாகச் செயற்பட்டிருந்தால் ஏனிந்த நிலை?

இந்த எம்பிமார்கள் சற்று சிந்தித்துப்பார்க்க வேண்டும். தம்மை அரியணையேற்றிய சமூகத்துக்காக தாம் இதுவரை எதைச் செய்திருக்கிறோம். சுயலாபங்கள் துடைத்தெறியப்பட்ட ஏதாவது சமூக நலன்பேண் செயற்றிட்டங்களை செய்திருக்கிறோமா? சிறுபிள்ளைத்தனமாய் தம்மிடையே மோதிக்கொண்டு நாயும் கரிச்சட்டியுமாக இருந்ததை விட வேறெதனை சாதித்திருக்கிறோம்? தமது உல்லாச வாழ்க்கையை சுகித்துணர்ந்ததை விடவும் கிண்ணியா முஸ்லிம்களின் கிழிஞ்சல்களுக்கு ஒட்டுப்போட்டு நல்ல நிலைக்கு கொண்டுவர எப்போதேனும் செயற்பட்டிருக்கிறோமா? கிண்ணியா முஸ்லிம்கள் சரியான தலைமைத்துவமின்றி எதிர்கொண்ட துயர்களை எப்படி பங்குபோட்டுக்கொண்டது என்பதைக் கூட காண முடியாக் கண்ணிழந்தவர்களாக ஏன் மாறிப்போனோம்? தாம் இந்த மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளில் ஒன்றையேனும் இதுவரை நிறைவேற்றியிருக்கிறோமா? அரசியலதிகாரத்தைப்பயன்படுத்தி சொத்து சேர்க்கும் முயற்சியில் இறங்கியது தவிரவும் வருகின்ற கொண்ராக்ட்களை உறவினர்கள், அதி தீவிர கட்சிக்காரர்களிடையே பங்கு போட்டு பணம் பண்ணியது தவிரவும் வேறு எதனை உருப்படியாக நிகழ்த்திவிட்டோம்? தலைமைத்துவ பீடத்துக்கு தகுதியற்றவர்களாயினும் கூட தம்மை தலைவர்களாக ஏற்று அங்கீகரித்த இந்த அப்பாவி ஜனங்களின் அபிலாஷைகளுக்கு தம்மால் வழங்கப்பட்ட அங்கீகாரம் என்ன? என்பனவற்றை இந்த மூவரும் சற்றேனும் சிந்தித்துப்பார்க்காவிட்டால் இவர்களைவிடவும் ஊனச்சிந்தனையாளர்கள் எவருளர்.....?

எனவேதான் இனியாவது இந்த மூவேந்தர்களும் சிந்தித்துப்பார்க்கவேண்டும். தமது வீடுகளையே சேதமாக்குமளவு மக்கள் துணிந்து விட்டார்கள் என்றால் எங்கோ தாம் பெரியதொரு தப்பை புரிந்து விட்டோம் என்பதனையுணர வேண்டும். ஆதரித்த மக்கள் கரங்கள் இன்று அடிக்க வருகின்றன என்றால் அதற்கு தாம்தான் காரணம் என்பதனையுணர்ந்து தம்மை திருத்திக் கொள்ளவேண்டும். .

பாராளுமன்ற உறுப்பினர்களே! உங்களை ஒரு கேள்வி கேட்க வேண்டும்.. இவ்வளவு கொடுமைகள் புலிகளால் கிண்ணியா முஸ்லிம்களுக்கு இழைக்கப்பட்ட போதிலும் நீங்கள் மௌனத்தின் அதிபத்தினிகளாக இருந்தது ஏன்? கிண்ணியா மக்களின் துயரம் உயிரே எழுந்து கண்ணீர்மழை சிந்தியபோது இது உங்களை கொஞ்சமும் காயப்படுத்தாதது ஏன்? உங்களுக்கு கிண்ணியா முஸ்லிம்களுக்காக குரல் கொடுக்க தொண்டைக்குழியில் சப்தம் தொலைந்துபோனதா?

எமது பாராளுமன்ற உறுப்பினர்களே! நீங்கள் செல்லும் வெளிநாட்டுப்பயணங்களோ, ஏ.சி வாகனங்களோ, உல்லாசச்சுற்றுலாக்களோ கிண்ணியா முஸ்லிம்களின் இருப்பை உறுதிப்படுத்தப் போவதில்லை. நீங்கள் உணரவேண்டும். யதார்த்தம் புரியவேண்டும். நீங்கள் மக்களால் தெரிந்தெடுக்கப்பட்டது ஏன், தமது தெரிவின் தாற்பரியத்தை தாம் இதுவரை உணராதது ஏன் என்பவற்றைப் பற்றி சற்று சிந்திக்க வேண்டும். உங்களின் வீடுகள் உடைக்கப்பட்டு, சேதமாக்கப்பட்டதற்கு நிச்சயம் நட்டஈடு கிடைக்கும். ஆனால் இதுவரைகாலமும் நஷ்டங்களையே அனுபவிக்கும் கிண்ணியா முஸ்லிம்களின் நஷ்டத்தை ஈடுகட்ட தாம் என்ன செய்யப் போகின்றோம் என்ற பிரஞ்ஞை உங்களிடத்தில் ஏற்படவேண்டும். இனிமேலாவது நீங்கள் மூவரும் ஒன்று பட்டு கிண்ணியாவின் ஏனைய திருமலை முஸ்லிம் பிரதேசங்களின் வளர்ச்சிக்காக அனைத்து முஸ்லிம்களின் உரிமைக்காக சப்தமிட்டு குரல் கொடுக்க முன்வரவேண்டும். இனியும் நீங்கள் திருந்தவில்லையென்றால் அடுத்துவரும் தேர்தலில் ஸீட் தேடியலையும் திருப்பணியில் தயவு செய்து ஈடுபடாதீர்கள்.

## பிறந்த நாள் வாழ்த்து



காத்தான்குடி 3ம் குறிச்சி கல்மதில் ஒழுங்கையில் வசிக்கும் அஹமட் - நாதிரா தம்பதிகளின் செல்வப் புதல்வன் முஹம்மட் ஹனப் அவர்கள் சென்ற 09-11-2003 ஞாயிறு அன்று தனது முதலாவது பிறந்த தினத்தை வெகு விமர்சையாக தமதில்லத்தில் கொண்டாடினார். இவரை உம்மா, வாப்பா, மூத்தம்மா, மூத்தவாப்பா, சின்னம்மா, சகோதரர்களான ஹம்ஸத், ஹதினா, மனால், ஹந்தா, ஆகியோர் நீண்ட ஆயுளுடன் சகல சௌபாக்கியங்களும் பெற்று அல்லாஹ்வின் நல்லருள் பெற்று நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வழியில் சென்று வாழ வாழ்த்துகின்றார்கள்.

அபிமான் பல் பொடி
ABHIMAANS
TRADE MARK


தயாரித்து விநியோகிப்போர்
அபிமான் தொழிலகம்
காத்தான்குடி - 04

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாரம்
ஆங்கில ஊடகங்கள்

# இலங்கையில் உறுதியான அரசியல் தீர்வுக்கான அடிப்படை

ஜெஹான் பெரேரா

தமிழில் : ஏ.எம். முஹம்மட் மதனி



இந்நாடு இன்று அழிவின் விளிம்பை எட்டியுள்ளது என்பது கசப்பான உண்மையாகும். நோர்வேயின் செயற்பாடுகள் இடைநிறுத்தப்பட்டுள்ள இவ்வேளை சுமார் 20 ஆண்டுகால யுத்தத்துக்கு வித்திட்ட நிகழ்வுகள் மீண்டும் தொடரமுடியாது எனக் கூறப்படுவது கடினம். ஜனாதிபதி முக்கியமான மூன்று அமைச்சுக்களை கையேற்று அரசியலின் மத்திய தளத்துக்கு வந்த போது வடக்கு கிழக்கு மக்கள் இவ்வாறே திகிலடைந்தனர். காரணம் எதிர்முக அரசியலுக்குப் பெயர் போனவர் ஜனாதிபதி சந்திரிக்கா. இது அவரின் உறுதியான தன்மையாக இருக்கலாம். எனினும் இது சமாதானத்தை உருவாக்குவதற்கான அல்லது சமாதானத்தைப் பேணுவதற்கான ஒரு அடையாளமல்ல.

ஜனாதிபதியின் அண்மைய நடவடிக்கைகளின் பின்னர் சமாதான முன்னெடுப்பு தொடர்பான நிச்சயமற்ற தன்மை குறிப்பிடத்தக்க அளவு கூடியுள்ளது என்பது உண்மை. நோர்வேயினர் திரும்பிச் சென்றுள்ளமை, தற்காலிகமானதாயினும் நிச்சயமற்ற தன்மையினை அதிகரிக்கச் செய்துள்ளது. புலிகள் இவ்வாண்டு ஏப்ரல் மாதத்தில் சமாதானப் பேச்சு வார்த்தைகளில் இருந்து ஒதுங்கி, ஆறுமாதங்களாக இழுத்தடித்த போது கூட நோர்வேயினர் பொறுமையாக இருந்தனர். இச்சந்தர்ப்பத்தில் நோர்வேயினர் மிக அவசரமாக நடந்து கொண்டனரா என்பது கவனிக்கப்படவேண்டிய ஒரு விடயமாகும்.

ஜனாதிபதியின் துயரங்கள் என்னவாக இருந்த போதும் அவர் நாட்டைப் பொருளாதார ரீதியில் இத்தகைய பெரும் இழப்புக்கள் ஏற்பட இடம் வராத நிலையில் செயற்பட்டிருக்க முடியும்.

அத்துடன் சமாதான முன்னெடுப்பைப் பொறுத்த வரையிலும் இத்தகைய பின்னடைவுகள் ஏற்பட இடமளியாது செயற்பட்டிருக்கலாம். தனது திடீர் முடிவின் பின்னர் பொதுவிடங்களில் துருப்புக்களை இருத்துவதன் மூலம் தான் பொறுப்பானவர் என உலகிற்கு காட்டமுனைந்திருக்கலாம். ஆனால் அது இந்நாட்டுக்கும், வன்னிக்கும், சர்வதேச சமூகத்துக்கும் தவறான சமிங்ஞையின் தகவலை அனுப்பியது.

இப்போதைய பெரும் ஆபத்து நாடு, சரியாகத் திட்டமிடப்படாத யுத்தமொன்றுக்கு தள்ளப்படலாம் என்பதே. ஜனாதிபதி மூன்று அமைச்சுக்களை பொறுப்பேற்றுள்ளார் என்ற தகவல் கிட்டியதும் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள வன்னியில் எரிபொருட்கள் உட்பட பல முக்கியமான பொருட்கள் திறந்த சந்தையில் இன்று மாயமாக மறைந்தன. யுத்த காலத்திற் போன்று பொருளாதாரத் தடைகள் ஏற்படுமென்று அஞ்சிய புலிகளும் மக்களும் இவ்வாறு பொருட்களை வாங்கிப் பதுக்கி இருக்கலாம். தமது வீடுகளையும், வாழ்க்கையினையும் மீளக் கட்டியெழுப்பத் தொடங்கிய மக்கள், மிக மோசமான நிலையினை எதிர் கொள்ளத் தயாராகின்றனர்.

இந்நாட்டின் சமாதான முயற்சி பெரும் செலவின் பின்னர் அர்ப்பணிப்புக்கள் மத்தியில் தொடங்கப்பட்டது. என்பதனைப் பிரதான பாகமேற்றுச் செயற்படுபவர்கள் சீர்தூக்கிப் பார்க்கத் தவறியுள்ளனர். அவர்களது சிந்தனையில் வேறு விடயங்கள் முன்னுரிமை பெறுகின்றன.

சமாதான முன்னெடுப்பின் காரணமாகத் தமது கைகள் சுடப்படும் போது அதனைக் கை விடும் மனப்பான்மை அவர்களிடம் நிலவுகிறது. ஆனால் பிரதமர் ரணிலோ தனது அரசில் பதவிகள் அகற்றப்பட்ட பின்னரே இத்தகைய முடிவினை மேற்கொண்டார்.

யுத்தத்தில் தரப்பினர்கள், சமாதான முயற்சி நிச்சயமற்ற தன்மையினை அடையும் போது, தமது அக்கறைகளைப் பாதுகாப்பதற்காகத் தமது இராணுவத்தின் மீது நம்பிக்கை கொள்வது இயல்பு.

எனவே நெருக்கடி நிலையின் போது இரு தரப்பினரும் ஆயுத அதிகரிப்பில் கவனஞ் செலுத்துவர். புலிகள் நிச்சயமாக ஆயுதங்களைக் கடல் மார்க்கமாகப் பெறுவதை அதிகரிப்பர். இதனால் கடற்படைகளின் பார்வையில் சிக்கி, மோதல்கள் ஏற்படுவது தவிர்க்க முடியாதது.

முன்னர் ஆயுதக் கப்பலுடன் தலைமறைந்த அல்லது தற்கொலை செய்து கொண்ட புலிகள் இப்போது வேறுவிதமாய் செயற்பட்டு மோதலுக்குத் தயாராகலாம். இவ்வாறாக ஒரு தனிப்பட்ட சம்பவத்தின் விளைவாகத் தொடர்ச்சியான பல துர்விளைவுகள் ஏற்பட்டு இரு கட்சிகளும் அரசியல் தலைமையினால் கட்டுப்படுத்த முடியாத நிலை ஏற்படலாம்.

ஜனாதிபதி பிரச்சினையற்ற இடத்தில் பிரச்சினையேற்படுத்தி விட்டு இழப்பினைக் கட்டுப்படுத்துவதற்காகப் பகீரதப் பிரயத்தனம் செய்கிறார். புலிகளைக் கடுமையாக விமர்சித்த ஜனாதிபதி இப்போது அவர்களின் நடத்தையில் காணப்பட்டுள்ள விருத்தியினை மெச்சுகிறார்.

புலிகளின் இடைக்கால நிருவாக ஆலோசனைகளை அவரது கட்சி கடுமையாக விமர்சித்த போதும், அவற்றை அடிப்படையாக வைத்துப் பேச்சுவார்த்தைகளை நடத்த முடியும் என்பது ஜனாதிபதியின் கருத்தாக உள்ளது.

ஜனாதிபதியின் இச்சிந்தனை மாற்றத்திற்கான காரணம் பிரதமர் ரணில் தன்மீது விடுக்கப்பட்ட எல்லா வகையான பழிச் சொற்களுக்கு மத்தியிலும் சமாதான முன்னெடுப்பில் ஈடுபட்டு விட்டு இக்கட்டத்தில் அதனைச் ஜனாதிபதியின் பொறுப்பில் விட்டமையாக இருக்கலாம்.

சமாதான முன்னெடுப்பில் கடந்த இரண்டு ஆண்டு காலமாய் பிரதமர் வெற்றி அடைந்துள்ள போதும், ஜனாதிபதி இன்னும் அதிக தூரம் செல்ல வேண்டியுள்ளது.

ஜனாதிபதி, புலிகளிடம் வெற்றிகரமாகப் பேச்சுவார்த்தை நடத்த முன், நல்லுறவுகளை கட்டியெழுப்ப வேண்டும்.

புலிகளின் ஆலோசனைகளை ஜனாதிபதியின் குழுவினர் இரண்டு நாட்களுக்குள்ளேயே நிராகரித்து இருந்தது. பிரச்சினைகளை தீர்ப்பதற்கான ஆற்றல் இன்மையினையே காட்டுகிறது. பிரச்சினைகள் தீர்ப்பின், முதல் அடிப்படை அம்சம், பேச்சுவார்த்தைமூலம் தீர்வு காணப்படப் போகின்ற தரப்பினருக்கு மரியாதை தெரிவிப்பதாகும்.

இந்த அணுகுமுறையினை அரசாங்கம் சரியாகச் செயற்படுத்தி உள்ளது.

சமாதான முன்னெடுப்பு மீளத் தொடங்கப்பட வேண்டுமெனின் பாதுகாப்பு, பேரம் பேசுதல் போன்ற இரண்டு விடயங்கள் தொடர்பான அதிகாரங்கள் ஒரு தனியான அதிகார அமைப்பிடம் வழங்கப்படுதல் வேண்டும். காரணம் அரசியல் சலுகைகளும் பாதுகாப்புப் பற்றிய கவனமும் சமாதான முன்னெடுப்புடன் இரண்டறத் தொடர்பு பட்டதாகும். உதாரணமாகச் சமாதான முன்னெடுப்பின் போது முன்னோக்கப்பட வேண்டிய முக்கிய ஒரு விடயம் இடம் பெயர்ந்த மக்களும் அவர்களின் மீளக்குடியேற்றமும் பற்றியதாகும். எவ்வாறெனினும் பெரும்பாலான விடயங்களில் மீள்குடியேற்றம் எனும் போது பாதுகாப்புப் படைகள் அம்மக்கள் முன் குடியிருந்த காணிகளில் இருந்து வெளியேறுவதுடன் தொடர்பு படுகிறது.

மீள்குடியேற்றம் தொடர்பான பேச்சுவார்த்தைகள் பாதுகாப்பு விடயங்களுடன், பிரிக்கப்படமுடியாத படி இரண்டறக் கலந்துள்ளது.

சமாதானத்தை அடைவதற்காக அரசாங்கத்திடமும், ஜனாதிபதியிடமும் வேறுபட்ட திட்டங்கள் இருக்கும் வரைக்கும், அவர்கள் ஒருங்கிணைந்த சமாதானத் தீர்மானம் எடுக்கும் குழுவாக இயங்க முடியாது. ஜனாதிபதியின் எதிர்ப்புத் தன்மையான, போர் மனப்பாங்குள்ள அணுகுமுறை புலிகளைப் போன்ற பயங்கரவாத அமைப்புடன் சமரச முயற்சியில் ஈடுபடுவதற்குப் பொருத்தமானதன்று. சமாதான முன்னெடுப்பை, எவ்வித தங்கு தடையுமின்றி நடத்திக் கொள்வதற்கு அரசாங்கத்திற்கு இடமளிக்கப்படுதல் வேண்டும்.
ஜனாதிபதி பாதுகாப்புச் சபைக் கூட்டங்களுக்குத் தலைமை தாங்குதல், பாதுகாப்பு அமைச்சர் நாடாளுமன்ற விவகாரங்களைக் கவனித்துக் கொள்ளுதல் போன்ற பிரெஞ்சு முறையிலான இணைந்த தன்மையினைக் கவனிக்கும் ஆலோசனை பயனுள்ளதாக இருக்கலாம்.

தீர்வு என்னவாக இருந்த போதிலும், அது சமாதான முன்னெடுப்பிலும் ஜனாதிபதி அரசுக்கும் இடையிலான அரசியல் அக்கறைகள் தொடர்பிலும் முரண்பாடுகளைத் தீர்ப்பதாக அமைய வேண்டும். இப்போது ஏற்பட்டுள்ள நெருக்கடியும், அபாயகரமான அரசியல் இக்கட்டான நிலையும் சமாதான முன்னெடுப்பு சீர்குலையாமல் பாதுகாப்பதற்கான உந்துதலை இரு தரப்பினர்க்கும் வழங்குதல் வேண்டும்.

ஜனாதிபதி தன்னிச்சையாக கையேற்ற அமைச்சுக்களைத் திருப்பியளிப்பின் அதன் மூலம் சமாதான முன்னெடுப்பு பலமடையும் எனினும் ஜனாதிபதி இம்மூன்று அமைச்சுக்களையும் கையேற்ற காரணம், வெறுமனே சமாதான முன்னெடுப்பைப் பொறுப்பேற்கவோ, அப்பணியைத் தனது கட்சி மூலம் செயற்படுத்தவோ அல்ல ஜனாதிபதியின் பெரும் நோக்கம் அரச அதிகாரத்தைத் தனக்கும், தனது கட்சிக்கும் எடுத்துக் கொண்டு பிரதமரிடமிருந்தும், அவரது கட்சியிடமிருந்தும் அவ்வதிகாரத்தை அகற்றுவதே.

மறுவார்த்தைகளிற் கூறப் போனால் இப்போதைய நெருக்கடியின் ஆணி வேர் ஒரு விடயத்தில் தங்கியுள்ளது. ஐ.தே.க பொது சன ஐக்கிய முன்னணி இடையிலான நிரந்தரமான போட்டித் தன்மையே அது.

ஒவ்வொரு தரப்பினரும் தாம் நாட்டை ஆள வேண்டும் அதிகாரத்தைப் பெற்று அதன் விளைவாக பயன்களை அனுபவித்தல் வேண்டும் என்பதே. அவ்வதிகாரத்தைப் பெறக் கருதும் ஒவ்வொரு தரப்பினரும், அதற்காக எதையும் செய்யத் தயாராக உள்ளனர். எச்செலவு செய்தாவது அதிகாரத்தைப் பெறுவதே இதன் நோக்கம்.. கடந்த இரு ஆண்டுகளாக எதிர்க்கட்சியில் உள்ள கூட்டுமுன்னணி தாம் அனுபவிக்கக் கருதுவதைத் தமது அரசியல் எதிரிகள் அனுபவிப்பதைக் கண்டு விரக்தி அடைந்துள்ளனர். முன்னர் ஐ.தே.கட்சி எதிர்க்கட்சியில் இருந்த போதும் இதே நிலை மறுபக்கமாக வேலை செய்தது.

ஆகவே, இப்போதைய நெருக்கடிக்கு உறுதியான அரசியல் தீர்வொன்றினை உருவாக்கியமைப்பதில், அதிகாரப் போராட்டத்தின் யதார்த்த நிலை உணரப்பட்டு, அரசியல் அதிகாரத்தில் ஜனாதிபதியும் அவரது கட்சியும் தெரிவித்து வரும் அக்கறை உரியமுறையிற் கையாளப்படுதல் வேண்டும்.

ஜனாதிபதியின் சகோதரர், கட்சியினுள் உட்பூசலையேற்படுத்தி வருவதாகவும் சமாதான முன்னெடுப்புக்கள், பொருளாதாரம் என்பன தொடர்பாக முற்றிலும் மாறுபட்ட கொள்கை கொண்ட ஜே.வீ.பியுடன் தேர்தல் ஒப்பந்தமொன்றை மேற்கொள்ளும் படி அவர் தனது சகோதரியை வற்புறுத்துவதாகவும் கூறப்படுகிறது. இத்தகைய சந்தர்ப்பவாத அரசியலில் சிக்காமல் ஜனாதிபதி செயற்படுவது வரவேற்கத்தக்கது.

ஜனாதிபதியினதும் அவரது கட்சியினதும் பெரும் அவா, ஜனாதிபதியினது, இரண்டாவதும் கடைசியானதுமான பதவிக்காலம் 2005ம் ஆண்டு டிசம்பர் மாதம் முடிவடைகின்றபடியால் அதுவரை வீணே உட்கார்ந்து, நடைபெறும் விடயங்களை அவதானித்துக் கொண்டிருக்கக் கூடாது என்பதாகும். அக்கட்சியின் தலைவர் என்ற வகையிலும், வாக்குகளைப் பெறுவதில் சமர்த்தர் என்ற வகையிலும், அவர் அக்கட்சியின் பெரும் சொத்தாகும்.

நிறைவேற்று அதிகாரம் மிக்க ஜனாதிபதிப் பதவியைச் சீர்திருத்தல் அல்லது மாற்றியமைத்தல், முழுமையான அரசியல் தீர்வின் முக்கிய பாகமாக அமைதல் வேண்டும்.

டெய்லி மிரா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊசிமுக்கான் என்பது ஒரு ஊருமல்ல, ஒரு கிராமமுமல்ல. எருக்கலம்பிட்டியின் வரலாறு எழுதப்படல் வேண்டும்!

- இஸ்மாயில் -

"மன்னார் பள்ளிமுனை ஊசிமுக்கான் துறையிலிருந்து அரைநூற்றாண்டு பழைய அந்தோனியார் கோயிலை உமதூர் இளைஞர்கள் ஏனப்பா குண்டு வைத்துத் தகர்த்தார்கள்? இது அநியாயமில்லையா?" புத்தளம் அகதிகள் குடியேற்றத்தில் வாழும் என்னிடம் அயலூர் கத்தோலிக்க நண்பர் கேட்ட கேள்வி இது. கடந்த 13 ஆண்டுகளாக நண்பராகவும். அயலவராகவும் இருந்த அவர் எதிரியாக என்னை நோக்கினார். இது போன்ற பல இன மோதல்களை தெற்கில் தவிர்க்க வேண்டி சில விளக்கங்களை கூற நம் அரசியல்வாதிகள் ஏனோ பயப்படுகின்றார்கள்.

06.10.2003 வீரகேசரியில் அமைச்சர் ஜோன் அமரதுங்காவிற்கு கொழும்பிலுள்ள கத்தோலிக்க இளைஞர் கழக செயலாளர் திரு தாசன் பெர்ணான்டோ எழுதிய அறிக்கையில் 78 ஆண்டுகளுக்கு மேல் பழைமை வாய்ந்த மன்னார் பள்ளிமுனை புனித அந்தோனியர் ஆலயம் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டமை சமாதானத்தைக் குழப்பும் முயற்சியே என்று கூறியிருந்தார். (உண்மையில் நண்பரே 78 வருட பழைய புனித அந்தோனியர் கோவில் பள்ளி முனையில் உண்டு அதுக்கும். இப் பிரச்சினைக்கும் தொடர்பில்லை அது எந்த வித சேதமுமின்றி இருக்கின்றது. கொழும்பில் வாழும் உங்களை பிழையாக வழி நடாத்தியுள்ளார்கள். நீங்களும் பிழையான அறிக்கைகளை ஆராயாமல் விட்டு விடுகின்றீர்கள்.)

17.10.03 வீரகேசரியில் மன்னார் பிரஜைகள் குழு அறிக்கையும், சுடர் ஒளி. தினக்குரல் நாளேடுகளில் தொடர்ச்சியான செய்திகளும் ஊசிமுக்கான்துறை என்ற இல்லாத ஒரு கிராமத்தையே உருவாக்கிவிட்டன. அதில் 78 வருடமாக வழிபட்ட ஒரு புனித அந்தோனியர் கற்பனைக் கோயிலையும் கட்டி விட்டன. எருக்கலம்பிட்டி ஊர் மக்கள் கடல் கடந்து வந்து அதை உடைத்தது ஒரு கொடூர செயலென்றும் உருவகித்து கற்பனை உருவேற்றி ஒரு பிரமையை ஏற்படுத்தி வருகின்றன.

இதனால் பல தென்பகுதி கத்தோலிக்க நண்பர்கள் ஆத்திரமடைந்துள்ளனர். ஆனால் உண்மை முற்றிலும் மாறுபட்டது. இந்நிலையில் உண்மை என்ன என்பதை விளக்கி எழுத விசயம் தெரிந்தவர்களும், தீர்மானம் நிறைவேற்றியவர்களும், அரச அதிபரின் கூட்டத்தில் தான்தோன்றித்தனமாக கையுயர்த்தியவர்களும், உண்மையைத் தொடர்ந்து மறுத்து வருகின்றார்கள். அதிலொன்றும் இதிலொன்றுமாகக் கூறி பித்தலாட்டம் செய்து வருகின்றார்கள்.

ஈத்தம்பழம், உலர் உணவு அரிசி என மாறி மாறி அறிக்கைவிடும் அரசியல்வாதிகள் இனஐக்கியத்திற்கான அறிக்கையை விடுகிறார்கள் இல்லை. சமாதான எதிர்ப்புக் கூட்டங்களில் குனிந்து நடந்தும், அரசாங்க கூட்டங்களில் நிமிர்ந்து நடந்தும் இவர்கள் மன்னார் சென்றதும் ஏன் முளங்காலில் மண்டியிட்டும் அரசியல் நடத்துகின்றார்கள்? இவர்களால் புத்தளத்தில் குடியேறிய எம்போன்ற அகதிகளுக்கும் மன்னாரில் மீளக்குடியேறிய முஸ்லிம்களுக்கும் இரு பக்கங்களிலும் ஆபத்து ஏற்படலாம் என எண்ணி இதன் உண்மை நிலை வெளிப்படுத்த முனைகிறேன்.

மன்னாரின் வடமேற்கில் தனித்துவமான முஸ்லிம் கிராமம் என உச்சரிக்கப்படும் போது அது எருக்கலம்பிட்டிதான் என்பதை ஈழ நாட்டின் பாலர்கள் கூட அறிவார்கள். வானூர்தியில் பறக்கும் போதும் வான வரை படங்களைப் பார்க்கும் போதும் எருக்கலம்பிட்டிக் கிராமத்தின் அமைப்பே ஒரு தனி அழகுதான். சுமார் 9 Km நீளமும் 1.5 Km அகலமும் கொண்ட ஒரு தீபகற்பமதுவாகும். பிரதான தலைமன்னார் - மன்னார் பாதையையும், எருக்கலம்பிட்டிக் கிராமத்தையும் இணைப்பது 5ம் கட்டையிலுள்ள ஒரு பாலமாகும். 9 பள்ளிவாசல்களில் அவ்வூர் மக்கள் 1990 வரை வழிபட்டவர்கள் எனும் போது அதன் தனித்துவத்தன்மையை யாரும் அறிய முடிகின்றது. இலங்கையிலேயே இரண்டாவது பெரிய முஸ்லிம் கிராமம் அதுவேயாகும்.

இக்கிராமம் 9 வட்டாரங்களாக உள்ளூராட்சிப் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இதன் மேற்கே வண்ணார குன்றும், (6ம் கட்டையும்) கிழக்கே ஊசிமுக்கான்துறையும் எல்லைகளாக உள்ளன. வடக்கே வட கடலும், தெற்கே குடாக்கடலும் இதன் மற்றய இரு எல்லைகளாகும். முஸ்லிம் தனித்துவம் பேணப்பட்ட இந்த எல்லையினுள் வண்ணார் குன்றிலிருந்து ஒரு சிலரைத் தவிர ஊரினுள்ளே மாற்று மதத்தவர்கள் நிரந்தரக் குடிகளாக


மன்னார் ஆலயத்தில் குண்டுவைக்கப்பட்டமை சமாதானத்தை குழப்பும் முயற்சியே

யாரும் இருக்கவில்லை. அண்மைக் காலப்பத்திரிகைகள் கூறுவது போல ஊசிமுக்கான் துறை எருக்கலம்பிட்டிக் கிராமத்தின் ஒரு எல்லை முனையே தவிர ஒரு ஊருமல்ல கிராமமுமல்ல குடியேற்றமும் அங்கில்லை. பள்ளிமுனைக் கிராமத்துடன் எந்த வித நிலத் தொடர்பையும் அது கொண்டிருக்கவில்லை. மன்னார்ப்பாலம் கலவரங்களில் உடைக்கப்பட்ட போது


Virakesari Friday 17th October 2003

17.10.2003

மன்னார் மக்கள் மத்தியில் ஏற்பட்ட மதமோதல் திட்டமிடப்பட்டதல்ல; ஆத்திரத்தில் ஏற்பட்ட அசம்பாவிதம்

- மன்னார் பிரஜைகள் குழு அறிக்கை

விடத்தல் தீவின் பெருநிலப்பரப்பிலிருந்து எருக்கலம்பிட்டி மக்கள் இயந்திரப்படகுகள் மூலம் ஊசிமுக்கான் துறையையே இறங்கு துறையாகப் பயன்படுத்தினர். புலிகளால் விரட்டப்பட்ட போது எருக்கலம்பிட்டியின் பலர் தென்கடலினூடாக கற்பிட்டியை அடைந்தனர். சிலர் ஊசிமுக்கான் துறையை ஏறுதுறையாகப்பாவித்து மடுக்கோயில் ஊடாக வவுனியா வந்தனர்.

வழக்கொழிந்து போன இலங்கை முக்குவர் சட்டப்படி கடற்பாடு என்ற ஆற்றுவா ஊசிமுக்கான் துறைக் கடற்பரப்புக் கூட பன்னெடுங்காலமாக எருக்கலம்பிட்டி மீனவர்களின் அதிகாரத்துக்கு உட்பட்டதாகவே இருந்து வருகின்றது. 'சூழ்மீன்பிடி" என நெருப்புப்பந்தம் கொழுத்தி மீன் வேட்டையாடும் எருக்கலம்பிட்டி மீனவர் வள்ளங்கள் மழை காலங்களில் ஊசிமுக்கான் கடலில் பவனி வந்ததை 1990 வரை யாரும் மறுக்க முடியாது.

எருக்கலம்பிட்டி ஊசிமுக்கான் துறை அரச காணிகள் ஊர் மக்களுக்கு பகிர்ந்தளிக்க எம் முன்னோர்களால் முயற்சிகள் எடுக்கப்பட்டிருந்தன. 1975ம் ஆண்டளவில் தாராபுர (தாரக்குண்டு) எருக்கலம்பிட்டி எல்லைகளை நிர்ணயிக்க கொழும்புக் காணிக் கொமிஸனரும், உயர் அதிகாரிகளும் உத்தியோகத்தர்களும் எருக்கலம்பிட்டிக்கு சமுகமளித்தனர். அப்போதெல்லாம் ஊசிமுக்கான் துறையில் மீனவர் குடியேற்றம் ஏற்படுத்துவதற்கு எமது முன்னைய பெரியோர்கள் விண்ணப்பித்தனர். அங்கு சில காணித்துண்டுகள் பேர்மிற் அடிப்படையில் பகிர்ந்தளிக்கப்பட்டு தற்போது தென்னந் தோட்டங்களாக மாறியுள்ளன.

அப்போதெல்லாம் ஊசிமுக்கான் துறைக்கு யாரும் உரிமை கோரவில்லை. அந்த நேரம் V.C. கட்டிடத்தில் நடந்த அக்கூட்டத்தில் பங்கேற்ற பலர் இன்னும் உயிர் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள்.

ஆனால் கடந்த மாதம் 'விடியும்வேளை" எனும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனத்தின் வானொலி நிகழ்ச்சியில் மன்னார் அரசாங்க அதிபர் கூறிய கருத்துக்கள் ஆச்சரியமானதாகவும் அவர் கூற்றின்படி அக்கூட்டத்தில் ஏகமனதாக பல பிரமுகர்கள் எடுத்த முடிவுகள் உண்மைக்கு மாறானதாகவும் அமைந்திருந்ததைக் கேட்டு எருக்கலம்பிட்டி முஸ்லிம்கள் பலர் ஆச்சரியப்படுகின்றனர்.

அரசாங்க அதிபரின் கூற்றுப்படி அமைச்சரும் 'அவரது உறவினரும்' M.O.I முஸ்லிம் பிரமுகர் (அவரின் மருமகள்) சட்டத்தரணி ஆகியோர் இந்த ஊசிமுக்கான் துறைக்குச் சென்றதாகவும் அங்கே 25 வருடப் பழைய கோவில் இருந்ததைக் கண்டதாகவும் அதை முஸ்லிம் இளைஞர்கள் உடைத்தது பிழையெனவும் அதற்காக அமைச்சுப்பணத்தில் G.A. இன் மேற்பார்வையில் அது சட்டபூர்வமாகக் கட்டிக் கொடுக்கப்படுமெனவும் ஒரு ஏகமனதான தீர்மானத்திற்கு முஸ்லிம் பிரமுகர்கள் என்று சொல்வோர் சிலர் அமைச்சர் தலைமையில் கையுயர்த்தி இருக்கின்றார்கள்.

இதன் மர்மம் என்ன? என்பது விளங்காத புதிராகவே உள்ளது. புத்தளத்தில் பள்ளிவாசல் எருக்கலம்பிட்டியில் அந்தோனியர் கோயில் கட்டுவது என்பன ஒரு அரசியல் சூதாட்டமா? அல்லது பள்ளிமுனை மக்களின் வாக்குகளுக்காக முஸ்லிம் நிலத்தை தாரைவார்க்கும் எண்ணமா? அல்லது கோயிலைக்கட்டி தரைவழிப்பாதையை ஏற்படுத்தி விட்டு மீளக்குடியேறிய எருக்கலம்பிட்டி மக்களை புத்தளத்திற்கு மீண்டும் அகதியாக்கும் திட்டமா?

எல்லாம் குழப்பமாகவே உள்ளன. இதில் இன்னும் ஆச்சர்யம் என்னவெனில் புதிதாகக் கட்டிய சுவரை உடைக்க ஊக்கமும். உசாரும் அளித்தவர்களும் அதைக் கட்டிக் கொடுக்க தீர்மானம் எடுத்தவர்களும் ஒரு சிலரே. மீனுக்குத் தலை. பாம்புக்குவால் ஓணானுக்கு உடம்பு எப்படி இருக்கிறது கதை. அரசியல்வாதிகளின் சதுரங்க விளையாட்டில் அடிபட்ட இளைஞர்கள் ஆஸ்பத்திரியில். அந்தோனியர் கோவில் திறப்பு விழாவில் அரசியல்வாதி அதிதியாம்.

எருக்கலம்பிட்டி வாழ் புத்திஜீவிகளே. பெரியோர்களே வயோதிபர்களே உண்மையைக் கூற மாட்டீர்களா? அரசியல் சுயநலத்திற்காக் எதையும் செய்யலாமா? இது அரசியல் முதிர்ச்சியின்மையென்றால் நீங்கள் ஆலோசனை கூறக்கூடாதா?

இந்நிலையில் பத்திரிகைகள். தர்மத்திற்கு மதிப்பளிக்க வேண்டும் சரித்திரத்தை மாற்ற துணை போகக் கூடாது. 25 வருடமென்றும் 78 வருடமென்றும், பள்ளிமுனை அந்தோனியர் கோயிலை முஸ்லிம்கள் உடைத்தது சதியென்றும் கூறும் பத்திரிகைகளும். அதற்கு அனுசரணை வழங்கும் அரசியல்வாதிகளும் மக்களைப் பிழையாக நடத்தக் கூடாது. உண்மையான சரித்திரத்தின் சில பக்கங்களை கிழித்து வேறு பக்கங்களை ஒட்டி அரசியல்வாதிகள் அள்ளிவீசும் பணத்திற்கு எழுத்தாளர்கள் இரையாகக் கூடாது.

எருக்கலம்பிட்டி சரித்திரம் சரியாக எழுதப்படவேண்டும். இன ஐக்கியம் பாதுகாக்கப்படவேண்டும். மீண்டும் எங்களை நீங்கள் அகதிகளாக மாற்ற அரசியல் வாக்குறுதிகளுக்கும். அவர் வீசும் பணத்திற்கும் விலைபோகக் கூடாது. சுயநலத்திற்காகவும். சுயவிளம்பரத்திற்காகவும் நீங்கள் பசுத்தோல் போர்த்த வேண்டாம். சமுதாயம் உங்களை நிச்சயம் மன்னிக்காது. அரசு அன்று கொல்லும் இறைவன் நின்று கொல்வான்.

## தூரத்தே ஒலிக்கும் பாடல்

போராயுதங்கள்
சுமந்த காலங்களில்
எமக்கான உரிமைகள் சில
இருப்பதாயும் பட்டது

இப்போது
பேச்சு மேடைகளில்
எம் அமர்வுகளெல்லாம்
கணக்கிட மறந்த புள்ளிகளாயும்
காட்சிப் பொருட்களாயும் போனது

யுத்தம்போல்
நீண்டு செல்லும் பேச்சுவார்த்தை
முடிவதற்கிடையில்
எங்களின் ஒவ்வொரு உயிரும்
கொலையுண்டு
தீர்வதாயிடும் வாழ்வு

காலகாலமாய்
தொலைந்து போன வாழ்வு
மீள்வதாயுமில்லை
அழுகையை விட்டும்

எல்லாமே முடிந்து
போரீட்டித்தந்த பொக்கிஷங்களாய்
மரணத்துள் வாழ்வோர்
மீஸான் கட்டைகளில் மீள எழும்
பாடல்கள்
மீதமாய்

அஜ்வத் சிஹாப்தீன்
ஜாமிஆ நளீமிய்யா

## நரகவாதிகளாக......

அநியாயங்களுக்கு
அனுசரணை வழங்கும்
அரசியல் வாதிகளை
நான் இங்கே காணுகின்றேன்
நரக வாதிகளாய்!

வெலிமடை ஜஹாங்கிர்

## நிலவு பெண்டாட்டி

இரவு,
காற்சட்டை அணிந்து,
சப்பாத்து போட்டு
கடற்கரை மண்ணில்
'கச்சான்' கொட்டை
கொறித்து

நானும்,
காற்றோடு,
நிலவு பெண்டாட்டியின்
வருகைக்காக காத்திருந்தேன்.

கடல் அலைகளோடு,
நண்டுகளும், ஊரிகளும்
அடித்துப் பிடித்து
விளையாடின, என்,
பக்கமெல்லாம்!

இரவின்,
வாய் முழக்க சிரிப்பு
கொடுப்புக்குள்,
வெற்றிலை துவையல்

என்,
நிலவு வந்ததாக இல்லை!

ஊறாச் சொத்தை வானம்
ஒன்றும் கூட பேசவில்லை
இருண்டுதான் கிடந்தது.

கரு மேகம்
வாடி வீட்டு மூலைப் பக்கமாய்
வழமை போல்
வருவதும் போவதுமாய்!

அந்த வெள்ளை மணல்
தோட்டுப் பாய் போல் இருந்தது
ஒரு முறை,
உருண்டு, புரண்டு படுத்தேன!

வானத்து, நட்சத்திரங்கள்,
எலிப் பீயாய் விழுந்தது
என் தலையெல்லாம்!

கன நேரமாகியும்,
என்,
நிலவு பெண்டாட்டிதான்,
வரவேயில்லை!

முகமட் அபார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அச்சாறு

எழுதுவது: லைலா அஷ்ராவி

## "மூன்றாந்தரப்பு" அவதானம்!

திருமலை மாவட்ட பிரதான முஸ்லிம் கிராமங்களான மூதூர், கிண்ணியா பிரதேசங்கள் தேசிய, சர்வதேசிய அளவில் ஊடக அவதானத்தைப் பெற்று வருவது நாம் அறிந்ததே. புரிந்துணர்வு உடன்படிக்கை, யுத்தநிறுத்தம் போன்றவற்றின் முறிவுகளுக்கு இட்டுச் செல்லத்தக்கதான பிரச்சினைகள் இங்கு நடப்பதாகவும், இருப்பதாகவும் பிரச்சாரப்படுத்தப்பட்டும் வருகிறது. உண்மையிலேயே, புரிந்துணர்வின் பின்னான இரண்டு வருடத்தையும் எட்டுகிற நாட்களில் என்றுமில்லாதவாறான மீறல்களை, முஸ்லிம்கள் மீதான தாக்குதலை இப்பிரதேசங்கள் கண்டு வந்திருக்கின்றன, வருகின்றன, என்பது மனச்சாட்சியுள்ளவர்கள் அறிந்த உண்மை.

தமிழர் ஊடகங்களின் தொடர்ந் தேர்ச்சையானதும், MOU க்குப் பின்னாலான புலிச்சார்பாகவும் எழுந்த முஸ்லிம் விடயங்கள் தொடர்பான புறக்கணிப்புக்கள் எம்மை இம்முறை நன்றாகவே விழிக்கச் செய்திருக்கின்றன. விளைவுகளை நாம் முஸ்லிம் குரலாக, உடனுக்குடனான உண்மை அறிக்கைகளாக வெளியீடுகளாகக் கண்டு வருகிறோம். எம் அவதானம், செயற்பாடுகள் ஒரு முக்கிய கட்டத்துக்கு வந்த வண்ணமிருக்கின்றன. அவை விரவேற்புக்குரியது.

இங்கு சொல்ல வேண்டிய இன்னொரு விடயமும் உள்ளது. அது, தமிழ்ப் புலமையாளர்களின், புத்திஜீவிகளின் பெரும் மௌனம். தமிழ் ஊடகங்கள் தமிழர் ஊடகங்களாக மருவியது ஒன்றும் ஆச்சரியமானது அல்ல... ஆனால் இந்த புத்திஜீவிகளின் மௌனமும் போக்கும் எனக்கு பெரும் ஆச்சரியத்தைத் தருகிறது. அதுவும் ஒட்டு மொத்தமான அவர்களின் மௌனம்! உக்கிரமான போர்க்காலங்களில் எமக்கெதிரான நிகழ்வுகளின்போது எழுந்த குரல்கள், உருவாகிய கவிஞர்கள் இப்போது எங்கே என்று கேட்டால், தெரிந்தவர்கள் ஆச்சரியமான பதில்களைத் தந்து கொண்டிருக்கிறார்கள். இப்படியானவர்களுக்கு அப்படியானவர்களில் ஒருவரின் இக் கவிதை வரிகள் சமர்ப்பணம்!

'தமிழன் என்னும்....
என் அடையாளக் கூறின் மேல்
வெட்கம்
இருள் விரவிப் படிகிறது....."

எங்கேயோ தொடங்கி எங்கேயோ போய்விட்டேன். மீண்டும் முதற் பந்தியுடன் தொடர்பு படுத்த வேண்டியுள்ளது.

கிண்ணியா,மூதூர் நிகழ்வுகளில் புலிகளும், தமிழர் ஊடகங்களும் வேறு சிலரும் சொல்லிக் கொண்டிருந்த விடயம் இவை சமாதானத்தை விரும்பாத "மூன்றாந்தரப்பால்" மேற்கொள்ளப்படுகிற நடவடிக்கைகள் என்பது. இந்த விடயத்தில் முன்னாள் பொலிஸ்மா அதிபர் ஆனந்தராஜாவும் புலிகளுக்கு விசுவாசமாக நடந்து கொண்டார். (அவரின் BBC பேட்டியை நினைவு படுத்திக் கொள்க!)

இப்போது இந்த விடயத்தில் ஆச்சரியத்தக்கமான முடிவு. அதாவது இந்த 'மூன்றாந்தரப்பு" யாரென்பதை ஒரு தமிழ் நாளிதழே, புலிகளின் உதவியுடன் இனங்கண்டு கூறியுள்ளது. ஒரு வரலாற்றுப் பதிவிற்காய் அச் செய்தி இதோ........

'இரு மாட்டு வண்டில்களும் உரியவர்களிடம் ஒப்படைப்பு"
எஸ்.என்.ஆர். பிள்ளை.

திருகோணமலை பாலம்பட்டாறு என்னுமிடத்தில் வைத்து கடந்த 22 ஆம் திகதி தடுத்து வைக்கப்பட்டிருந்த இரண்டு மாட்டு வண்டில்களும் உரிமையாளர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. ஆயுதக்குழுவொன்று இந்த வண்டில்களை தடுத்து வைத்திருந்தது.

புலிகள் இயக்கத்தின் திருமலை மாவட்ட அரசியல் பொறுப்பாளர் திலக் தலையிட்டு மாட்டு வண்டில்களை உரிமையாளர்களிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுத்தார் என கண்காணிப்புக்குழு நேற்று முன்தினம் மாலை தெரிவித்தது.

மேற்படி மாட்டு வண்டில்களை தடுத்து வைத்து பணம் கோரியதால் கிண்ணியாவில் முஸ்லிம் மக்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினார்கள் அங்கு பதற்ற நிலையும் ஏற்பட்டது.

மாட்டுவண்டில்களை தடுத்து வைத்து பணம் கோரியவர்கள் எந்தவொரு இயக்கத்தையும் சேராத ஆயுதக் குழுவென அடையாளம் காணப்பட்டுள்ளது. 'ரஞ்சன்" என்ற பெயரைக் கொண்ட இளைஞரே இந்தக் காரியத்திற்கு தலைமை தாங்கியுள்ளார். இவர் இப்பொழுது பொலிஸாரினால் தேடப்பட்டு வருகிறார்.

உண்மை எப்போதாவது வெளிவரும் என்பதற்கு இது ஓர் உதாரணம். இதுபோக சுடரொளி நிருபர் எஸ்.எஸ்.ஆர். இந்த மாட்டுவண்டில் சம்பவத்தை நடக்காத ஒன்று என்று எழுதியது. இனவாத உச்சம்! இன்னொரு ஆச்சரியம் என்னவென்றால், மேற்குறித்த செய்தி வந்த அதேவீரகேசரியின் 16ம் திகதிய வார இதழில் மீண்டும் ஒருவர் இதே சம்பவத்தை கற்பனையானது எனக்கூற முயன்றுள்ளார்.

எதிர்ப்பு ஊடகங்களை அவதானித்துக் கொண்டிருப்பதும், எம் ஊடகங்கள் வளர்வதற்கான, அவற்றை வளர்ப்பதற்கான உந்துதலை எமக்குத் தந்து கொண்டிருக்கும்.

* * *

அடிக்கடி தமிழர் தரப்பு வன்முறைகளுக்குள்ளாகிற அந்த ஊரிலிருந்துதான் இந்தக் 'கண்ணீரக் காவியமும்" ஏப்ரல் வன்செயல்களுக்குப் பின்னால், பாதிக்கப்பட்டவர்களுக்கான குறிப்பாக வீடிழந்தவர்களுக்கான உதவியை சவூதிக் குடியுரிமை பெற்ற இலங்கையர் ஒருவர் இனமத பேதமின்றிச் செய்து கொடுத்தார். (இவருக்கான நன்றியை எப்படி அந்த ஊரும், மக்களும் வெளிப்படுத்தினார்கள் என்பது தெரியாது!?) இதனால் அரசு வழங்கிய நஷ்ட ஈட்டுப் பணம் எல்லோரிடத்திலும் மேலதிகமான வருவாயாய் இருந்ததாம். இது வழங்கப்படமுன்னர், பாதிக்கப்பட்ட மிக ஏழ்மையான ஒருவரிடம் இன்னொருவர் கேட்டாராம்... இந்தப் பணம் கிடைத்தால் என்ன செய்வீர்கள் என்று.. அதற்கு அவர் 'என் பிள்ளைகளுக்கு 5 கிலோ கேக்கும் 5 கிலோ வாழைப்பழமும் வாங்கிக் கொடுத்து ஆசை தீரத் தின்னுங்கள்" என்பேன் என்றாராம். வாழைப்பழமும், கேக்கும் பிள்ளைகளுக்கு கொடுக்கிறதே ஒரு போராட்டமாக இருக்கிற இவர் போன்றவர்களின் வாழ்க்கை தொடர்ந்தேர்ச்சையாக எதேச்சதிகார வன்முறைகளை எவ்வாறு தாங்கிக் கொள்ளப்போகிறது!?

இந்தக் கதையைக் கேட்டவர்களின் கண்களிலெல்லாம் கண்ணீர் கசிந்ததாம், எனதிலும்தான்.

# நாம் எங்கே போகிறோம்?...

- தேச புத்திரன் -



இருபதாண்டுகள் இரத்த நீராடினாய்
இரக்கமற்றவர்களால் தினம்தினம்
இழிநிலையடைந்தாய் தினம்பிணமாய்...
இறைவழிபடும் பொழுதினிலும்...
இராப்பொழுதினில் நித்திரைநேரத்திலும்...
இன்னும் நீரிலும் நிலத்திலும்...
வயல்வெளியிலும் வாவியிலும் மேலும்...
வயிற்றுப் பிழைப்பிற்கு போகும் வழியிலும்
வண்டில் பாதையிலும்...
காட்டிலும் கல்மேட்டிலும்... பிணமாகி...
செந்நீர்சிந்தி பின்பு செந்தணலாகி...
செகமெங்கும் செவிகளில் பாய...
நாமொரு தேசமென்று முழங்கி...
நமதுதேசம் முஸ்லிம்தேசமென்று...
பிரகடனம்செய்த பிள்ளைகளே!...
நாம் எங்கு போகின்றோம் என்பதை...
நாமறியாமலிருப்பது பெரும் நாசமே!...

புத்தக கல்விகள் பல நீ சுமந்தாய்...
புத்திமானென்று பட்டங்கள் சுமந்தாய்
சுத்தி நடக்கும் சதிகள் அறிந்தாய்...
வித்தகன்நானென்று வீம்பியெழுந்தாய்...
கற்றகல்வி சமூகத்தை காக்காதென்றால்
கரியாகட்டுமிந்த காகிதப்பட்டங்களென்று
சுட்டெரித்திடும் சூரியனாக கொதித்து...
சூழ்நிலையுணர்ந்து சுற்றமும் எழுந்தாய்
சூழ்ச்சிகள் செய்யும் பேரினவாதமே!...
சூழ்ந்தெழுந்திட்டோம் பாரீர் என்று...
சூல்கொண்ட சூறாவளியாக நீயெழுந்து,
நாமொரு தேசிய இனம்!...
நமது தாயகம் முஸ்லிம் தேசமென்றாய்.
உணர்ச்சிகள் பொங்கும் தேச எழுச்சியில்
உன்னுடன் நானும் கரம்கோர்த்தேனன்று..
வீராப்புடனெழுந்தது விம்பிய தேசம்
அன்று
வளர்ச்சியல்ல வீக்கமென்றானது இன்று...

ஓ!... முஸ்லிம் தேசத்து மலர்களே!...
வெஞ்சினங்கொண்டு
வெகுண்டெழுந்த வேந்தர்களே!...
ஏமாற்றப் பாதையிலே
வெகுதொலைவுக்கு நாம்...
ஏற்றிவரப்பட்ட மாக்களானோம் நாம்...
இதோ ஆதிக்கசக்திகள் அனைத்தும்
ஆர்ப்பரிப்புகளுடன் அணிதிரண்டு
விட்டன
சுயநலக்காற கல்விமான்களின்
சுயரூபங்கள் விளங்கத் தொடங்கிவிட்டன
அரசியல்வாதிகளை மிஞ்சிடுமளவுக்கு...
அரியணைத்தாகமிந்த அறிவுஜீவிகளுக்கு
சீஐஏகளின் பண பதவிகளுக்காக...
சீரழித்திடயெழுந்திட்டார்கள் தேசியத்தை

அரசியல் உரிமைகள் மறுக்கப்பட்டுள்ளது
அரங்கத்தில் ஒரு தரப்பாக பேசும் உரிமை
அடுக்கடுக்காகக் கெஞ்சியும்
கடுகடுப்பாய் மறுக்கப்பட்டுள்ளது...
ஒரு பலஸ்தீனை பரிசளித்தவர்களிப்போ
ஆப்கானையும் ஈராக்கையும் போல...
காப்போமுங்களை காக்காமார்களே...
என்றிப்போ சர்வதேச அனுமதியுடன்...
சர்வாதிகாரம் பண்ணுகிறார்கள்...

நோர்வேயின் பணத்திற்கு...
நாய்வாலாட்டும் ஒற்றர்படைகள்...
அனுதாபிகள் போலிங்கு நம்தேசத்தை...
பேரினபிடிகளில் அடகுவைக்கின்றார்கள்
கோஷமிடும் அரசியல் தலைமைகள்...
நோர்வேயின் நேசசக்திகளால்
தனித்துவம் தணிந்து...
தலைகால் புரியாமல் தவிக்கின்றார்கள்
சாணக்கியமாக நகரவேண்டிய நம்...
சாணக்கிய தலைமைகளெல்லாம்...
சல்லிகளால்... நம்தேசியத்தை சிதைத்து
சந்திசிரிக்க முழிக்கின்றனர்...

அணைத்திடும் நேசசக்திகளை ஒருகணம்
அறிவுடன் நோக்கிடல் வேண்டாமா?...
அணிதிரண்ட சர்வதேச யுக்திகளை...
அலசிடல் வேண்டாமா? ஒரு கணம்!...
அடித்து அடித்து துடிதுடிக்க வைத்து...

அறுத்து அறுத்து கருவறுத்து...
நிலம்மறுத்து இருப்பறுத்து...
உயிர் உடமை தொடர்ந்து அழித்து
உரிமைகள் மறுத்து...
நாமொரு தேசியயினமில்லை என்று...
நாளொருமேனியும் தொடர்ந்து மறுத்து...
நரகினை நமக்கு தந்த...
நரிக்கரங்கள் இப்போ...
அன்பால் அணைக்கத்துடிப்பது எதனால்?...
பண்பால் பழகத்துடிப்பது எதனால்?...
நம்... அரசியல் பக்கவாத நோயை...
பயன்படுத்தி முடக்கி அழிக்கவா?...
இல்லை?...
அன்பர்களே!... நீங்கள்!...
அறிவுடன் சிந்தித்தால் பிழையோ?...

ஓ!... முஸ்லிம் தேசத்து இளவல்களே!...
இறுகிய நெஞ்சங்களுக்குள்...
உணர்வுகள் முழுங்கி நீங்கள்...
இருதய நோயாளிகளாக வேண்டாம்!...
இன்னுமின்னும் வேடிக்கைபார்த்து...
இழிநிலையடைய வேண்டாம்!...
இன்னும் நம்தேச மக்களிடம்...
தேசியம் வந்து சேரவில்லை...
தனித்துவ தலைமைகளும்...
சுய இலாபத்தை கருதி...
தம்பங்கை செய்யவில்லை...

இன்னும் பெட்டிப் பாம்புகளாயிருந்தால்...
சவப்பெட்டிகள் தேவைப்படும்... முதலில்...
உனக்கும்!... உன்தேசத்திற்கும்!...
உன் தேசியத்திற்கும்!... மறந்திடாதே!...
மக்கள் எழுச்சிகள் இன்னுமின்னும்...
மௌனித்திருந்தால்... தேசமெங்கும்...
மௌத்துகள் தொடரும்... மறந்திடாதே!...
வேடிக்கை பார்க்கும் வீணர்களாய்...
வீதிகளில் இன்னும் வீற்றிருந்தால்...
வெட்கித்தலை குனிவாய் ஒரு நாளில்...
வெம்பி நடிப்பாய் அன்னாளில் மறவாதே!

வெளியே வரட்டும் மக்கள் சக்திகள்!...
ஒளிதரட்டும் ஒன்றிணைந்த யுக்திகள்!...
அணிதிரளட்டும் அரசியல் சக்திகள்!...
அடிமைப்பிணியை விரட்டட்டும் இனி...
அணிதிரண்ட மக்கள் புத்திகள்!...
கிலிகொண்டோடும் போக்குகள்...
இனியெமக்கு வேண்டாம்!... உணர்வு
உளி கொண்டு செதுக்க எழுங்கள்!
உதிர்த்தெழ தொடங்கும்...
நம் முஸ்லிம் தேசத்தை!...
நாம் எங்கு போகின்றோம் என்பதை...
நாமறியாமலிருப்பது பெரும் நாசமே!...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாமும் நமது தலைமைகளும்

ஆட்சியில் பங்காளிகளாக இருந்தும் எமக்கேற்பட்டிருக்கும் இப்புறக் கணிப்பு மிகவும் ஆபத்தானது சந்ததி சந்ததியாக எம்மை அடிமைகளாக்கி நாடோடிகளாக அலையவிடக் கூடியது. இது தெரிந்தும் நமது தலைவர்கள் என்று சொல்லிக் கொள்பவர்களும், அவர்களது உணர்ச்சி பொங்கும் (சவால்) பேச்சுக்களைக் கேட்டு நாரேதக்பீர் சொல்லும் பொதுமக்களாகிய நாமும் தொடர்ந்தும் மௌனமாக இருக்கின்றோம்.

பேசவேண்டிய நேரத்தில் மௌனமாக இருப்போமேயானால் பின்பு அகப்பட்டுக் கொண்டு கசக்கிப் பிளியப்படும்போது வாய்விட்டு அழும் உரிமை கூட இல்லாதவர்களாக மாறிவிடுவோம். கண்ணீரை மட்டும் சிந்திக் கொண்டு கைசேதமே என மனதுள் வெந்து சாகவேண்டியதுதான் எனவே,

✔ எமது தலைக்குமேலே சதிகாரர்களால் தூக்குக்கயிறு தொங்க விடப்பட்டுள்ளது என்பதை அறிகிறோமா?

✔ நமது தலைமைகளின் தான்தோன்றித்தனத்தை உணர்கிறோமா?

✔ நமது கட்சி விடுதலையை நோக்கி செலுத்தப்படுகின்றதா என்பதை அவதானிக்கின்றோமா?

✔ இவை அனைத்தையும் அறிந்து கொண்ட பின்பும் தொடர்ந்தும் மௌனவிரதம் அனுஷ்டிக்கப்போகிறோமா? அல்லது ஆட்சியில் பங்காளிகள் எனப் பெருமை பேசிப் பேசி தினந்தினம் உயிரிழந்து, உடமையிழந்து, நிலமிழந்து, உரிமையிழந்து படிப்படியே அழிவோமா?

*"அழுத பிள்ளைதான் பால் குடிக்கும்!"*

# மாகாண சபைத் தேர்தல்

வசதிமிக்க கம்பஹா மாவட்டத்தில் முஸ்லிம்களின் கல்வி மற்றும் ஏனைய வசதிகள் மிகவும் மோசமான நிலையை அடைந்துள்ளது. சந்தர்ப்பவாத அரசியல் தகுதியில்லா தலைமைத்துவம் காரணமாக எந்தவித அபிவிருத்தியையும் காணக்கூடியதாக இல்லை.

கம்பஹா மாவட்டத்தை முக்கியமாகக்கொண்டு எனது கருத்துக்களை எழுதியுள்ளேன். உங்கள் பத்திரிகையின் மூலமாவது எமக்குள் முடங்கிக் கிடக்கும் சிற்சில விடயங்களையாவது வெளிப்படுத்த சந்தர்ப்பம் அளிப்பதையிட்டு மகிழ்ச்சி அடைகிறேன். நான் இத்துடன் இணைத்து அனுப்பியுள்ள கருத்துக்களை முஸ்லிம் குரலில் பிரசுரிக்குமாறு வேண்டுகின்றேன்.

எதிர்வரும் மாகாணசபைத் தேர்தலில் முஸ்லிம் காங்கிரஸ் தனித்து போட்டியிடுவதா? வேறு கட்சிகளுடன் இணைந்து போட்டியிடுவதா? எது இன்றைய காலகட்டத்துக்கு ஏற்றது என்ற விடயம் பலரையும் சிந்திக்க வைத்துள்ளது. மாகாண சபையைவிட பாராளுமன்றத் தேர்தலைத்தான் முக்கியமாகக் கொள்ள வேண்டும். இன்று முஸ்லிம் காங்கிரஸின் முக்கியஸ்தர்கள் என்று பேசக்கூடிய அமைச்சர்கள், பாராளுமன்ற அங்கத்தவர்கள் மற்றும் முக்கிய புள்ளிகள் பல பிரிவுகளாக பிரிந்து ஒருவருக்கொருவர் ஒவ்வொரு குற்றச்சாட்டுக்களை சுமத்திக் கொண்டிருப்பதைக் காணக்கூடியதாக இருக்கின்றது. சிலர் இன்று பிரிந்து செல்கின்றனர், பதவிகளிலிருந்து தூக்கியெறியப்படுகின்றனர். நாளை மீண்டும் ஒன்று சேருகின்றனர். பதவிகளையும் பெற்றுக் கொள்கின்றனர். பதவி, பட்டங்களை மட்டும் பாராது சமூகத்தையும் இஸ்லாத்தையும் கருத்திற்கொண்டு செயல்படுவதன் மூலம் இவ்வுலக வாழ்க்கையிலும் மறுமையிலும் இறைவனின் அன்பைப்பெறலாம்.

தற்போதுள்ள நிலையில் இந்நாட்டில் வாழும் மக்களும் கட்சிகளும் குழப்பமான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன. யாரை நம்புவது? யார் சொல்வது சரி? எந்த முடிவை எடுப்பது என்று திக்குத் தெரியாத நிலையில் உள்ளனர். எதிர்வரும் மாகாண சபைத்தேர்தலை ஓர் உரைகல்லாக எடுத்துக்கொள்வது முஸ்லிம் காங்கிரசுக்கு ஒரு சந்தர்ப்பமாக அமையும். குறுகிய இலாபம் கருதி எடுக்கும் முடிவுகள் கட்சியை எந்த நிலைக்கு எடுத்துச் செல்லும் என்பதைச் சிந்தித்தல் அவசியம். முஸ்லிம் காங்கிரசைப் பொறுத்தமட்டில் இந்த நாட்டு முஸ்லிம்கள் எந்த நிலையில் உள்ளனர். மு.கா. வின் செல்வாக்கு என்ன நிலையில் உள்ளது நாம் எடுத்துள்ள முடிவுகள் மக்களிடம் எந்த அளவுக்கு சென்றுள்ளது என்பதை மாகாண சபைத் தேர்தல் முடிவுகள் எடுத்துச் சொல்லும். எல்லா மாவட்டங்களிலும் தனித்து போட்டியிடுவதன் மூலம் தங்களது உண்மை நிலையை அறிந்து கொள்ளவும் முடியும். இதற்கு ஏற்றவாறு அரசியல் வியூகத்தை அமைத்துக்கொள்ள முடியும். சேர்ந்து போட்டியிடுவதால் கட்சியின் செல்வாக்கை அறிந்து கொள்ள கடினமாக இருக்கும்.

தனியொருவர் இணைந்த கட்சியில் போட்டியிடும்போது மாவட்ட ரீதியில் மிகச் சிரமமாக இருக்கும். தனிக்கட்சியாக ஒரு பட்டியலில் போட்டியிடுவதன்மூலம் கூடுதலான வேட்பாளர்களைக் கொண்டு கூடிய வாக்குகளையும் பெற்று மக்களுக்குத் தேவையான ஒருவரைத் தேர்ந்தெடுக்க வாய்ப்பும் ஏற்படுகின்றது. கம்பஹா மாவட்டத்தைப் பொறுத்தமட்டில் ஒவ்வொரு தேர்தலுக்கும் ஒவ்வொரு கட்சியும் பிற மாவட்டங்களிலிருந்து வேட்பாளர்களை இறக்குமதி செய்வதைக் காணக்கூடியதாக இருக்கின்றது. சுதந்திரக்கட்சி கண்டியிலிருந்து ரவுப் ஹாஜியையும் மு.கா. வும் ஐ.தே.க. வும் சுபைர்தீன், அப்துல் றகூலையும் இறக்குமதி செய்து வேட்பாளர்களாக நிறுத்தியது. தேர்தல் முடிந்ததும் இவர்களில் எவரையும் காணவில்லை. எமது குறைகள் தீர்க்கப்படாவிட்டாலும் போட்டியிட்டவர்களின் குறைகள் தீர்கப்பட்டன. அரசாங்கத்திலும் கூட்டுத்தாபனங்களிலும் கொழுத்த சம்பளத்தில் பதவிகளைப் பெற்றுக் கொண்டனர்.

முக்கிய கட்சிகளான ஐ.தே.க., சு.க., மு.கா., இனிமேல் நடைபெறும் தேர்தல்களில் இம்மாவட்டத்தைச் சேர்ந்த வேட்பாளர்களையே நியமிக்க வேண்டும். கம்பஹா மாவட்டத்தின் பிரச்சினைகளை இங்கு வாழக்கூடியவர்களே அறிவார்கள். எனவே இனிமேல் வேட்பாளர்கள் நியமனத்தில் அந்தந்த மாவட்டங்களில் உள்ளவர்களுக்கே வாய்ப்புக்களை வழங்க வேண்டும்.

எச்.எம். கவுஸ்மொகிதீன்
திஹாரி

முக்கிய கட்சிகள் தகுந்த வேட்பாளர்களை நியமனம் செய்யாவிடின் ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள முஸ்லிம்கள் ஒன்று கூடி சரியான முடிவு எடுக்க முயற்சி செய்ய வேண்டும். நமது கருத்துக்களுக்கு இடமளிக்காமல் சர்வதிகாரப் போக்கில் கட்சிகள் நடந்து கொண்டால் மாவட்டத்தில் உள்ள இயக்கங்கள், பள்ளிவாயில்கள், புத்தி ஜீவிகள், வியாபாரிகள், வாலிபர்கள் ஒன்று சேர்ந்து தத்தமது மாவட்டத்துக்குத் தேவையான வகையில் படித்த, பண்புள்ள, சேவை மனப்பாங்குள்ளவர்களைத் தேடி இவர்களை ஒரு குழுவாக அமைத்து தேர்தலில் போட்டியிடவைத்து வெற்றிபெறச் செய்ய வேண்டும். இப்படிச் செய்வது கட்சிகளுக்கு ஒரு பாடமாகவும் அமையும். ●

---

குறுநாவல்

-என்.ஏ.தீரன்-

# பள்ளிமுனைக் கிராமத்தின் கதை 16

## அத்தியாயம் 7

'ஆரு நீயா? டெ, கொறுக்கா! நீ ஒரு மனிசனாடா? கொளும்புக்கு கூட்டி வந்த இதுக்குத்தானாடா... ஊருக்கு வா! கட்றன் மருந்து! ஓவ்!!

'மாமி! என்னது? ஏன் ஏசுறாய், சப்புட அறாமி என்னையும் யாஸீ...."

'வாயப் பொத்துரா அறாமி! நீயாண்டா அறாமி!"

ஏ... ஆச்சி? கவ்த கோ... கோ.... சுல்தான்?"

'ம்மா... மைம்னா லாத்தா எங்கஹா!"

'போய்ட்டாள்ளா ராசா... ஒப்பாரி வெச்சிட்டுப்



போறாள்ளா...."

'ஏய்.. ஆச்சி.... கோ... ஜுல்தான்?"

களேபர நிலையை சற்றும் எதிர்பாராத சப்புச் சுல்தான் படியேறி உல்லாசமாக வந்து கொண்டிருந்தான்.

'ந்தா வாறான் சேர்! வேந் தான் சுலுத்தான்! டேய், மாளிர மஹன! நாய... ஆரடா ஏமாத்தின நீ..."

முத்து முகம்மது ஆத்திரமாய் ஓடி சப்புச் சுல்தான் மீது விழுந்து நெஞ்சில் இடித்தான். சுல்தான் சுதாகரிப்பதற்குள் மறுபடி மறுபடி பளீரென அடித்தான்.

பொலிஸ் காரன் இடையில் புகுந்து முத்து முகம்மதை இழுத்து எறிந்துவிட்டு, சுல்தானின் வயிற்றில் முழங்காலால் இடித்தான். சுல்தான், 'ஹ...ஹ்க்" கென்று காற்றடைத்து சுருண்டு விழுந்தான். பொலிஸ்காரன் மறுபடி முதுகில் படீரென அறைந்தான்.

'என்டம்மோவ்... அல்லோ... கஹன்ட எப்பா மாத்தயா....."

சுல்தானின் கதறலில் மாமி ஆவேசமாகி இடையில் புகுந்து சுல்தானை மல்லுக்கட்டி விடுவித்தாள்.

'அடியாத! அடியாத!! சொல்றத்தக் கேளும்பி...!"

'டேய், முத்தும்மது பொலிஸ கூட்டிக்கந்து அடிக்கியா... நீ.."

'அடொ! கோ மெயகே பொம்புள....?"

'கொறுக்கா...! மாளிர..."

'பொறு! பொறு! ஸ்டொப்! நவத்தண்ட எக்கோம்!"

இணைப்பதிகாரியின் பெருங்குரலில், திடீர் அமைதி ஏற்பட்டது.

'........"

'யாஸின், நீ வாடா மகனே.... உள்ளுக்க போடா!"

யாஸீன் மிரண்டு போய் தாய்க்குள் புதைய, இணைப்பதிகாரிக்கு நேரம் அவசரப்படுத்தியது.

'போடா வட்டு பூனா மானா! என்ட மசிரயும் ஒன்னால அசைக்க ஏலா... உன்ன இல்லத் தாக்குவன்!"

'.........."

'யமுத? றாளாமி! யா... யங்!"

சப்புச் சுல்தான் ஆவேசமாக எழுந்து, கிடைத்த சிறு அவகாசத்தில் சிங்களத்தில் கடகடவென்று சொன்னான். உடனே பொலிஸ்காரன் வாயிலடிக்க 'ஊய்க் கென்று வாய் பொத்தித் துவண்டான்.

'பெரியம்மா! நீங்க சொல்லுங்க! என்ன நடந்தது?"

'நீ ஆருவாப்பா? சொல்றன் கேளு சுல்தான் தம்பியில ஒரு குத்தமும் ல்ல.. வேந்தான்... எம்பிட்ட சைன் வாங்கித்தாறண்டு செல்லிட்டு சுல்தானோட போய் அவன ஏமாத்திப் போட்டு ஓடிட்டான். வாப்பா! என்ட மகள் வெளிநாடு போற வேனுக்குப் புடிக்கல்ல.."

'மாமி! பேக்கத கதையாத!"

'என்னடா பேக்கத? ஆருடா கதைக்கிற? நியாண்டா தொரோகி! எம்பிர கடிதம் ல்லாம யாப்போட்டுல ஐயாயிரம் ரூவா லெஞ்சம் குடுத்து... என்ட மகள் போன...."

'சரி! அப்ப உங்கட மகள் போய்விட்டாள்? பிரச்சினை இல்லை..?"

ஒரு பெரச்சினையும் ல்ல வாப்பா! கொறுக்காதான் 'கசிலி" பன்றான்"

'கே.... கேட்டீங்களா... ஏன் எனக்கி அடிக்கறீங்க? ம்மோவ்!"

மாமி... வெளங்காமணிமாலையா கதையாத! யாஸினுட்டக் கேளுந்த சப்புட அறாமி செஞ்ச வேலய...."

'பச்சப் பொய்!"

'செல்லண்டா சில்லித் தலையா...!"

'சரி சரி, முத்து முகம்மது! இப்ப என்ன செய்யப் போகிறாய்?"

முத்துமுகம்மது தீர்மானமேதுமின்றி திமிர்த்துப் போயிருந்தான். எல்லாம் கைமீறிப் போய்விட்டது. மைமுனாவே கைமீறிப் பறந்து விட்டாள்.... இனி என்ன..... எதுவுமில்லை... இனி.... இருந்தென்ன... இறந்தென்ன....

இரண்டு பொலிஸ்காரனும் ஒதுங்கிப் போய் பதட்டமின்றி சிகரெட் புகைத்தனர். சப்புச் சுல்தான் தாடையைச் சரிப்படுத்தி... துடைத்துக் கொண்டிருந்தான். பார்வையில் வன்மம் அகோரமாய் தெரிந்தது.

'பெரியம்மா எப்ப ஊருக்குப் போற?"

'ண்டைக்கே போறன் வாப்பா!"

'சரி... முத்துமுகம்மது... என்ன செய்யப் போறாய்?"

இனி...? ஊருக்கு... போய்... மைமுனா இல்லாத பள்ளிமுனை....?

'சேர், நான் தலைவ்ர்ர வீட்ட வாறன்!"

'சரி வா!"

முத்துமுகம்மது சப்புச் சுல்தானின் அறைக்குள் புகுந்து தனது உடமைகளை எடுத்தான். வெளியே வந்தான். சுல்தான் முரசில் இரத்தத்துடன் - புறுபுறுவென்று இராவிக் கொண்டிருந்தான். 'கொறுக்காட அறாமி! ஊருக்கு வாநீ! பாக்கன்... உண்ட கணக்குப் பாக்காட்டி நான் வட்டுட மகனில்ல...."

யூக்கே லொட்ஜ் வாசலில் சனம் கும்மென்று குழுமி நிற்க, முத்துமுகம்மதும் சகாக்களும் ஜீப்பில் ஏறினர். ஒரே சீறலில் பறந்தது ஜீப்....

'தலைவரே... இனி மைமுனா இல்லை.... எனக்கு எல்லாம் நீங்கதான்... ம்மா... வாப்பா... எல்லாம் தலவருதான்...."

இனி நான் ஒங்குட அடும! அடும! அல்லாவே... காட்டவ்லியா அப்பாவே.... எங்க இருந்தாலும் என்ட மைம்னாவ காப்பாத்துங்க...."

'நினைவுகள் கனக்க... சோர்ந்திருந்த முத்துமுகம்மது ஜீப்பின் வேகத்திலேயே... கண் அயர்ந்து போனான்."

'இறங்கு! இடம் வந்துட்டு"

தலைவரின் வீடு! முத்துமுகம்மது பரபரப்புடன் விழித்து ஜீப்பிலிருந்து குதித்தான். அதிசயமாக -


தலைவர் வீட்டினுள் ஓய்வாக உலாவிக் கொண்டிருந்தார். முத்துமுகம்மது... ஓடிச் சென்று அவரது காலடியில் விழுந்தான்.

'.... நா.... அடும...?" கேவி அழுதான்! தலைவர் முத்துமுகம்மதை எழுப்பி அவனை நேருக்கு நேராகப் பார்த்தார் பின் திடீரென,

'முத்து முகம்மது! சரி, போய் குளித்து உடை மாற்றிக் கொண்டு வா!" உறுதியான கட்டளை பிறந்தது.

(இன்னும் வரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அழியாக் கவிதையான அன்பு முகையதீன்...


கவிச்சுடர் அன்பு முகையதீனின் திடீர் மறைவு அறிவுத்துறைக்குமட்டுமல்ல, கவிதை உலகிற்கும் ஏற்பட்ட பாரியதோர் இழப்பாகும். சிறுவயதிலேயே கவிதை புனையும், ஆற்றலிலும், பேச்சாற்றலிலும் சிறந்து விளங்கிய கவிஞர் தன் வாழ் நாளில் தமிழ் மொழித் துறைக்கு ஆற்றிய பணி அளப்பெரியதாகும். குறிப்பாக இவர் கல்முனை ஸாஹிறாவில் கற்பித்த காலங்களில் இவர் மூலம் மொழிப்பயன் அடைந்தோர் ஏராளமாகும். ஈழத்துக் கவிஞர்களில் முன்னணிக்கவிஞராக விளங்கிய அவர் பெற்ற கவிச்சுடர், கவித்தாரகை போன்ற விருதுகள் குறிப்பிடத்தக்கவையாகும்.

09க்கும் மேற்பட்ட கவிதைத் தொகுப்புக்களை வெளியிட்ட கவிஞரின் பிந்திய எழுத்துக்கள் ஆத்மீகத்தை தொடர்பு படுத்துபவனவாக அமைந்தன. இவர் மூலம் இன்னும் பல கவிதைகளையும், நூல்களையும் எதிர்பார்த்த இலக்கிய ஆர்வலர்கட்கு இவரது மறைவு தாங்கமுடியாததாகும். தனது ஓய்வுக்காலங்களிலும் சமூகசேவை, மார்க்க அனுஷ்டானங்கள் போன்ற துறைகளில் பொதுமக்களோடு பின்னிப்பிணைந்து காணப்பட்ட கவிஞரின் பேச்சாற்றலும், மதிநுட்பமும் அர்த்த புஷ்டியானதாகும். கிழக்கிலங்கையில் பல இளம் கவிஞர்களின் வளர்ச்சிக்கு முன்னின்று பாடுபட்ட கவிஞரின் நபி வாழ்வில் நடந்த சம்பவங்களின் கவிவடிவங்கள் பாடப்புத்தகத்திலும் இடம்பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

கவிஞரின் மறுமை வாழ்விற்காக பிரார்த்தனை புரியும் எமது நிலையம் அவரது இழப்பினால் வேதனை அடையும் உறவினர்கட்கும், இலக்கிய ஆர்வலர்கட்கும் எமது அமைப்பு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றது.

முபிஸால் அபு,பக்கர்
கல்முனை இக்பால் சன சமூக நிலையம்.

# அன்று அவர்கள் இன்று நீங்கள்



உங்களின் அனுபவங்களால்
எங்களை ஆண்டுவிடவும்
அடிமைப்படுத்திக் கொள்ளவும்
ஆர்வமாய் இருப்பதை
அறிந்துதானிருக்கிறோம்.

அவர்கள் உங்களுக்கு அடித்தபோதெல்லாம்
உங்களுடனிருந்த காரணங்களுக்காக
எங்களுக்கும் அடித்தார்கள்.

தமிழைப் பேசியதற்காக
எங்களுக்கும் உங்களைப் போல்
தண்டனைகள்
ஏராளமாகக் கிடைத்தே இருந்தன.

உங்களுக்கருகில்
ஒன்றிணைந்து வாழ்ந்ததற்காக
எங்களது இல்லங்களுக்கும்
எரியூட்டப்பட்டது.

உங்களின் காணிகளிலிருந்து
நீங்கள் துரத்தப்பட்ட போது
எங்கள் காணிகளிலிருந்து
நாங்களும்
விரட்டியடிக்கப்பட்டோம்.

உங்களின் கோயில்களை
கொள்ளையிட்டவர்களே!
எங்களின்
பள்ளிகளையும் பழுதாக்கினர்
உங்களின் குருக்களைப் போல்தான்
எங்களின்
மார்க்கப் போதகர்களும் மரியாதை
துறைக்கப்பட்டனர்.

சுயநிர்ணயம் கேட்டு நீங்கள்
சுடுகலன்கள் ஏந்தியபோது
உங்களைச் சுட்டதைப் போல்தான்
உடனிருந்த எங்களையும் சுட்டார்கள்!
நீங்கள் ஓடி ஒழிவதற்கு
எங்களின் இல்லங்களும் இதயங்களும் துணை
நின்றன.
எனில்...
ஏன் எங்களை
சுட்டும் வெட்டியும்
தூரத்துரத்தியும் வருகிறீர்கள்?

-யூ .எல்.எம்.நஜீப். ஓட்டமாவடி

# ஆதி நபி ஆதம் [அலை] அவர்கள் தோற்றம் இப்பூவுலகில் இல்லை!

## ஆரம்ப மனிதப் பெருக்கம் கண்டது லெமூரியாக் கண்டமல்ல!! 01

எம்.எம்.எம். நூறுல்ஹக்

> "கோட்பாடுகள்" என்பவை நிரூபிக்கப் பட்ட விஞ்ஞான உண்மைகள் அல்ல. இவை வெறும் அனுமானங்களே! காலப்போக்கில் இவை உண்மை என நிரூபிக்கப்பட்டாலும் படலாம். அல்லது நிரூபிக்கப்படாமல் பொய் என்று புறக்கணிக்கப்பட்டாலும் படலாம்.

மனிதத்தோற்றம் பற்றி முஸ்லிம் அல்லாத அறிஞர்களிடம் பல்வேறு கருத்துக்கள் இருப்புக்கொள்வது இயல்பான ஒன்றாகும். அது பிரச்சினையானதல்ல. ஆனால் அக்கருத்துக்களையே இஸ்லாமும், முஸ்லிம்களும் கொண்டிருக்கின்றனர் என்பது போல் எடுத்துக்காட்ட முனைவதுதான் ஒருவகை 'கருத்துத் திணிப்பாக" கருத வேண்டியேற் படுகிறது.

கருத்துச் சுதந்திரம் என்ற போர்வையினை அணிந்து கொண்டாலும் கூட, அதனையும் மீறி இதுவொரு கருத்துத்திணிப்பு. நம்பிக்கையில் களங்கத்தை ஏற்படுத்தும் கைங்கரியம் என்றே கொள்ளப்படும். அதே வேளை இதுவொரு விவேகத்தின் வழிமுறையாகவோ, சரியான அறிவியல் நேர்வழியாகவோ கொள்ளப்படமாட்டாது.

மாறாக அடுத்தவர் விடயத்தில் வீணான தலையீடு, குறுக்கீடு என்று அர்த்தப்படும் தவிர இஸ்லாமிய கருத்தாகிவிடாது. சிலவேளை இஸ்லாமிய அறிவு குறைந்தவர்களுக்கு மத்தியில் இக்கருத்துத்திணிப்பு வேரூன்றலாம். அதற்காகவேண்டி இது வெற்றியின் பக்கம் கொண்ட நடவடிக்கை எனக்கூறவியலாது.

இருப்பினும், உண்மைகள் ஒருபோதும் அழிவதில்லை. சில வேளை போலிகளின் வேலியின் பின்னால் மறைந்து கிடக்கலாம். அப்படி இப்படியான பிழையான கருத்துக்கள் சிலவேளை சிலரை பலிகொள்ளலாம். இத்தகையோர்களுக்கும், உண்மைகளை உண்மையாக உணர வேண்டும் என்கின்ற நல்லெண்ணம் கொண்டவர்களுக்கும் தெளிவான வரலாறுகள் கூறப்பட வேண்டும் என்பதற்காகவும், மனிதத் தோற்றம்பற்றிய இஸ்லாமியக் கண்ணோட்டம் வெளிப்படுத்தப் படவேண்டியது அவசியமாகின்றது.

அந்தவகையில் எழுதப்பட்ட கட்டுரைதான் இது. ஆதலால் எதிர்க்கருத்துக்களையும் சுட்டிக் காட்டி, அது பற்றி இஸ்லாம் கொண்டுள்ள நிலைப்பாடுகளும் விளக்கப்படுகின்றன. முஸ்லிம் அல்லாதவர்கள் கருத்துச் சுதந்திரம், தேடல், ஆய்வு என்பனபோன்ற போர்வைக்குள் நின்றுகொண்டு இஸ்லாத்திற்கு மாற்றமான கருத்துக்களை முன்வைத்துள்ளனர் என்பதற்குப் பின்வரும் கூற்றுக்கள் போதுமான சான்றாகும்.

முதல் மனிதன் ஆதம் (அலை) அவர்கள் தோன்றியது 'லெமூரியாக் கண்டம் எனும் குமரிக்கண்டத்தில்தான் என்பது ஆய்வாளர்களின் கருத்து."
(நன்றி : தினக்குரல் 16 -04 -1999 திரு. பூ.ம. செல்லத்துரை)

'மனிதனின் பிறப்புத்தோற்றம் எல்லாமே தென்னிந்தியாவில்தான்" சேர்யோன் எட்பான்ஸ்.
(நன்றி : நாம் தமிழர் - பொ. சங்கரப்பிள்ளை.)

'இலங்கைதான் மனுவின் தொட்டில் பிறந்தகம்" என அமெரிக்கா அறிஞர் இங்கர்சால் கூறுகிறார், அதையே இஸ்லாம்... ஏற்கின்றன"
(நன்றி : தினக்குரல் 06-06-1998)

'மக்களின் தொட்டில் - அதாவது மனிதன் முதன்முதலில் தோன்றிய இடம் லெமூரியாவாகும்"
(நன்றி : நாம் தமிழர் - பொ. சங்கரப்பிள்ளை)

மேற்படி கருத்துக்களின் பிரகாரம் முதல் மனிதன் ஆதம் (அலை)அவர்கள் தோன்றியது, மனித உற்பத்தியின் ஆரம்பமும் இலங்கைதான் என்ற கருத்தை வெளிப்படுத்துகின்றார்கள் எனக் கொள்ள முடியும். இக்கருத்தை இஸ்லாம் ஒப்புக் கொள்ளவில்லை என்பதில் கருத்து வேற்றுமைகள் இல்லை.

இதனைத் தெளிவாக உணர்ந்து கொள்வதாயின் நபி ஆதம் (அலை) அவர்களின் தோற்றம், அவர்கள் ஆரம்பத்தில் வாழ்ந்த இடம், இப்பூவுலகில் அவர்களுக்கு ஏற்பட்ட தொடர்பு, மனித உற்பத்தியின் அடிப்படைகள், மனிதப்பெருக்கம் போன்றவற்றை இஸ்லாம் எவ்வாறு கூறுகின்றது என்பதை அறிவதன் மூலமே தெளிவடையமுடியும்.

### மனிதத் தோற்றமும் அதன் காலமும்

மனிதத்தோற்றம் பற்றி நம்மிடையே உள்ள ஒவ்வொரு சமயங்களும், கோட்பாடுகளும் வெவ்வேறான கருத்துக்களைக் கொண்டிருக்கின்றன. பண்டைக்கிரேக்க தத்துவங்களும் பழைய விஞ்ஞானிகளும் மனிதனின் தோற்றம் பற்றி பிறிதொரு கருத்தைக் கொண்டுள்ளனர்.

அதே நேரம், குரங்கிலிருந்து மனிதன் தோன்றினான் என்பன போன்ற பரிணாமவாதக் கோட்பாடுடையோர்களும் உள்ளனர். இத்தகைய கருத்துக்களுக்கு முற்றிலும் மாற்றமான கருத்தையே இஸ்லாம் கொண்டிருக்கின்றது.

இப்பிரபஞ்சம் தோன்றியவுடன் மனிதவர்க்கமும் உதயமாகிவிட்டது எனக்கூற இயலாது. மனிதன் என்று சொல்லும் வகையில் இல்லாமலிருந்த ஒருகாலம் மனிதனுக்கும் இருந்தது. இதனை அருள்மறை பின்வருமாறு எடுத்துக்காட்டுகின்றது.

'மனிதனின் மீது காலத்திலிருந்து ஒரு நேரம் திட்டமாக வந்தது: (அதில் இன்னதென்று குறிப்பிட்டு எடுத்து) சொல்லக்கூடிய எப்பொருளாகவும் அவ(ன் -மனித)ன் இருக்கவில்லை". (குர்ஆன் 76:1)

வேதம் கொடுக்கப்பட்ட யூத, கிறிஸ்தவர்களும், மனித உற்பத்திக்கு ஆரம்பகாலம் ஒன்று உண்டென்று ஏற்றிருக்கின்றனர். மனித உற்பத்தி ஏற்பட்டு இற்றைக்கு ஏறக்குறைய ஏழாயிரம் ஆண்டுகள் ஆகின்றன என்று அவர்கள் கூறுகின்றனர்.

இந்து மதத்தைச் சார்ந்தவர்களும், பாரசீகர்களும், மனித உற்பத்தி ஏற்பட்டு இலட்சக்கணக்கான ஆண்டுகளாகின்றன என்று கூறுகின்றனர்."
(நன்றி : தப்ஸீர் அன்வாறுல் குர்ஆன் தபாரக் ஜுஸ்உ)

'மனிதன் குரங்கிலிருந்து தோன்றினான்" என்ற பரிணாம வளர்சசிக்கொள்கை இன்னமும் ஒரு 'கோட்பாடு" என்ற அளவிலேயே இருந்து வருகின்றது. அதாவது இது ஒரு விசயத்தை விளக்குவதற்காக கற்பனையாகச் செய்து கொண்ட கணிப்பு அல்லது அனுமானமேயன்றி, காலத்தின் சோதனையைக் கடந்துவந்த உண்மையல்ல.

விஞ்ஞானிகள் தாலாட்டும் பரிணாமக்கொள்கையில் உண்மையிருப்பதாக இருந்தால், மனிதக் குரங்கையும் ஆபிரிக்காக் கண்டத்தில் வாழும் வாலில்லாக் குரங்குகளையும் பரிணாம வளர்ச்சிப் பாதையைப் பின்பற்றி மனிதர்களாக மாறுவதிலிருந்து தடுத்தது எது?

இந்த மாற்றத்தை அடைவதற்குப் போதிய காலங்கள் அவை வாழ்ந்தேயிருக்கின்றன. பல லட்சம் ஆண்டுகள் அவை வாழ்ந்தாகி விட்டன. எனினும், அவை ஏன்அந்த மாற்றத்தை அடையவில்லை ?

'கோட்பாடுகள்" என்பவை நிரூபிக்கப் பட்ட விஞ்ஞான உண்மைகள் அல்ல. இவை வெறும் அனுமானங்களே! காலப்போக்கில் இவை உண்மை என நிரூபிக்கப்பட்டாலும் படலாம். அல்லது நிரூபிக்கப்படாமல் பொய் என்று புறக்கணிக்கப்பட்டாலும் படலாம். இதனையே கோட்பாடுகள் எனச் சொல்வார்கள்.
(நன்றி : மனிதன் எப்படித் தோன்றினான் ? பி. ஆயிஷா லெமு)

மனித உற்பத்தி பரிணாம வளர்ச்சியின் அடிப்படையில் தோற்றம் பெறுவதற்கு அறவே சாத்தியமில்லை. ஏனெனில் குரங்கிலிருந்து மனிதன் தோன்றினான் என்றால் அந்த மனித இனமும் பலகோடி ஆண்டுகள் வாழ்ந்தாகிவிட்ட இந்நிலையில் மனிதனின் பரிணாமவளர்ச்சி என்ற ஒன்று ஏற்படாமலிருப்பதிலிருந்து இது மிகவும் தவறான கருத்தாகும் என்பது உறுதியாகின்றது.

பரிணாமவாதக் கோட்பாட்டினர் உட்பட அனைத்துத் தரப்பினர்களும் 'மனித இனத்திற்கு தோற்றக்காலம் என்று ஒன்று உண்டு" என்பதை ஏற்றுக் கொள்வதை நாம் அவதானிக்கலாம்.

மனித உற்பத்தியானது நபி ஆதம் (அலை) அவர்களிலிருந்துதான் ஆரம்பமாகின்றதென்று முஸ்லிம்களிடம் உறுதியாக முடிவாகியிருப்பதற்கு கீழ்க்காணும் கூற்றுக்கள், இஸ்லாமிய மூலாதாரங்களின் முன்வைப்புக்கள் மிகவும் வலுவான ஆதாரங்களாகும்.

### மனிதனின் பூர்வீகம

'ஒரே ஆத்மாவிலிருந்து உங்களை அ(வ்விறை)வன் படைத்தான். அதிலிருந்து அதனுடைய ஜோடியைப் படைத்து, அவ் இருவரில் இருந்து ஏராளமான ஆண்களையும், பெண்களையும் பரவச்செய்தான்". (குர்ஆன் 4:1)

"ஒரே ஆத்மாவிலிருந்து உங்களை அ (வ்விறை) வன் படைத்தான்." (குர்ஆன் 6:99)

'அ(வ்விறை)வன் (தான்) பூமியிலிருந்து உங்களை உண்டாக்கி, அதிலேயே உங்களை வசிக்கச் செய்தான்". (குர்ஆன் 11:61)


'(தட்டினால்) ஓசைதரக்கூடிய, மாற்றத்துக்குரிய கறுப்புக் களிமண்ணினால் நிச்சயமாக நாம் மனிதனைப்படைத்தோம்" (குர்ஆன் 15:2)

'மனிதனைக் களிமண்ணின் மூலத்திலிருந்து திட்டமாக நாம் படைத்தோம்" (குர்ஆன் 23:12)

'மனிதனின் படைப்பை களிமண்ணிலிருந்தே துவங்கினான்" (குர்ஆன் 32:7)

(அடுத்த இதழில் தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




முஸ்லிம் குரல்
Muslim Kural صوت المسلم முஸ்லிம் குரல்
181/1, Muttiyankadu Road, (White Park) Colombo - 2.
Tel: 011-4734507, Fax: 011-4734508.

## முஸ்லிம் குரல் நிதியம்!

இலங்கை வாழ் முஸ்லிம் மக்கள் அனைவருக்கும் முஸ்லிம் குரலின் "ஈதுல் பித்ர்" வாழ்த்துக்கள் - பசித்திருந்து நோன்பு நோற்று, விழித்திருந்து அமல்கள் செய்து மிக்க ஆனந்தத்துடன் நாமனைவரும் நோன்புப் பெருநாளைக் கொண்டாடுகிறோம்! மனிதனின் பசியை அறிந்த நாம் - சமூகத்தின் பசியை, அதன் ஏக்கத்தை எப்போது தீர்க்கப்போகின்றோம்?

இலங்கை முஸ்லிம்களுக்கான சுதந்திர ஊடகங்களை உருவாக்கும் பணி குறித்து நமது சமூக அரங்கில் நாம் பல்வேறு தடவைகள் பேசிவந்துள்ளோம்! எமக்கான பத்திரிகைகள், வானொலி, தொலைக்காட்சி அலைவரிசைகள், இணையத்தளங்களை நாம் எப்போது ஸ்தாபித்து - நிகழ்காலத்தின் சவால்களை எதிர்கொள்ளப்போகிறோம் என்கிற கேள்விகள் சமூக அக்கறையுள்ள சக்திகளை குடைந்து கொண்டிருக்கிறன.

இந்தப்பணியை தனிப்பட்ட ஒருநிறுவனம், அல்லது ஓரிரு தனிமனிதர்களால் செய்ய முடியாது! இதற்கு பெருமளவான நிதி மூலதனம் தேவைப்படுகிறது - வாணிப நோக்கிலன்றி, சேவை அடிப்படையிலேயே நமது ஊடகங்கள் ஆரம்பத்தில் தொழிற்பட வேண்டி உள்ளது. இப்பணியை தொடங்குவதற்கும், தொடர்ந்து முன்னெடுப்பதற்கும் நமது மக்கள் அனைவரினதும் முழு ஒத்துழைப்பும் தேவை!

அந்த வகையில் "முஸ்லிம் குரல்" பத்திரிகையை தொடர்ச்சியாக வெளிக் கொண்டு வருவதில் நாம் பலத்த நிதி நெருக்கடியை எதிர் கொள்கிறோம்! பத்திரிகை தொடர்ச்சியாக வெளிவருவதற்கு "நிதியின்மை" பெரும் சவாலாக உள்ளது. ஆனால் நமது சமூக அரங்கு இந்த விடயத்தில் பாராமுகமாகவே செயற்படுகிறது. இந்நிலையை நாமனைவரும் மாற்ற வேண்டும்.

முதற்கட்டமாக நமக்கான பத்திரிகை உருவாக்கத்திற்கு உங்களால் முடிந்தளவு பங்களிப்பைச் செய்யுமாறு கோருகிறோம்! "Muslim kural Publication" என்ற பெயருக்கு உங்கள் உதவிகளை அனுப்பி நமக்கான குரலை வலுப்படுத்துமாறு "ஈதுல் பித்ர்" நன்நாளில் வேண்டிக் கொள்கிறோம்! வஸ்ஸலாம்.

அன்புடன்
ஆசிரியர் குழு.

## ஈராக்கில் அதிகரித்து வரும் எதிர்ப்பலைகளை சமாளிப்பது பற்றி அமெரிக்கா இஸ்ரேலிடம் ஆலோசனை கேட்கத் தொடங்கியுள்ளது.

இஸ்ரேல் இராணுவம் பலஸ்தீனர்களுக்கு எதிராக மிகவும் கொடிய மிலேச்சத்தனமான தாக்குதல்களை மேற்கொண்டு வருகிறது. இவற்றை இஸ்ரேல் உட்படப்பல சர்வதேச நாடுகளின் மனித உரிமைகள் குழுக்கள் "கூட்டான தண்டனைகள்" என வர்ணித்துள்ளன. இந்த அடக்கு முறைகளில் பின்வருவன அடங்கியுள்ளன. வதிவிடப் பகுதிகளுக்கண்மையில் எல்லையின்றிக் குண்டு வீசல், வீடுகளை உடைத்தல், தனியார் சொத்துக்களை அழித்தல், பொதுக் கட்டிடங்களை உடைத்தல், பழமரங்களையும், திராட்சைக் கொடிகளையும் அகற்றுதல், பிரதான பாதைகளை மூடுதல், பல்லாயிரக் கணக்கான சாதாரண குடிமக்கள் மீது மூச்சுத்திணறக்கூடிய வகையிலான, எல்லையற்ற காலக்கெடுவிற்கு ஊரடங்குச் சட்டத்தை விதித்தல், வீதித் தடைகளையும் சோதனைச் சாவடிகளையும் ஏற்படுத்துதல், நகரங்களையும், கிராமங்களையும் ஒன்றிலிருந்து ஒன்றைப் பிரித்து வேறாக்குதல்.

குற்றஞ்சாட்டப்பட்டாலும், வழக்குத் தொடரப்பட்டாலும் 10,000க்கும் மேற்பட்ட பலஸ்தீனர்களை இஸ்ரேல், அசுத்தமான தடுப்பு முகாம்களில் தடுத்து வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இதனால் பயங்கரவாதிகளுடன் தொடர்பற்ற சதாரண பலஸ்தீனியர்கள் மீது அளவு கடந்த வேதனையினை ஏற்படுத்தியுள்ளது. உண்மையில், பல சந்தர்ப்பங்களில் பலஸ்தீனக் கர்ப்பிணிகள் வைத்தியசாலைக்குச் செல்லும் வழியில் இஸ்ரேலிய துருப்புக்களினால் சுடப்பட்டும் படுகொலை செய்யப்பட்டுமுள்ளனர்.

மேலும் பல சந்தர்ப்பங்களில் பிரசவ வேதனையால் அல்லலுறும் பெண்கள், இஸ்ரேலிய வீதித் தடைகளைத் தாண்டிச் செல்ல இடமளிக்கப்படாமல், அவ்விடங்களிலேயே பிரசவிக்குமாறு பலவந்தப்படுத்தப்பட்டுள்ளனர்.

சுருங்கக்கூறின் இவ்வீதித்தடைகள் பலஸ்தீனிய நகரங்களையும், கிராமங்களையும், சிறு தனிப்பட்ட குக் கிராமங்களையும் பெரும் திறந்தவெளி முகாம்களாக்கியுள்ளன.

இந்நடவடிக்கைகள், சாதாரண பலஸ்தீனியர்களுக்கு இஸ்ரேல் தொடர்பாக மேலும் வெறுப்பை அதிகரிக்கச் செய்வதாகவே அமைகின்றன. இதனால் மேலும் மேலும் பல இளம் பலஸ்தீனியர்கள் தற்கொலைக் குண்டுதாரிகளுடன் இணைய வழிவகை செய்கிறது.

எல்லாப் பலஸ்தீனர்களையும் தற்கொலைக் குண்டுதாரிகளாக ஆக்குவதில் இஸ்ரேல் வெற்றி கண்டுள்ளது எனச் சில மாதங்களுக்கு முன்னர் ஒரு பலஸ்தீனிய எழுத்தாளர் எழுதியிருக்கிறார். இஸ்ரேலிய இலக்குகளுக்கெதிராகப் பலஸ்தீனத் தற்கொலைத் தாக்குதல்களின் பின்னணியின் முக்கியமான காரணம், அளவுக்கு மீறிய சமய ஆர்வமல்ல என்றும், இஸ்ரேலின் அடக்குமுறைகளே என்றும் அண்மையில் இஸ்ரேலிய இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வறிக்கையொன்று தெரிவிக்கிறது.

அமெரிக்காவும் ஈராக்கில் இத்தகைய அடக்குமுறைகளைக் கையாண்டால், சாதாரண ஈராக்கியர்கள் இவ்வாறான எதிர்ப்பணிகளில் சேருவதைத் தடுக்க முடியாது. இதனால் தொடர்ச்சியான அடக்குமுறை, இழிவாக்கப்படுதல் என்பனவற்றுடன் வாழும் வாழ்க்கையினை விட அமெரிக்கர்களைக் கொன்று வாழ்வது சிறந்தது என ஈராக்கியர்கள் கருதத் தொடங்கிவிடுவார்கள். பலஸ்தீனர்கள் (ஏன் இஸ்ரேலியர்கள்கூட) இதனை நன்கு தெரிந்து வைத்துள்ளனர்.

இறுதியாக பலஸ்தீனிய மண்ணில் இஸ்ரேல் ஆக்கிரமித்துள்ளமை, ஈராக்கில் அமெரிக்கர்கள் நிலை கொண்டுள்ளமை இரண்டிற்குமிடையில் உள்ள வேறுபாட்டை அறிய வேண்டியது அவசியம். இஸ்ரேல் பலஸ்தீனர்களை அடக்கி ஒடுக்குவதன் பிரதான காரணம் தனது நிரந்தரமான மேலாதிக்கத்தைப் பலஸ்தீனர்கள் மீது திணிப்பதாகும். மறுவார்த்தைகளிற் கூறப்போனால் இது பலஸ்தீனர்களின் உயிர்கள், உணர்வுகள், நலன்கள் மீத கடினமான இரக்கமற்ற கவனயீனமான போக்கையே காட்டுகிறது.

மறுபக்கத்தில் ஈராக்கில் அமெரிக்காவின் நோக்கம் போலியாகவேனும் சரி, அந்நாட்டு மக்களுக்குத் தமது சுய எதிர்காலத்தைத் தீர்மானிப்பதற்கான ஈராக்கைக் கட்டியெழுப்புவதற்கு முடியுமான அளவு மக்களை ஈர்த்தெழுப்புவதாகும். ஆகவே ஈராக்கிய மக்களுக்கெதிரான பெருமளவிலான கொச்சைப்படுத்தல்கள், கூட்டான தண்டனைகள் போன்ற இஸ்ரேலிய பாணியிலான அடக்குமுறைகளைக் கையாள்வதனால் துர்விளைவுகளும், விபரீத சம்பவங்களுமே ஏற்படும்.

**காலித் அமெய்ரா**
பலஸ்தீன டைம்ஸ் ஒக். 2003

முஸ்லிம் குரலின் வளர்ச்சிக்கு பக்க பலமாக இருங்கள்

நமக்கான பத்திரிகைகளின் அவசியம் குறித்து நீங்கள் அறிவீர்கள். மக்களாகிய உங்களின் ஆதரவுடனேயே நமது பத்திரிகையை தொடர்ச்சியாக வெளிக்கொணர முடியும்! சந்தாதாரர்களாக சேருங்கள்! சகோதர சகோதரிகளுக்கும் அறிமுகப்படுத்துங்கள்! பத்திரிகையை வாங்கி விநியோகியுங்கள்!

**சந்தா விபரம்!**

3 மாதங்கள் - (12 இதழ்கள்) 250/-
6 மாதங்கள் - (24 இதழ்கள்) - 500/-
1 வருடம் - (48 இதழ்கள்) - 1000/-

(தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும்)

காசோலையாகவோ, காசுக் கட்டளையாகவோ எமக்கு அனுப்பி வைக்கலாம். பத்திரிகையை விநியோகிக்கும் எமது ஊர் பிரதிநிதிகளிடமும் நேரடியாக கையளிக்கலாம். காசுக்கட்டளையாக அனுப்புவதாக இருந்தால் Muslim Kural Publiction Slave Island Post office எனக் குறிப்பிடவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org